


3702
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தொடரும் தலைமுறைகள்"

ACC. NO. 3702
Class. NO. க
2004/05/18

## திருமலை. வீ. என். சந்திரகாந்தியின்
## தினமுரசு சிறுகதைகள்

வெளியீடு

தி / ஜெயகாந்தி கலை கலாச்சார
விளையாட்டு மேம்பாட்டு கழகம்
572/A, ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| வெளியீடு | - | 02 |
| நூல் | - | தொடரும் தலைமுறைகள் |
| இலக்கிய வகை | - | சிறுகதை |
| ஆசிரியர் | - | திருமலை. வீ. என். சந்திரகாந்தி,<br>572/A, ஏகாம்பரம் வீதி,<br>திருக்கோணமலை. |
| தொலைபேசி | - | 026-2224706 |
| முதற்பதிப்பு | - | 29-10-2003 |
| பக்கங்கள் | - | 104 |
| பிரதிகள் | - | 1000 |
| பதிப்புரிமை | - | திருமதி.செல்வச்சோதி சந்திரகாந்தி,<br>572/A, ஏகாம்பரம் வீதி,<br>திருக்கோணமலை. |
| வெளியிடுவோர் | - | தி / ஜெயகாந்தி கலை, கலாச்சார விளையாட்டு மேம்பாட்டு கழகம்,<br>திருக்கோணமலை. |
| அச்சுப் பதிப்பு | - | ரெயின்போ மினிலாப்,<br>113, வித்தியாலயம் வீதி,<br>திருக்கோணமலை,<br>026-2223078, 0777-303938 |
| அட்டைப்பட ஓவியம் | - | செல்வன். சிவகுருநாதன் தபோதனன்<br>அரச விடுதி, லவ்லேன்,<br>திருக்கோணமலை. |
| **விலை** | **-** | **ரூபா. 100.00** |
| **ISBN** | **-** | **955-8925-00-4** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.................


i) சமர்ப்பணம்.....................

ii) அணிந்துரை - அ. முகம்மது அனஸ் (தி / இளையவன்)

iii) சிறப்புரை - செ.ஜெயபாலசிங்கம் (செயலாளர்)
(ஜெயகாந்தி கலை கலாச்சார விளையாட்டு மேம்பாட்டு கழகம்)

iv) முகவுரை - து.பாஸ்கரன் (ஆசிரியர் - தினமுரசு)

iv) எனதுரை - ஆசிரியர்


## தினமுரசு சிறுகதைகள்



| | பிரசுரமான திகதி | | பக்க எண் |
|---|---|---|---|
| 01) எது உண்மை? | - நவ.15-21, 1998 | - | **15** |
| 02) காகித ஓடம் | - ஏப்.04-10, 1999 | - | **18** |
| 03) பிறந்தநாள் | - மே.30-ஜுன்5, 1999 | - | **21** |
| 04) வாடகை வீடு | - ஆக.15-21, 1999 | - | **24** |
| 05) உறவு | - ஒக்.31-நவ.6, 1999 | - | **27** |
| 06) மகப்பேறு | - மார்ச். 12-18, 2000 | - | **31** |
| 07) தொடரும் தலைமுறைகள் | - ஏப்.9-15, 2000 | - | **35** |
| 08) அன்புள்ள காதலனே | - ஜுலை.9-15, 2000 | - | **39** |
| 09) வெளிநாட்டு வேலை | - ஆக.13-19, 2000 | - | **43** |
| 10) கட்டவா கலியாணம் | - ஜன.14-20, 2001 | - | **48** |
| 11) துடுப்பு இல்லாத ஓடங்கள் | - ஏப்.22-28, 2001 | - | **53** |
| 12) அத்தியாயங்கள் | - மார்ச்.04-10, 2001 | - | **58** |
| 13) இரசிக்கத் தெரிந்தவர்கள் | - நவ.25-டிச.01, 2001 | - | **63** |
| 14) சாயும் காதல் கோபுரங்கள் | - டிச.23-29, 2001 | - | **69** |
| 15) அவள் வித்தியாசமானவள் | - ஜுன்30, ஜுலை.06,2002 | - | **75** |
| 16) அது வேறு சமாச்சாரம் | - செப்.01-07, 2002 | - | **80** |
| 17) எங்கடை சனம் | - ஒக்.20-26, 2002 | - | **85** |
| 18) அரச விடுதி | - ஜன.19-25, 2003 | - | **91** |
| 19) வெளிநாட்டு குஞ்சுகள் | - மே.11-17, 2003 | - | **97** |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்..........

உடன் பிறப்பாகி...
உடன் வாழ விதியற்று...
உடன் எமை பிரிந்து சென்றுவிட்ட...

எனது பாசமிகு அக்கா...
திருமதி. சீதாலஷ்மி.க. அவர்கட்கு
இந்நூல்... படையல் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எனக்குள் நிலைத்து என்னையும் வளர்த்தெடுத்துள்ள எமது தமிழ் அன்னைக்கு முதல் வணக்கம்.

தமிழ் இலக்கியத் தொடர்பில் ஏற்பட்ட உறவினால் ஓரணிப்பட்ட, என்னால் நன்றாகவே முகம் அறிந்துகொள்ளப்பட்ட நண்பர். திரு.வீ.என். சந்திரகாந்தி அவர்களின் இத்தொகுப்பிற்கு அணிந்துரை வழங்குவதிலும் நான் பெருமை கொள்கின்றேன்.

நாளாந்த பறை (தினமுரசு) என்று சொல்லிக் கொண்டு வாரத்தையொரு நாளாகக் குறைத்துக் கொண்டு காலத்தின் வேகத்தைக் காட்டும் பத்திரிகையில் தொடராகப் பல படைப்புக்களை இவனுக்கு இணையாகவே வழங்கிட்ட பெருமையும் எனக்கிருப்பதால் - அப்பத்திரிகைப் பிரசுரங்களின் (சிறுகதைகள்) தொகுப்பிற்கு முன்னே முந்திக்கொண்டு உங்களை வரவேற்பதில் மகிழ்வு கொள்கின்றேன்.

கலாசார, கலை இலக்கிய பொருமைகளுள் நுழைந்து சிறு புகழ் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமற்ற காலத்திலே எமக்கு ஏற்பட்ட இன்னல்கள், இடையூறுகள், எச்சரிக்கைகள் அனைத்திற்கும் மத்தியில் மனத்துணிவுகளுடன் பயணப்பட்டு கண்முன்னே கண்டவைகளையும், ஆதாரமாகவே அறிந்து கொண்டவைகளையும் கருவாகக்கொண்டு ஏற்பட்ட நிகழ்கால அனுபவத் தொகுப்பாகவே, உங்களுக்குள் நடந்தவைகளை,..... நடந்தவைகளாக நீங்கள் அறிந்து கொண்டவைகளை,..... எங்கோ தொலை தூரத்தில் உங்களுக்கு தெரியாததை...... நாம் கற்ற மொழியில் சிறுகதையூடாக தெளிவுபடுத்தி எமது எதிர்கால வாழ்க்கையின் எச்சரிக்கையை நினைவூட்டும் சமகால இலக்கிய படைப்பாளிகள் நமது சமூகத்தின் எச்சரிக்கை விளக்குகள்.

இச்சிறுகதைத் தொகுப்பினூடாக தமிழ் இலக்கிய உலகின் எங்கோ தொலை தூரத்தில் மிகச் சிறியதாக மின்னிக் கொண்டிருக்கும் இவ்வெச்சரிக்கை சமிக்கை எமக்கானதுவே. 'இவன்' எம்முன்னே கொண்டு வரப்படவேண்டிய தேவைப்படக் கூடியவன். அவனூடாகவும் நமது சமூகத்தின் எதிர்கால தொடர் பயணத் தேவைக்கான பாதையின் அகலத்தையும், ஆழத்தையும், நீளத்தையும் அறிந்து கொண்டு நிதானத்துடன் பயணப்பட்டு நிலையான உறுதியான இலக்கை அடைந்து கொள்ளலாம். இவனுடன் கைகோர்த்துப் புறப்படும் பயணம் கரடு முரடானதாக இருந்தாலும் நாம் காலத்தை வெல்வதற்கும் சந்ததி வாழ் உறுதிக்கும் இது உரமாகக் கூட அமையலாம்.

''எச்சரிக்கைகளுடனான வாழ்வு எதிர்கால உறுதிக்கு வழி வகுக்கும்''

அ. முஹம்மது அனஸ்
(தி / இளையவன்)

இல. 36, தக்கியா வீதி,
திருக்கோணமலை.
2003.09.23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தை படித்து மனம் சோர்வடைந்த நிலையில் இருந்த எனக்கு திருமலை வீ.என். சந்திரகாந்தி அவர்களின் 'ஸ்திரீ இலட்சணம்' சிறுகதைத் தொகுப்பு சரியாக ஓராண்டு காலத்திற்கு முன்னர் கரம் கிட்டியது.

அந்நூலைப் படித்தபோது நான் ஓர் விசித்திரமான உணர்வினை எய்தினேன்.... மனித உணர்வுகளின் தோற்றப்பாடுகள்..... அவற்றின் வெளிப்பாடுகள்.... அதனால் புற உலகில் ஏற்படும் தாக்கங்கள்... இவையனைத்தையும் கருவாகக் கொண்ட இந்நூலின் ஒவ்வொரு ஆக்கமும் என்னை இம் மானுட வாழ்க்கையின் யதார்த்தத்திற்கே இட்டுச் சென்றது!

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி... சமுதாயத்தின் மேலான நோக்கு என்பதற்கெல்லாம் அப்பால் மனித உணர்வுகளை கீறி வெளிக்காட்டிய 'ஸ்திரீ இலட்சணம்' நூல் எனது மனதை ஆழத்தைத்தது.

ஒரு நிமிடம் நான் கடந்துவந்த பாதையை திரும்பிப் பார்க்கின்றேன்....

எம் மண்ணில் நாம் வாழ்ந்த வாழ்க்கை....

புலம் பெயர்ந்தமைக்கான காரணங்கள்...

அந்நிய நாட்டில் நாம் எதிர்கொள்ளும் சவால்கள்...

அவற்றை சமாளிக்க நாம் படும் துயர்கள்...

நிச்சயமாக ஸதிரீ இலட்சணம் நூல் எனக்கு ஒரு உண்மையை உணர்த்தியது....

எமது ஆன்மா இன்னமும் எம் நாட்டிலேயே இருக்கின்றது!

இந் நிலையில் மீண்டும் திருமலை வீ.என். சந்திரகாந்தி அவர்களின் இரண்டாவது தொகுப்பான 'தொடரும் தலைமுறைகள்' எனது கைக்கு எட்டியது...

ஒருவன் ஏன் தனது நாட்டை விட்டு புலம் பெயர்கின்றான்...? அவன் அங்கு சென்று படும் பாடுகள் என்ன....? இவற்றை முறையே 'தொடரும் தலைமுறைகள்', 'வெளிநாட்டு வேலை' ஆகிய இரு கதைகள் மூலம் கோடி காட்டிய ஆசிரியர்....

புலம் பெயர்ந்தவர்கள் தமது சொந்த மண்ணின் மக்களுக்காக ஆற்ற வேண்டியவைகள் என்ன என்பதை 'வெளிநாட்டு குஞ்சுகள்' இறுதிக் கதை மூலம் புட்டு வைத்துவிட்டார்!

நாம் எமது உறவுகளை விட்டு ஆயிரமாயிரம் 'கிலோமீற்றர்' தூரம் பிரிந்து வந்திருக்கலாம்....

ஆனால் நாம் இரண்டு சமூகங்களாக உருமாறிவிடக்கூடாது!

இந்த ஆதங்கத்தை 'வெளிநாட்டு குஞ்சுகள்' சுவாரசியமாக வெளிக்காட்டி உள்ளது!

புலம்பெயர்ந்தவர்களின் வழித்தோன்றல்கள் அந்நிய மொழி பேசுபவர்களாகவும்... அந்நாட்டு கலாசாரத்தை அச்சொட்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றுபவர்களாகவும் மாறிவிட்ட நிலையில்...

சொந்த மண்ணின் மைந்தர்கள்... தலைமுறைகள் இன்னமும் பெற்றோரை மதித்து அவர்களின் சொற்பணிந்து நடப்பது மயிர்க்கூச்செறிய வைக்கிறது! இதனை உணர்த்தும் 'அவள் வித்தியாசமானவள்' கதை கலை நயம் மிகுந்த அபூர்வ படைப்பாகும்!

'எது உண்மை', 'காகித ஓடம்' ஆகிய கதைகள் ஆசிரியருக்கு ஆன்ம விசாரத்தில் உள்ள நாட்டத்தை சுட்டி நிற்கின்றன.

'பிறந்தநாள்' கதை பத்து வயதே நிரம்பிய சிறுமி ஒருத்தியின் உணர்வுகளை அப்பட்டமாக வெளிக்காட்டுகின்றது.

சமூகத்தை சாடும் கதைகளாக 'வாடகை வீடு', 'மகப்பேறு', 'துடுப்பு இல்லாத ஓடங்கள்', 'எங்கடை சனம்', ஆகியவை உயர்ந்து நிற்கின்றன.

'உறவு', 'அன்புள்ள காதலனே', 'கலாட்டா கலியாணம்', 'அத்தியாயங்கள்', 'அது வேறு சமாச்சாரம்' ஆகிய ஐந்து கதைகள் குடும்ப பிணக்குகளை வைத்து பின்னப்பட்டுள்ள அதே சமயம் 'அன்புள்ள காதலனே', 'கட்டவா கலியாணம்' ஆகிய இரு கதைகள் வாயிலாக ஆசிரியர் தனது நகைச்சுவை உணர்வினை வெளிக்காட்டி உள்ளார்.

ஆண் பாலார் தமது காதல் உணர்வினை தமக்கு சாதகமாக பயன்படுத்தி பெண்களை கண்ணீர் வடிக்க வைக்கும் கைங்கரியத்தை 'இரசிக்கத் தெரிந்தவர்கள்', 'சாயும் காதல் கோபுரங்கள்' ஆகிய இரு கதைகள் மூலம் ஆசிரியர் கண்டிக்கின்றார்.

அரச திணைக்களங்களில் என்ன நடைபெறுகின்றது என்பதை 'அரச விடுதி' கதை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றது.

மொத்தத்தில் 'தொடரும் தலைமுறைகள்' தொகுப்பின் பத்தொன்பது கதைகளிலும் ஏதோ ஒரு சுவாரசியம் பொதிந்திருப்பதை வாசகர்கள் நிச்சயம் காண்பர்!

அதற்கு மேலாக கலாச்சாரம் சார்ந்த ஆசிரியரின் மன ஆதங்கங்களை வாசக நெஞ்சங்கள் உள்ளூர உணரவே செய்வர்!

நன்றி

**செ. ஜெயபாலசிங்கம்**
**செயலாளர்**
**ஜெயகாந்தி கலை கலாசார**
**விளையாட்டு மேம்பாட்டு கழகம்**
**திருக்கோணமலை, ஸ்ரீலங்கா.**

7520, OUTREMONT
APT, 02
MONTREAL,
CANADA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

கதை கேட்கும் பழக்கம் எமக்கு ஆரம்பித்த சிறு பராயத்தை இன்று நாம் நினைவு படுத்திக்கொள்ள முடியுமோ தெரியவில்லை. அப்பராயத்தில் கதைகள் எம்மை எப்படி ஆட்கொண்டன என்று நாம் சிந்தித்துப் பார்த்திருக்கின்றோமா? கதைகள் எம்மை என்ன செய்கின்றன? நாம் ஏன் கதைகளைக் கேட்க வேண்டும்? கதைகளைப் படிப்பதால் நேரத்தை இழக்கின்றோமா? அக் கதைகள் எமக்கு என்ன ஆதாயத்தைத் தருகின்றன? யார் யாருக்கோ நடந்ததாக யாரோ ஒருவர் கற்பனை செய்த சம்பவங்களுடன் எமக்கு என்ன சம்பந்தம்?

கதைகள் குறித்து நாம் கேள்விகளை எழுப்பிக்கொண்டு போனால் அவை மனித மனங்களில் ஏற்படுத்துகின்ற பிரதிபலிப்புகள் எத்தனை விந்தையானது என்ற ஆழ்ந்த ஆராய்ச்சியின் பால் சென்று கொண்டிருப் போம். கதைகேட்டுக் கதைகேட்டு வளரும் மனதில் கதைகள் பற்றிய இரசனையும் மதிப்பீடும் ஒரு சேர வளர்ந்து செல்லும். சிலவேளை இரசனை பற்றி எம்மிடம் படிந்துவிட்ட அபிப்பிராயங்களே எம் இரசனைக்குத் தடையாக அமைந்து விடுவதும் உண்டு. சின்னக் குழந்தை மனம் விட்டுச் சிரிப்பதுபோல் வளர்ந்தவர்களால் முடிவதில்லை. அவர்கள் போர்த்திக்கொள்ளும் அந்தஸ்து, நாகரீகம், இங்கிதம் பற்றிய கற்பிதங்களும் அவர்கள் முகங்களை இன்னும் இறுக்கமானதாக்கிவிடும். அதே கதி கதைகள் பற்றிய இரசனைக்கும் ஏற்பட்டுவிடுவதுண்டு.

குழந்தைகளாக இருந்தபோது நாம் கேட்ட ஒரு கதையை வளர்ந்தபின் ரசிக்கமுடியாததாகிவிடுவது ஏன்? அதே கதையை இன்னொரு குழந்தை ரசிக்கத் தயாராக இருக்கின்றபோது நாம் மட்டும் எப்படி மாற்றம் கண்டோம்? நாம் நல்ல கதை பற்றி பல அபிப்பிராயங்களை வரித்துக் கொள்கிறோம். கதையென்பது ஒரு அறிவுரையைச் சொல்லவேண்டும், ஒரு அறநெறியை அண்டியிருக்க வேண்டுமென்றும் இன்னும் சிலபேர் அது முற்போக்கானதாக இருக்க வேண்டுமென்றும் பலவிதமான வரையறைகளை அமைத்துக்கொள்வது உண்மையான ஒரு கதையை அவர்கள் இழந்துவிடச் செய்வதற்கே இறுதியில் வழிகோலி விடுவதுண்டு.

ஒரு எழுத்துக் குவியலுக்குள் கதை எப்படி உருவாகின்றது என்பதைக் கண்டறியும் தேடல்தான் எமது ரசனையைப் பக்குவப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசனை என்பது ஒரு சுகா அனுபவமல்ல. அது ஒரு வேதனையாகவும் இருக்கலாம். லயிப்பாகவும், பிரமிப்பாகவும், நொடிப்பொழுதில் ஏற்பட்ட அதிர்ச்சி அனுபவமாகவும்கூட இருக்கலாம். வாசகரின் மனதை கதை தன்வசப்படுத்திக்கொள்வது அவசியமில்லை. கதையிலிருந்து பிரிந்துநின்று அதனைத் தக்கவாதங்களுடன் ரசிக்கவும் முடியும். கதையின் போக்கும், முடிவும், கதையில் விடுத்துச் செல்லும் செய்தியும் எப்போதும் வாசகருக்கு உடன்பாடானதாக இருக்கவேண்டியதுமில்லை. அது அவரைத் தாக்கத்துக்குள்ளாக்கினாலே போதுமானதாகிவிடுகின்றது. நன்மைக்கும், தீமைக்கும் இடையிலான முரண்பாடொன்றில் கதை விரிகின்றதென்ற பழைய கொள்கையும் ஒரு நிலைபேறான நியதியில்லை. நன்மை தீமை என்பன எங்கும் இருகூறாக அணிபிரிந்து நிற்பதுமில்லை. கதாபாத்திரங்களில் அவை எவ்விதமாகவும் மாறுபட்டுத் தொனிக்கலாம்.

இவ்வாறெல்லாம் இன்னும் பலவற்றை நாம் மறுபரிசீலனை செய்துகொள்ளவேண்டியும் உள்ளது. நிறையவே நாம் கட்டுமானங்களை அடுக்கிக் கொண்டு சென்றுவிட்டதால் நிறையவே நாம் அவற்றைக் கிளறித் தகர்த்துத்தான் கதையை சிறைமீட்புச் செய்யவேண்டியும் இருக்கின்றது. வளர்ந்து, கற்று, பிறரின் மதிப்பீடுகளால் தன்னை வடிவமைத்துக்கொண்டு இறுகிப்போன முகத்துடன், அங்கிகளின் கௌரவக் கனத்துடன், தனக்கெனத் தகைமையளித்துப் போடப்பட்ட ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கும் அதிகாரியொருவரிடம் அவரின் குழந்தைப் பராயக் குதூகலச் சிரிப்பை மீண்டும் கொண்டுவருவதற்கு நீங்கள் அவரிடமிருந்து களைய வேண்டியவை எவை எவையென எண்ணிப் பாருங்கள். அவ்வளவு விடயங்களையும் நாம் எம் இரசனையிலும் செய்ய வேண்டும். அப்போதுதான் உண்மையாக ரசிக்க முடியும்.

கதைகள், ரசனை பற்றியெல்லாம் நான் இங்கே சொல்ல நேர்ந்ததொன்றும் தற்செயலல்ல. இவற்றைச் சொல்வதற்கு என்னைப் பக்குவப்படுத்திக்கொண்டு நான் இறங்கியிருக்கவில்லை. பக்குவப் படுத்திக்கொள்ள விளைவதாக எண்ணி நான் செய்துகொள்ளும் முடிவுகளும் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் சொற்களும் என்னை உண்மையற்றவனாக்கிவிடும். உண்மையில், இந் நூலாசிரியர் வீ. என். சந்திரகாந்தி தனது சிறுகதைகளுக்கு ஓர் முகவுரை தரும்படி கேட்டதன் பிரகாரம், எழுதுவோம் என எனது கம்யூட்டரில் கை வைத்த அந்தக் கணத்திற்கு முன் இந்த எழுத்துரு எவ்வடிவிலும் என்னிடமிருந்து பிறக்கவில்லை.

எனது வாசகங்களை ஏற்பதும், விடுவதும் வாசகர்களின் இஷ்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வாசகர்கள் ஒன்றும் எனது வாசகர்களல்ல. அவர்கள் சந்திரகாந்தியின் வாசகர்கள்.

சந்திரகாந்தியை நான் நன்கறிவேன் என்றெல்லாம் பொய்பேச எனக்கு விருப்பமில்லை. அவரை நான் அவரின் சிறுகதைகள் மூலமாகவவே அறிவேன். அவரது முன்னைய சிறுகதைத் தொகுதியான 'ஸ்திரீ லட்சணத்தில்' வெளியீட்டாளர் சித்தி அமரசிங்கத்தின் குறிப்பிலிருந்துதான் அவரது பெயர் சுட்டுமாற்போலன்றி அவர் ஓர் ஆண் எழுத்தாளர் என்பதையும் தெரிந்து கொண்டேன். அவரின் சிறுகதைகளில் சிலவற்றைப் படித்திருக்கின்றேன். அந்தச் சிலவற்றிலிருந்து நான் அவரிடம் கண்டுகொண்ட விடயம் அவர் சமூகத்தின் நடைமுறை வாழ்வின் பல்வேறு பாத்திரங்களாக தன்னை இருத்திப் பார்க்கிறார். தன்னை ஆணாகவும், பெண்ணாகவும், சிறுமியாகவும் மாற்றி மாற்றி, தனது கதைப் புலத்தில் அமர்த்தி அவ் அனுபவத்தை எழுத்துருவில் வார்க்க முனைகிறார்.

அவரது கதைகளின் இந்த அம்சம், அதாவது சமூகத்தின் பல வெட்டுமுகங்களையும் புரட்டிப்பார்க்கின்ற நாட்டம், அதில் கண்டவற்றை வெளிப்படையாகவே கதையாக்கம் செய்துவிடுகின்ற தன்மை என்பன எனக்குப் பிடித்துள்ளது. கதைகளின் சிறிய வசன அமைப்பு சிரமமின்றிக் கதையை ஒரு சுவாரசிய ஈர்ப்போடு நகர்த்திச் செல்வதாக எனக்குப் படுகிறது. அதேவேளை உரையாடல்கள் வரும்போது அதில் பயன்படுத்தப்படும் செம்மை வாக்கியங்கள் எனக்குச் சற்று அசாதாரணத் தன்மை கொண்டதாக உறுத்தியதையும் நான் குறிப்பிடத்தான் வேண்டும். வெவ்வேறு கதைகளின் முடிவுகள், அவற்றில் சொல்லப்படும் செய்திகள் எனக்கு ஏற்புடையதாக இருக்கலாம் விடலாம். அது பூரணமாக ஆசிரியரின் சொத்து. ஆனால் அந்த முடிவுகளையும், செய்திகளையும் கதையோட்டம் தர்க்கரீதியில் புலப்படுத்தக்கூடியதாக இருந்தால் அதுவே திருப்தியானது. நான் இவரது கதைகள் குறித்த மதிப்பீடெதையும் செய்ய விளையவில்லை.

உண்மையில் இன்றைய காலகட்டத்தில் ஒருவர் தன்னை எழுத்தாளராக ஈடுபடுத்திக் கொள்வதே மெச்சத்தக்க பணி. அந்தளவுக்கு எழுத்தின் மீதான ஆர்வம் எமது சமூகத்தில் குன்றி வருகின்றது. வாசகர்கள் அவசர வாசகர்களாக ஆகிவருகின்றார்கள். அதற்குத் தகுந்தாற்போல் அவசரக் கதைகள் எழுதவேண்டியதாக எழுத்தாளர்கள் தள்ளப்படுகின்றார்கள். ஒரு பத்திரிகை பிரசுரிக்கும் கதைப் பாணிக்கேற்பவும், அப் பத்திரிகை வழங்கும் இடத்துக்கு ஏற்பவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது விற்பனையாகும் வாசகர் மட்டத்துக்கேற்பவும் கதைகளை செதுக்கிக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளார்கள். தனது முழுமையான மனவிரிப்பை அது செல்லுமட்டும் செல்லவிட ஒரு எழுத்தாளரால் இன்று முடிவதில்லை. பத்திரிகைகளின் தயவை விடுத்து, தமது கதைகளை நூலுருவில் வெளியிடுவதற்கு எல்லா எழுத்தாளர்களுக்கும் கட்டுப்படியாவதில்லை.

இன்னொரு பாரிய குறைபாடு எம்மத்தியில் உண்டு. நாம் இன்று ஆரோக்கியமான நூல் விமர்சனங்களை நடத்துகிறோமா? ஒரு படைப்பு வெளிவந்தால் அதையிட்டு எதிரும் புதிருமான பலதரப்பட்ட விமர்சனங்கள் வெளிக்கிளம்புகிறதா? நூலாசிரியர் தனது படைப்பை மிகச் சுலபமாக படைத்துவிட்டுச் செல்வதற்கு இடமிருக்கக்கூடாது. அவர் ஆயிரம் கேள்விகளுக்கு முகம்கொடுத்து தனது படைப்பை நிலை நிறுத்து வாரானால்தான் அப்படைப்புகள் அர்த்தம்பெறும். எழுத்தாளர்கள் ஒருபுறம் படைத்துச் செல்ல, வாசகர்கள் மறுபுறம் விரும்பியதை வாசித்து விரும்பாததை விடுத்துச் செல்வதாக இருந்தால் என்ன கதி?

எவ்வாறாக இருக்கட்டும், எழுத்தாளன் எப்போதுமே ஒரு சர்வாதிகாரி. அவன் எழுதுவதை ஏனையோர் படித்தாக வேண்டும் என்ற ஒரு பக்கமாகத்தான் இங்கு நீதி செயற்படும். அதற்கு நான்மட்டும் விதிவிலக்காகிவிட முடியாது. எனவே விரும்பியோ விரும்பாமலோ நான் இங்கு சொல்லிச் செல்பவற்றை நீங்கள் படிக்க நேர்ந்தால் நான் நூலாசிரியரைப்பற்றியும் அவரின் சிறுகதைகள் பற்றியும் சொல்வதைவிட அப்பால் சென்று பேசிவைத்ததையிட்டுத் தர்க்கியுங்கள்.

சந்திரகாந்திக்கு வாசகர் செய்யவேண்டிய கைமாறு என்ன தெரியுமா? அவரின் படைப்புக்கள் மீது போர் தொடுங்கள். அப்போதுதான் அவரின் ஆயுதங்கள் மேலும் மேலும் கூர்மை பெற்றுச் செல்லும். நாம் சந்திரகாந்தியிடமிருந்து வற்றாத படைப்புக்களை, இன்னும் மாறுபட்ட கோணங்களில் எதிர்பார்ப்போமாக.

து. பாஸ்கரன்,
ஆசிரியர் தினமுரசு.
த.பெ. 1772
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை

எனது முதலாவது நூலான 'ஸ்திரீ இலட்சணம்' சிறுகதை தொகுப்பு எனக்கு பல மட்டங்களிலும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொடுத்தது. அந்த மனநிறைவு ஒன்றினை மட்டுமே காரண காரிய தொடர்பாக கொண்டு 'தொடரும் தலைமுறைகள்' என்ற இந்த மலர் விரிகின்றது.....

இலக்கியப் பணி என்பது ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் கைகளில் மட்டும் தங்கியுள்ள ஒரு பொறுப்பு அல்ல. இலக்கிய ஆர்வலர்களின் ஊக்கம் பிரதானமானது. ஆக்க இலக்கிய கர்த்தாக்களும் இலக்கிய ஆர்வலர்களும் ஒன்றிணைவதில் தான் எந்த படைப்புமே சிரஞ்சீவித்துவம் எய்தும்.

மகிமை காரணமாக சிறுகதைகள் எழுதும் ஆற்றலைப் பெற்றவனல்ல நான். எனது வாழ்வின் முதிர்ச்சியில்....... அனுபவத்தின் ஆழமான வடுக்கள் என் உள்ளத்தில் பதிவுகளை தடம் பதித்த நிலையில்.....இந்த சமுதாயம் குறித்த எனது கண்ணோட்டத்தை எவருடனாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆதங்கம் என்னுள் கிளர்ந்தெழுந்தபோது எனது எண்ணக் கிடக்கைகளுக்கு எழுத்துருவம் கொடுத்தேன்.

தினமுரசு வாரமலர், ஞானம் மாத சஞ்சிகை, தினக்குரல் பத்திரிகை ஆகியவை எனது எழுத்துலக முயற்சிகளுக்கு களம் தந்தன. இப்பத்திரிகைகள் மூன்றிலும் பிரசுரமான எனது சிறுகதைகளின் தொகுப்பாக 'ஸ்திரீ இலட்சணம்' நூல் வெளிவந்த போது ஞானம் சஞ்சிகையில் பிரசுரமான ஆறு கதைகளும் தினமுரசு வாரமலரில் பிரசுரமான நான்கு கதைகளும் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமான ஒரு கதையும் 2002ம் ஆண்டுக்கான திருக்கோணமலை பிரதேச செயலக இலக்கிய விழா மற்றும் அதே வருடத்துக்கான திருக்கோண மலை மாவட்ட இலக்கிய விழா ஆகியவற்றிற்கான திறந்த சிறுகதைப் போட்டிகளில் முதலாம் இடத்தை சுவீகரித்த ஒரு கதையுமாக பன்னிரு சிறுகதைகள் இடம் பிடித்தன.

'தொடரும் தலை முறைகள்' என்ற இந்நூல் முற்றிலுமே தினமுரசு வாரமலரில் கடந்த நான்கு ஆண்டு கால கட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரமான சிறுகதைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எனது பத்தொன்பது சிறுகதைகளின் தொகுப்பாகும்.

தினமுரசு வாரமலருக்கு எழுதப்படும் சிறுகதைகளின் பக்க எண்ணிக்கை மூன்று பக்கங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. அப் பத்திரிகையின் ஒரு பக்கத்தில் மூன்று கதைகளாவது பிரசுரமாகுமாறு பார்த்துக் கொள்வதன் மூலம் இளம் எழுத்தாளர் தலைமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்வது அவர்களது நோக்கமாக இருக்கலாம்.

அதனைத் தவிர்த்து சிறுகதையின் கரு, கட்டமைப்பு பற்றி அவர்கள் எந்த நிபந்தனைகளையும் விதித்ததாக நான் உணரவில்லை.

புதிதாக இனம் காணப்பட்ட ஆக்கங்களுக்கு மத்தியில் கைதேர்ந்த எழுத்தாளர்களின் படைப்புக்கள் பல இலக்கிய உலகின் பார்வையிலிருந்து அடிபட்டு போனமையை தவிர தினமுரசு ஆசிரிய பீடம் தரமான சிறுகதைகளை இனம் கண்டு பிரசுரிப்பதில் மிகமிக கைதேர்ந்திருக்கின்றது.

3702

தினமுரசு வாரமலரில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பிரசுரமான எனது முதலாவது சிறுகதை 'எது உண்மை?' என்பதாகும். மிக அண்மையில் நான் எழுதி அதே பத்திரிகையில் பிரசுரமான இறுதி சிறுகதை 'வெளிநாட்டு குஞ்சுகள்' ஆகும். இவ்விரு சிறுகதைகளும் ஒரு காரணம் கருதி இத்தொகுப்பில் இடம் பிடித்துள்ளன. ஏனையவை இக்கால கட்டத்தில் நான் எழுதி பிரசுரமான நாற்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவை.

சிறுகதைக்கு பக்க வரையறை ஒரு பிரச்சனையே அல்ல என்பதை எனது அனுபவம் எனக்கு உணர்த்தியுள்ளது. 'ஸ்திரீ இலட்சணம்' தொகுப்பில் இடம் பிடித்த 'குடிசை' என்ற தலைப்பிலான சிறுகதை வெறுமனே மூன்று பக்கங்களில் எழுதப்பட்டு தினமுரசில் பிரசுரமாகியதே! ஆனால் அக்கதை 'ஸ்திரீ இலட்சணம்' தொகுப்பின் கனதிக்கு அதி கூடிய வலுவை சேர்த்தது.

அதிக பக்கங்கள் எழுதப்பட்டதற்காக ஏதாவது சிறுகதை பாராட்டினைப் பெற்றுள்ளதா? இல்லவே இல்லை.

சிறுகதை ஒன்று சிறப்புறுவதற்கான அம்சங்கள் கருவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திர வடிவமைப்பிலும் பயன்படுத்தப்படும் உத்திகளிலுமே பெரிதும் தங்கியிருக்கின்றன. கதை சொல்லுவதல்ல சிறுகதை. கதையை சம்பவங்கள் மூலமாக நகர்த்த வேண்டும். தரமான சிறுகதையானது வித்தாக இருந்து வாசகனின் உள்ளத்தில் எண்ணக் கருவூலங்களை விதைத்து விடவேண்டும். அதன் விருட்சத்துவத்தில் சமுதாயம் நன்மை பெற வேண்டும்.

எனது முதலாவது நூலுக்கு ஆதரவு தந்த வாசக நெஞ்சங்களுக்கு எனது நன்றிகள். தொடர்ந்து எனது ஆக்கங்களை பிரசுரித்து வரும் தினமுரசு ஆசிரிய பீடத்தினரையும் உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் என்றும் நன்றியுடன் நினைவு கூர கடமைப்பட்டவன் நான்.

அன்பு வாசக நெஞ்சங்களே! என் சிறுகதைகளை பத்திரிகைகளில் படித்து.... மனம் திறந்து விமர்சித்து.... அன்புடன் பாராட்டிய உங்கள் எத்தனமே இந்நூல்!.

நன்றியுடன்
*திருமலை. வீ.என். சந்திரகாந்தி*

572/A, ஏகாம்பரம் வீதி,
திருக்கோணமலை.
ஸ்ரீலங்கா.
தொ.பே. 026-2224706



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது உண்மை?

காலையில் நான் கண்ட அந்த விபத்து என் மனதினை விட்டு அகல மறுத்தது. எமது கல்லூரி மாணவியை முட்டித்தள்ளி விட்டு நிற்காமல் சென்றுவிட்ட அந்த 'ஆட்டோ' சாரதியின் வறட்டு வைராக்கியம் எனக்கு ஆத்திரத்தையே உண்டு பண்ணியது. ஆனால் வழமைபோலவே என் மனம் எந்த வித எதிர் நடவடிக்கை பற்றியும் முடிவெடுக்காமல் சோர்ந்து கவலையில் மூழ்கியது.

உலகில் இப்படியெல்லாம் துயர சம்பவங்கள், அவலங்கள், அட்டூழியங்கள் சம்பவிக்க காரணம் என்ன? இரு வினை என்று கூறிவிட்டால் போதுமா? இரத்த வெள்ளத்தில் மிதந்த அந்த மாணவி என்ன தப்பினைச் செய்தாள்? அவளுக்கு இப்படியொரு தண்டனை தேவையா? அப்படியிருப்பினும் இது அதிகமில்லையா? மனிதாபிமானம்தான் கெட்டுப்போய்விட்டால்கூட இறையருள் என்ற ஒன்று இருந்து இவற்றை ஏன் தடுப்பதில்லை?

அந்த மகளிர் பாடசாலையின் கருமங்கள் யாவும் தங்கு தடையின்றி நடந்து கொண்டிருந்தன. எனக்குத்தான் பாடங்களில் மனம் ஒட்டவில்லை.

பல சம்பவங்கள் எனது மனத் திரையில் காட்சிகளை விரித்துக் கொண்டிருந்தன.

மறைந்த எம் மதிப்பிற்குரிய கல்லூரி அதிபர் - எமது பாடசாலை வாசலிலேயே இரத்த வெள்ளத்தில் தோய்ந்த காட்சி, மாணவிகள் கதறி அழுத கோலங்கள். இவையெல்லாம் எனது மனதில் ஆறாத இரணங்களாகப் பதிவாகிவிட்டன. எமது அதிபர் சக ஆசிரியைகளுக்கும் மாணவ சமூகத்துக்கும் வழிகாட்டியமையை தவிர அவர் செய்த தவறு என்ன? காளி ஆச்சியின் அருளை தனக்காக மட்டுமன்றி எமக்காகவும் வேண்டி சந்நிதானத்தில் தவம் இருந்தது தவறா?

எனது மனம் எடைபோட்டுக் கொண்டே இருந்தது. பாடசாலை முடிவுற்று ஆசிரியைகளும் மாணவிகளும் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். திடுக்குற்று சகஜ நிலைக்குத் திரும்பிய நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலுக்கு வந்தேன். மாணவிகள் நடந்தும் துவிச்சக்கர வண்டியிலும் 'ஆட்டோ'விலும் விரைந்து கொண்டிருந்தனர். எவருக்கும் எப்போதும் எதுவும் நடக்கலாம்! எதற்கும் யாரும் உறுதி கூற இயலாது!.

என்னை அன்பாக அழைத்துச் செல்ல அப்பாவோ அண்ணாவோ ஆர்வமாக ஓடி வருவார்கள். மோட்டார் வண்டியில் நான் அழைத்துச் செல்லப்படுவேன்.

அம்மா காப்பு விரதம். பத்து வருடங்களாக அனுஷ்டிக்கிறாள். தான் நினைத்தது நடக்கும் என்பாள். கண்ட கனவு பலிக்கும் என்பாள்.

அம்மா அன்புடன் சைவ உணவு பரிமாறிக்கொண்டிருந்தாள். அப்பா கவலையுடன் அமர்ந்திருந்தார். ஏதோ ஒரு உரையாடல்- நான் வர முன்னரே நடந்ததன் பின்னணி அது.

அம்மா விளக்கினாள். ''பிள்ளை! உன் அண்ணாவோடு படிக்கிற சுரேஷின் அப்பாவாம். உன்னுடைய அப்பாவோடதான் ஒரே கந்தோரிலை வேலை பார்க்கிறவராம் 'மேற் பிப்ரியிலை' வரேக்கை 'ஆமி ட்ரக்' அடிச்சி 'ஐ.சி' வாட்டிலை போட்டிருக்காம். உயிர் பிழைக்கிறதும் கஷ்டமாம்.''

ஏற்கனவே நைந்து போயிருந்த என் மனம் உள்ளூர அழவே ஆரம்பித்தது. நாங்கள் உள்துறைமுக வீதியில் அமைந்த ஒரு வீட்டில் சில ஆண்டுகளுக்கு முன் வாடகைக்கு இருந்தபோது அவரையும் மனைவி பிள்ளைகளையும் நான் பல தடவை கண்டிருக்கின்றேன். அப்போது அவர்கள் உவர்மலை மத்திய வீதியில் இருந்தார்கள்.

நான் கேட்டேன், ''ஏனம்மா அந்த அன்ரி உங்களுடன் காப்பு விரதம் அனுஷ்டிப்பதாகக் கூறினீர்களே அவ இப்போ கோயிலுக்கு வருவதில்லையோ?''

''வராமல் என்ன பிள்ளை! விபத்து நடந்தபோது அவ காப்பு எடுப்பதற்காக என்னுடன்தான் கோவில் சந்நிதானத்தில் நின்றவ. செய்தி கேட்டுத்தான் அழுதுகொண்டு ஓடினவ.''

'காளித் தாயே! அந்த அன்னை உன்னைக் கேட்டது இதுவா? காப்பு விரதத்தின் பொருள்தான் என்ன?

மாலையில் அப்பாவின் தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த அங்கிள் இறந்து விட்டாராம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா கோயில் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். ''பிள்ளை வெளிக்கிடு கோயிலுக்குப் போவோம்.''

நான் மறுத்து விட்டேன். எனக்கு எதிலும் நம்பிக்கை பிறக்கவில்லை. எதிலும் பற்றுக்கோடு இல்லாத மனநிலை. ஊமைக் காயங்கள். அப்பா கட்டளையிட்டார்- ''கோயிலுக்குப் போ...!''

நான் கேட்டேன், ''எதற்காக அப்பா? நான் எதிலும் ஈடுபாடாக இல்லை. என்னை விட்டு விடுங்கள்.''

அப்பா புத்திமதி கூறுவது போல் கூறினார். ''இந்த உலகத்தில் நடப்பவற்றின் ஒரு பகுதியைத்தான் நாம் பார்க்கின்றோம். மறு பக்கம் எமக்குத் தெரியாது. நன்மை என்று நாம் முன்னர் எண்ணியதெல்லாம் பின்னர் தீமையாக மாறுவதனையும், தீமையென்று நாம் துயருற்றவையெல்லாம் பின்னர் நன்மையாக மாறியதையும் நாம் கண்டதில்லையா? கடவுள் மேல் நம்பிக்கை வைப்பதைத் தவிர மனிதனுக்கு வேறு ஒரு மார்க்கம் உண்டா?''

இன்னும் பல கூறி அப்பா என்னை தேற்றினார். நானும் மனதை துயரத்திலிருந்து மீட்டு கோயில் சென்றேன். கோயிலில் ஏதேதோ கதைகளுக்கு மத்தியில் என் மனம் விரும்பாத அந்தக் கதையும் என் காதில் விழுந்தது. 'ஆறு வயது பெண்பிள்ளையின் கால் மேல் 'ஆமிட்ரக்' ஏறிவிட்டதாம்.' கோயிலுக்கு வந்து திரும்பிய வழியில் அப்படி நடந்து விட்டது.

அப்பா கூறிய ஆலோசனைகள் கற்பூரமாகக் கரைய என் மனம் மீண்டும் ஆறாத கவலையில் மூழ்கியது.

மனிதன் தனக்குத்தானே சமாதானங்களை ஏற்படுத்திக் கொள்கிறானா? அல்லது சம்பவங்கள் எல்லாம் ஒரு விதி முறையில் நடந்து கொண்டிருக்கின்றனவா? எது உண்மை?

நவ- 15-21, 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகித ஓடம்

மருந்து வகைகளின் நெடியும் 'டிற்றோல்' மணமும் நாசியைக் குடைந்து குமட்டலை மேலும் அதிகரித்தது!

இரண்டு நாட்கள் முன்னதாக இன்னதென்று அறியாத அந்த திராவகத்தின் நாற்றமும் வழுவழுப்பும் அப்போதிருந்த மனநிலையில் அருக்குழிக்கவில்லை.

எல்லாம் மனம்தான்!

அந்த 'நர்ஸ்' ஏன் இப்படி கோபம் சாதிக்கிறாள்? நேற்றுவரை அவளுக்கு என்னைத் தெரியாது. நான் அந்த நச்சுத்திராவகத்தை அருந்தியிருக்காவிட்டால் அவளது கடமை நேரம் குறைந்திருக்குமென்றில்லை!

அந்த அநாதை சிறுவர் இல்லத்தில் என்னைப் போன்ற சிறுமிகளும் சிறுவர்களும் நூற்றுக் கணக்கில் வாழ்கிறோம். ஆனால் யாரும் யார் மேலும் கோபம் கொண்டதில்லை.

அந்த 'நர்ஸை' மீண்டும் தொந்தரவு செய்கிறேன்.

''எனக்கொரு தூக்க மாத்திரை கொடு!''

அவளது பார்வை தீச்சுவாலையை அள்ளி வீசி என் அடி வயிற்றுப் புண்ணில் வேலைப் பாய்ச்சுகிறது.

மதிய வெயிலில் வற்றலுக்காகப் போடப்பட்ட பதார்த்தம்போல, குடல் நீர்த்தன்மையை இழந்து கருகி முறுக்கெடுக்கின்றது. தொண்டையை திறந்து வைத்து 'ஐயோ அம்மா' என்று கூக்குரலிட்டு அழுதால் ஆறுதலாக இருக்கும்போல் தெரிகிறது.

எனது நினைவுகள் அசைபோடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா வெளிநாடு போக வேண்டாம். நாங்கள் எங்கள் குடிசையை வேய்ந்துவிட்டு ஒரு நேரம் சாப்பிட்டு ஒன்றாக இருப்போம்!''

நான் அம்மாவின் மடியில் தலை வைத்து கெஞ்சினேன். எனக்காக மட்டுமன்றி எனது சிறு தங்கைக்காகவும் மன்றாடினேன்.

வெளிநாட்டில் இழந்துவிட்ட எதையோ மீண்டும் போய் பெற்றுக் கொள்ள வேண்டும் போல அம்மா தனது பயணத்தில் உறுதியாக இருந்தாள்.

எங்கள் குடிசையை வேய அனுமதிக்காத காணிச் சொந்தக்காரன், நோயாளியான அப்பா, குமர்ப்பருவத்தில் உள்ள நான், நோஞ்சானான தங்கை - இவையெல்லாம் தான் அம்மாவை விரட்டின போலும்.

''அம்மா! பரீட்சையில் நான் சித்தி பெற்று ஒரு வேலையைத் தேடிக்கொண்டு உங்களையெல்லாம் எனது சம்பளத்தில் பார்ப்பேனே!''

அம்மாவின் முகத்தை வாஞ்சையுடன் நோக்கினேன். இந்தப் பிஞ்சு கூறியதை அவள் செவிமடுக்கவில்லை. ஆனால் தான் மீண்டும் வெளிநாடு போவதை உறுதிப்படுத்தும் வகையில் அப்போது அவள் கூறியதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

''மகளே! உனது ஜாதகப்படி நீ இம்முறை பரீட்சை சித்தியெய்துவதுகூட சாத்தியமில்லை. ஜோசியர் அப்படித்தான் கூறுகிறார்...''

அதன் பின் அவள் கூறியவை எனது செவிகளில் ஏறவில்லை. எங்கள் இல்லப் பிள்ளைகள், ஆசிரியைகள், சக மாணவிகள் எல்லோரும் என்மேல் வைத்திருக்கும் அபரிதமான நம்பிக்கைகள் சிதைந்து விடுமா?

நோயாளியான எனது தந்தையை உழைத்து பராமரிக்க மாட்டேனா?

அப்பாவியான எனது தங்கையை ஆளாக்க மாட்டேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு தூங்க முடியாமல் படுக்கையில் உழன்றேன். தூக்கம் அணைத்தபோது திடுக்குற்று எழுந்தமர்ந்தேன். நெஞ்சு படபடத்தது. நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர் பல கோடி கற்பனைகளுடன் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களை புதிதாக பார்ப்பதுபோல பார்த்தேன்.

கிழித்துப் போட்ட நார்களாக கிடக்கும் இவர்களுக்கு விடிவு எங்கே?

இந்த சமுதாயம் எங்களை வாழ விடுமா?

நெஞ்சில் யாரோ அழுத்துவதுபோல தெரிந்தது.

இந்த எல்லையற்ற பிரபஞ்ச வெளியில்...

துலக்கமற்ற சூன்ய இருளில்...

ஓங்கார ஓசையின் இரைச்சலில்...

ஓடையில் இடப்பட்ட ஓலைக் கந்தலாக அள்ளுண்டு போவதற்கு முன்பதாக மிடறாக... மிடறுகளாக... ஓங்காளத்தை அடக்கி மீண்டும் மிடறுகளாக...

அந்த நர்ஸின் இடத்துக்கு இப்போ மற்றொருத்தி! சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டே...

'வலியம்' குளிகை தந்த சுகத்தில் மயங்கிப் போகையில் மீண்டும் அந்த ஆசை... ஒவ்வொரு உயிருக்கும் உரித்தான ஆசை... இந்த உலகின் உயிர்ப்புக்கு காரணமான ஆசை... நான் வாழ வேண்டும்!

**ஏப்-04-10, 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அண்மித்து விட்டது...

தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு அலாரம் அடிப்பதைத் தொடர்ந்து அம்மா குரல் கொடுப்பாள். ''வதனா ரியூசனுக்கு நேரமாச்சு... இன்னும் தூக்கமா... எழும்பு...''

இன்று அப்படியல்ல. நான்கு மணிக்கே அலாரம் அடித்தது. நான் விழித்துக் கொண்டாலும் அம்மா என்னை உற்சாகப்படுத்தவில்லை.

'என்னுடைய ஆசை கிச்சிட்டான்... என்னுடைய தங்கம்... என்னுடைய குஞ்சு...' இப்படியெல்லாம் அன்பு வார்த்தைகளைக் கொட்டுவாள்.

மூத்தக்கா, இளையக்கா, அப்பா எவருமே என்னை இன்று கொஞ்சி அணைக்கவில்லை... எனக்காக 'பர்த்டே கேக்' செய்யவில்லை.

யாருக்கும் எனது பிறந்தநாள் நினைவிலில்லை!

எல்லோருடைய கவனமும் மூத்தக்காவின் பூப்புனித நீராட்டு விழாவிலேயே ஒருமுகப்பட்டு இருந்தது.

அவளுக்காக, சேலைகள்... சட்டைகள்... அலங்காரப் பொருட்கள்... நகைகள்... இன்னும் பலப் பல.

எனக்கும் இளையக்காவுக்கும் ஒவ்வொரு சட்டை மட்டும். நிலைக் கண்ணாடியின் முன்பாக நின்று எனது சட்டையை எனக்கு முன்பாக தூக்கிப் பிடித்துப் பார்த்தேன்.

சின்னதான பூக்களிடப்பட்ட... வண்ண வண்ண சட்டை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இது எனது பிறந்தநாள் பரிசு அல்ல!

எனது றோஸ் நிறக் கன்னத்தில் கண்ணீர் வடிந்து உருளுவது நிலைக் கண்ணாடியில் தெரிகிறது.

எனது கவலை மேலும் அதிகரிக்க கண்ணீரை அடக்க முடியாமல் போகிறது.

பக்கத்து வீட்டு அன்ரி, மாமி, பெரியம்மா இன்னும் பலர் அக்காவுக்கு பால் அறுகு வைத்து நீராட்டுகிறார்கள்.

தண்ணீர் தொட்டியில் வண்ண, வண்ண மலர்களுக்கு மத்தியில் அக்காவின் முகம் அழகாக ஜொலிக்கிறது. 'வீடியோ' வெளிச்சம் பளிச்சிடுகிறது. புகைப்படக்காரர் ஓடி ஓடி படம் பிடிக்க அக்கா அன்புடன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

எனது பிறந்த நாள் அவளுக்கு நினைவிலில்லை.

மங்கள விளக்குகளை ஏந்தி தோழிகள் சூழ வர அக்கா அலங்கார தேவதையாக வருகிறாள்...

எனது தோழிகள் என்னை விளையாட அழைக்க நான் அவர்களுடன் சேர்ந்து என்னை மறந்து ஓடுகிறேன். நீளப் பாவாடை இடற கால் தடுக்கி, விழுந்த எனக்கு அப்பா முதுகில் ஒன்று வைத்து எச்சரித்து விட்டுப் போகிறார்.

அப்பாவுக்கு எனது பிறந்த நாள் நினைவிலில்லை.

ஆரத்தி... மதியபோசனம்... அன்பளிப்பு... வீடியோ...

மகிழ்வுடன் எல்லோருடனும் நின்று 'போஸ்' கொடுக்கும் அம்மாவுக்கும் எனது பிறந்த நாள் நினைவிலில்லை.

நெரிசலிலிருந்து விடுபட்டு எனது கட்டிலில் சென்று விழுகிறேன்.

சாம்பிராணி, 'எயார் பிரஷ்னர்', பழவகை வாசனைகளுக்கு மத்தியில் அந்த 'கேக்' வாசனை! ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் 'கேக்' தட்டுக்கள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு அளவில் கேக் துண்டுகளை வெட்டி... ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி பத்து மெழுகுதிரிகளை நாட்டுகிறேன். யாரோ ஓடிவரும் காலடி சத்தம் கேட்கின்றது. கட்டிலுக்கு அடியில் மறைந்து கொள்கின்றேன். இளையக்கா ஓடிவந்து எனது ஏற்பாடுகளைப் பார்க்கிறாள். 'யாருக்குப் பிறந்தநாள்?' என்று கணக்குப் போடுகிறாள்.

''இன்று வதனாவின் 'பர்த்டே'.'' உரத்து கூறியபடி ஓடுகிறாள்.

பொழுது சாய்ந்து விட்டநேரம்... வைபவம் முடிந்து எல்லோரும் போய்விடுகிறார்கள். பக்கத்து வீட்டு அன்ரி, அங்கிள், அண்ணா, அக்கா மாத்திரம் நிற்கிறார்கள்.

களையுடன் அப்பா 'ஈசி சேரில்' சாய்ந்திருக்க... அம்மா குட்டி ஆரவாரம் ஒன்று செய்து எனது பிறந்தநாளை அறிவிக்க... நானே தயார் செய்த 'பர்த்டே கேக்' முக்கிய இடம்பெற... வீடியோ வெளிச்சத்தில் நான் மெழுகுவர்த்தி கொழுத்தி... கேக் வெட்ட... அக்கா 'ஹப்பி பர்த்டே' பாட.... அம்மா என்னை வாரி அணைத்து... ''என்னுடைய ஆசை கிச்சிட்டான்... என்னுடைய தங்கம்... என்னுடைய குஞ்சு...'' என்று கூறி ஆர அணைத்து கொஞ்சுகிறாள். தூக்கம் என் கண்களை உறுத்துகிறது.

இளையக்காவின் சாமத்திய வீடு என் பிறந்தநாளன்று வரக்கூடாது!

**மே- 30-ஜுன்05, 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகை வீடு

வாயிற் காதவு திறக்கும் சத்தம் கேட்டு அரிசியில் கல் தேடிக்கொண்டிருந்த சுளகினை ஓரமாக வைத்துவிட்டு தலையை நீட்டிப் பார்த்தேன். அது நாங்கள் குடியிருக்கும் வாடகை வீட்டுச் சொந்தக்காரன்; அல்லை தொல்லை இல்லாத ஆள். பெண்கள் மாதிரி சுபாவம். கந்தோருக்குப் போனால் இடையிலை வராத மனுசன். இண்டைக்கு அவசர அவசரமாய் மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு வீட்டிற்குள் சென்று எதையோ எடுத்துக் கொண்டு போகுது. ஒரு அசுகையிலை அப்படித் தெரியுது. நான் எங்கே உதுகளை எட்டிப் பார்த்தன்!

நாங்கள் குடியிருக்கின்ற வாடகை வீடும் வீட்டுச் சொந்தக்காரரின் வீடும் ஒரே வளவுக்குள் அடுத்தடுத்தாற்போல் இருப்பதுதான் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணமாய்ப் போய்விட்டது.

என்ரை மனுசன் கந்தோருக்குப் போய்விடுவார். நான் என்ரை இரண்டு குமரையும் பாடசாலைக்கு அனுப்பிப்போட்டு இரண்டு வீட்டுக்குமாக சேர்த்து காவல் இருக்க வேணும். 'வேலைக்குப் போகாத பெண் இருக்கிற குடும்பத்துக்குத்தான் வீடு கொடுப்பன்' என்று சொல்லித்தானே இந்த வீட்டுக்கார மனுசி வீடு தந்தவள்!

அவள் பாவிக்கு எல்லாம் ஆண்பிள்ளைகள். குமர்ப் பிரச்சனையே தெரியாது. 'கேற்றை' திறந்து வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு நூறு இளந்தாரிகளைக் கூப்பிட்டுக் கும்மாளமடிப்பாள். அழகான குமரிகளை வச்சிருக்கிற நானெல்லோ மடியிலை நெருப்பைக் கட்டிக்கொண்டு அழுது கொண்டிருக்க வேண்டிக் கிடக்குது....

மீண்டும் வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்க கதவைத் திறந்து கொண்டு முற்றத்துக்கு வருகின்றேன்....

வீட்டுக்காரன் அவதி அவதியாக வீட்டைத் திறந்து தலையணையுடன் கூடையில் சில பொருட்களையும் திணித்தபடி ஓடுகிறான். எனக்கு ஒரு கதை கிடையாது! நான் அவையளின்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு காவல்...! அவள் இந்த மனுசனுக்கும் நல்லாய் ஏற்றித்தான் போட்டாள்...!

இலட்சக் கணக்கிலை நாங்கள் கொடுக்கிற வீட்டு முற்பணமும் மாதாந்தம் கொடுக்கிற ஆயிரக்கணக்கான ரூபா வாடகைப் பணமும் அவையளுக்கு நினைவிலையில்லை. அவையளின்ரை பெரிய வீட்டுக்குப் பாவிக்கிற 'கறண்டுக்கும்' அவையளின்ரை பூங்கன்றுகளுக்கு அடிக்கிற தண்ணீருக்கும் 'பில்' நாங்கள் கட்டி அழ வேண்டும்!

என்ரை குமருகள் இரண்டு தரம் 'வோசிங் ரூமு'க்கு போனால்...

''பிள்ளை, 'கக்கூஸ் பிற்றுக்கு' அடிக்கடி தண்ணீர் அடிச்சால் 'பிற்' நிறைந்து போமம்மா."

வீட்டுக்கார மனுசி சொல்லும் அன்பு வார்த்தைகளில் இது ஒரு துளி!

இதைக் கேட்கிற என்னுடைய பிள்ளைகள் அவதியெண்டாலும் 'வோசிங் ரூம்' பக்கம் போகாதுகள்.

இனி அந்தாள் வாடகை குடியிருப்பாளரின் திட்டு மறுபுறம்...!

'இந்த அகதிச் சனம் வந்து இலட்சக் கணக்கிலை பணத்தைக் கொட்டி வீடெடுக்கிறதாலை எங்களுக்கு கொட்டில் வீடும் எடுக்க ஏலாமல் கிடக்கு!'

வீட்டுக்கார மனுசி முதல் நாள் செய்த அட்டகாசம் எனது மனக் கவலைகளை இப்பவும் தூண்டி விடுகிறது போலை...

'வீட்டை உடனே விட்டு விடவேண்டும். நாங்கள் 'ஹொஸ்ரல்' நடத்த வீடு தேவை. உங்களுக்கு விடியுமட்டும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. வீட்டை உடனே விடா விட்டால் சாமான் சக்கட்டெல்லாம் தூக்கி எறிஞ்சி போடுவன்'... நான் வாய் திறக்கவில்லை. எனது கண்களால் கண்ணீர் சொரிகின்றது...

'காளித் தாயே... எங்கள் கவலைகள் எத்தனை காலம் தான் நீடிக்கப்போகின்றன...?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் அழுகிறது.

இப்படியான அட்டகாசங்களையெல்லாம் அவையள் ஏன் தட்டிக் கேட்கக்கூடாதென்று நான் நினைப்பதோடு இருந்துவிடுவேன்.

மீண்டும் வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்டு ஓடிச் சென்று பார்க்கின்றேன். வீட்டுக்கார மனுசன் மோட்டார் சைக்கிளை பொத்தென்று போட்டுவிட்டு தங்கள் வீட்டு வாயிற்படியில் விழுந்து ஓலமிடுகிறார்.

நான் ஓடிச்சென்று, ''உங்களுக்கு என்ன நடந்தது சொல்லுங்கோவன்?'' என்று அதட்டுகிறேன்.

அவர் பெண்கள் போல ஓலமிட்டபடி...

''ஐயோ அன்ரி... அவா காலையிலை மோட்டார் சைக்கிளாலை விழுந்து போனா... ஆஸ்பத்திரியிலை சேர்த்தனான்... கதை பேச்சில் லாமல் கிடந்தாலும் தப்பி விடுவா எண்டு நினைத்து ஏமாந்து போனேனே...''

எனது அனைத்து கவலைகளையும் ஒரு நொடியில் மறந்த நான்...

''ஐயோ அன்ரி'' என்று போட்ட அலறலில் ஊர்ச்சனமே திரண்டு வந்து விட்டது.

'மனிதன் நினைக்கிறான்; கடவுள் தீர்மானிக்கிறான்' என்பது சரியாகப் போய்விட்டது.

வாடகை வீட்டிலிருந்து என்னை வெளியேற்ற இந்த மனுசி பிரயத்தனம் செய்கையில்... இறைவன்... தான் அவளுக்கு கொடுத்த உடலென்னும் வாடகை வீட்டிலிருந்து அவளை வெளியேற்றி விட்டானே...!

ஆக 15-21, 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு

'விதியின்படி நடக்கும்' என்பது ஒரு நியதியாக இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் அது எனக்கு மட்டும் உரிய கூற்றாக இருப்பதுதான் என்னால் புரிந்து கொள்ள முடியாத விடயமாக இருக்கிறது.

ஆனாலும் தங்கச்சி பாவம். ஆஸ்பத்திரியிலை சேர்த்து எத்தனை நாளாய்ப் போய்ச்சுது!

இண்டைக்கு 'சேர்ஜன்' பார்ப்பார். அவளுக்கு ஒரு விடிவு வந்துவிடும். காளித்தாய் ஒரு வழியைக் காட்டாமல் விடமாட்டாள்.

அத்தானுக்கு ஆறுதலாய் இருக்கும். கலியாணம் முடிச்சுக்கொண்டு வீட்டை விட்டு தனிக்குடித்தனம் போய்விடுவார்.

என்ரை மனதுக்கும் ஒரு ஓய்வு வந்துவிடும் போலை...!

''லாவண்யா... என்னம்மா செய்து கொண்டிருக்கிறாய்...? இடியப்பத்தை தட்டிலை பிழிந்து வைத்திருக்கிறேன். மெலிதாகச் சீரகச் சம்பல் ஒன்று செய்து கொடுத்தால் சுகன்யாவின் வாய்க்கு இதமாக இருக்கும்.

வந்து என்னெண்டு பாரன்!''

அம்மாவுக்கு தங்கையிலை அப்படி ஒரு கரிசனை!

'சேர்ஜன்' பத்து மணிக்கெல்லாம் வந்து விடுவார். தங்கையின் சிறுநீரகத்திலுள்ள கோளாறை இனம் கண்டு விட்டால் பிறகு எப்படியும் பரிகாரம் செய்து விடலாம். மாதா மாதம் இரத்தம் சுத்திகரிப்பதற்காக அலைய தேவையில்லை.

அதன் பின் அவள் அதிஷ்டக்காரியாகி விடுவாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தானிலை எவ்வளவு அன்பும் எதிர்பார்ப்பும் நான் வைத்திருந்தனான். அப்பா சாகும்போது சொன்ன வார்த்தைகள் எப்பவும் என் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

'என்னுடைய இரண்டு பிள்ளைகளிலை ஒருத்தி என் தங்கையின் மகனைத்தான் செய்ய வேண்டும்!'

அப்படியே மாமிக்கும் கூறியிருப்பார் போலை!

அத்தான் பெண் கேட்டு வரும் வரைக்கும் என்னுடைய 'விவாக நினைப்பு' என்ற சிம்மாசனத்தில் அத்தான் தான் வீற்றிருந்தார்!

தங்கை எனக்கு மிக இளையவள். அவள் அப்போ 'கண்டுபிடி, கண்டுபிடி' விளையாடிக் கொண்டிருந்தாள்.

அத்தான் வந்து போனார்...

அம்மா இலாவகமாக எனக்கு எடுத்துரைத்தாள்... "பிள்ளை... உன்ரை தங்கச்சி தானே... விட்டுக் கொடு. காளி ஆச்சி உனக்காக கண் திறக்காமல் இருக்கப் போறாளே?"

என்னுடைய முதலாவது விட்டுக் கொடுப்பு.

'கோலிங் பெல்' சத்தம் கேட்கவும் அம்மாவின் குரல் 'வோசிங்' ரூமிலிருந்து கேட்டது.

"பிள்ளை, சாப்பாடு பார்சலையும் எடுத்து வைத்து கூடையை கொத்தானிட்டை குடு. நான் பத்து நிமிடத்திலை ஆஸ்பத்திரிக்கு வந்து விடுவன் எண்டு சொல்லு."

அத்தானிடம் கூடையை கொடுத்தபோது மின்னல் போல் ஒரு நினைப்பு என்னைத் தாக்கியது...

தங்கச்சிக்கு ஏதாவது நடந்தால் அத்தான் என்னைத்தான் முடிக்கக் கேட்பார். இது என்ன அநியாயம்? மனம் சில வேளைகளில் நாங்கள் கருதாததுகளையும் தானல்லோ நினைக்குது? தங்கச்சி பாவம். அவள் வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தானை அனுப்பிவிட்டு வீட்டைக் கூட்டிப் பெருக்கினேன்.

அத்தானுக்கு தங்கச்சியிலையும் ஆசை! வீட்டிலையும் ஆசை!

அம்மாதான் கேட்டவா... ''பிள்ளை, உன்ரை தங்கச்சிதானே...? யாரோவோ...? வீட்டை தங்கச்சிக்கு கொடுப்பம்...!''

என்னுடைய இரண்டாவது விட்டுக் கொடுப்பு!

அம்மா ஆஸ்பத்திரியால் திரும்பி வர இரண்டு மணியாய்ப் போய்விட்டது. வழக்கத்துக்கு மாறாய் அத்தானும் அம்மாவுடன் கூட எங்கள் வீட்டுக்கே வந்திருந்தார்.

இருவரின் முகத்திலும் ஈயாடவில்லை. அத்தான முன் மண்டபத்தில் அமர அம்மா ஓடிப்போய் கட்டிலில் விழ... நானும் பின்னால் போனேன்.

அம்மா அழுகையின் மத்தியில்... ''பிள்ளை... கொத்தான் உன்னோடை கதைக்க வேணுமாம். போய்க் கதை.''

எனக்கு ஆயிரம் நினைப்புகள் தோன்றி உள்ளத்தில் நர்த்தனம் புரிந்தன!

தங்கச்சிக்கு கடுமையோ... நான் கருதாமலோ என்னவோ எனது மனம் நினைத்ததுபோல அத்தான் எனக்கே கிடைத்து விடுவாரோ... சே... அப்படியெல்லாம் நடக்கக் கூடாது.

முகத்தை மூடியிருந்த இரண்டு கரங்களையும் விலக்கிவிட்டு... அத்தான் கூறினார்.

''லாவண்யா... சுகன்யாவுக்கு மற்ற சிறுநீரகத்திலும் தொற்று ஏற்பட்டு விட்டது. அவள் தப்புவது கஷ்டம்...''

என்னுடைய நெஞ்சு 'பட பட' என அடித்தது. 'அப்படியும் நடந்துவிடுமோ...?'

சிறிய நேர இடைவெளியில் அத்தான் கேட்டே விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் எப்படி மறுக்க முடியும்? ஏற்றுக் கொண்டேன்.

ஆம் என் மூன்றாவது விட்டுக்கொடுப்பு!

எனது இரண்டு சிறுநீரகத்தில் ஒன்றை எனது தங்கைக்கு கொடுப்பதற்கு நான் ஏன் தயங்க வேண்டும்...?

நீரை உகுத்தன... என் விழிகள் இரண்டும். இதயத்தை மட்டும் இறைவன் ஏன் ஒற்றையாய்ப் படைத்தான்?

**ஒக் 31, நவ 6, 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகப்பேறு

'ச்சே... இந்த இளவயதிலை... இப்படியானதொரு அவல நிலையிலை... ஒரு பெண் கர்ப்பிணியாகியிருக்கக் கூடாது!

கவலையுடன் எனது தலையில் குட்டிக்கொண்ட பின்... அக்கம் பக்கம் பார்த்தேன். பிள்ளையார் சந்நிதான வாசலில் நின்று நான் அவ்விதம் நடந்து கொண்டதால், எவருமே அதனைப் பொருட்படுத்தவில்லை.

தெரு விளக்குகள் மின்னத் தொடங்கியிருந்தன. இரண்டாந் தடவையாக வீதியை வலம் வந்தபோது, மீண்டும் எனது விழிகள் அந்த அபலைப் பெண்ணைத் தேடி அலைந்தன. முந்தானையைச் சரிசெய்துகொண்டு சுற்றும் முற்றும் பார்த்தேன்.

இப்பொழுது அவள் உப்பிப் பருத்திருந்த தனது அடி வயிற்றிற்கு ஆதாரமாக தனது கரங்களை அணைத்தவண்ணம் வேகமாக நடந்து கொண்டிருந்தாள்.

மெல்லிய நெடிதுயர்ந்த உருவம். எவரையும் கண்டுகொள்ளாத நிமிர்ந்த நேரிய நடை, அவள்தான் ஜான்ஸி!

அந்தத் தெருக்களில் அவளது பாதகமலங்கள் படாத இடமே கிடையாது. பாடசாலைச் சிறுவர்களுக்கு அவள் ஒரு விசித்திரப் பிராணி! இளைஞர்களின் கடைக்கண் வீச்சுக்கு அவள் ஒரு ஜூலியட்! ஆனால் அவளது பார்வைக்கோ அனைவரும் எதிரிகள்! அவளது வழியில் குறுக்கிட்ட எவரையுமே அவள் திட்டித் தீர்ப்பதையே நான் கண்டிருக்கிறேன்.

பெண்ணை சரஸ்வதியாக லக்ஷ்மியாக போற்றி துதிப்பவனும் மனிதன்தான். இடம் கண்ட இடத்தில் நரிகளாக மாறி அவளை இரையாக குதறி வைப்பவனும் அவனேதான். என்னே உலகு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கென்று ஆசைகள்... பாசங்கள்.... அன்பு செலுத்தவும் செலுத்தப்படவும் பற்பல உறவுகள்... பந்தங்கள்...

ஆனால் ஜான்ஸியின் உலகமோ வேறாக இருந்தது. அங்கு அவள் சந்தித்தவை...

பாசங்கள் அல்ல.... வேஷங்கள்!

ஆசைகள் அல்ல... மோசங்கள்!

முன்றாம் முறையாக நான் வீதி வலத்தை முடிக்கவும், சந்நிதான முன்றலில் ஏற்பட்ட ஒரு பரபரப்பு எனது கவனத்தை அங்கு திசை திருப்பியது.

ஜான்ஸியை சில பெண்கள் 'ஆட்டோ' ஒன்றில் ஏற்றி விட்டு விலகி நிற்கவும்... அந்த ஓட்டுநர்... ''யாராவது ஒரு பொம்பிளை ஏறுங்களேன்மா!'' என்று அதட்டி குரல் கொடுத்தான். யாரும் அசையவில்லை. நான் காலதாமதம் செய்யாமல் ஏறிக் கொள்ளவும் வண்டி புறப்பட்டது.

ஒரு 'டென்ரல் சேர்ஜன்' என்ற முறையிலும் அந்த ஆதார வைத்தியசாலையில் கடமை புரிபவள் என்ற வகையிலும் எனது செல்வாக்கைப் பிரயோகித்தேன். கடமையிலிருந்த தாதியிடம் கூறினேன்...

''எனக்கு வேண்டிய பெண், கொஞ்சம் மனநிலை பாதிக்கப் பட்டுள்ளாள். அதிக கவனம் எடுக்க வேண்டும். அவசியமென்றால் எனக்கு தொலைபேசி அழைப்பு தரவேண்டும்!''

தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி விட்டு கால தாமதமாகி வீடு திரும்பினேன்.

கணவருக்கான வழமையான பணிவிடைகள்... குழந்தைக ளுடனான கொஞ்சல் குலாவல்கள்...

தூக்கம் வர மறுத்தது. எண்ணங்கள் அடி மனத்தளத்திலிருந்து குமிழியிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொருநாள்... வேகமாக வந்த 'ஆட்டோ' ஒன்று பாதசாரியாக சென்ற என்னை நெருங்கி நிற்கின்றது. அந்த ஓட்டுநர் ஜான்ஸியை எனது காலடியில் இறக்கிவிட்டு.... "அம்மா, சில துரோகிகள் இந்தப் பெண்ணை துரத்திட்டு வர்ராங்க... நீங்கதான் காப்பாத்தணும்!"

என்னிடம் அவளை ஒப்படைத்துவிட்டு மறைந்துவிட்டான். ஒரு வழியில் அவள் ஜான்ஸியின் சகோதரன் என்பதை பின்னர் அறிந்து கொண்டேன்.

ஜான்ஸியை பாதுகாக்க நான் எடுத்த முயற்சிகள் பயனளிக்க வில்லை.

ஆண் பெண் பேதமதை அறியாத அப்பேதை... நன்மை தீமைதனை வேறுபடுத்த முடியாதவளாக, அஞ்சுவது அஞ்சாமல், இரவு பகல் என்றுணராது... கட்டுப்பாடுகளை மீறி எப்போதும் எங்கணும் அலைந்தாள்!

3702

அடாவடித்தனத்தை எதிர்க்கும் ஆற்றலும் அறிவும் படைத்த இளம் பெண்களையே காலிடுக்கில் வைத்து குதறிவிடக் கூடிய கருடன்கள் வாழும் இப்பூமியில் அபலைகளுக்கு யார் துணையோ?...

அவளது எழில் கொஞ்சும் தூய்மையான செழுமையான உருவம், அவளுக்கு விரோதியாக இருக்கப்போவதை உணர்ந்து நான் கண்ணீர் உகுத்தேன். அப்படியே நடந்தும் விட்டது!

கூலிக்காக உயிரைப் பணயம் வைத்து இராக்காவல் புரியும் கும்பல் அவளை நுகர்ந்து பார்த்து வீசிவிட்டது.

அழுதேன்... அழுதேன்... பெண் இனத்திற்காகவே அழுதேன்....

நான் அரைத்தூக்கத்தில் போயிருக்க வேண்டும்... யாரையோ திட்டித் தீர்த்திருக்க வேண்டும். கணவர் தூக்கத்திலிருந்து அரண்டு கேட்டார்.

"யார் வெறியர்கள்?"

தொலைபேசி அடித்தது, ஓடிச்சென்று 'ரிசீவரை' கையில் எடுத்தேன். அதே தாதி! "மேடம்... 'டேற்' பிந்தி விட்டது. குழந்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக அளவில் வளர்ந்து விட்டது. 'இன்டியூஸ்' பண்ணித்தான் மகப்பேற்றை செய்ய வேண்டியிருந்தது. இப்போ அந்தப் பெண் மயக்கத்தில் இருக்கிறாள். அவள் நினைவுடன் இருக்கும்போது எவரையுமே தனது எதிரியாக கருதிவந்ததால் குழந்தையை அவளிடம் கொடுக்கப் பயமாக உள்ளது. நீங்கள் வந்தால் நல்லது..." இழுத்தாள்.

கணவனிடம் அனுமதி பெற்று காரை வைத்தியசாலைக்கு செலுத்தினேன். சுய நினைவு திரும்புகையில் மெதுவாக அவளை எனது மார்புடன் சாத்தியபடி குழந்தையை கொடுக்கும்படி தாதியை பணித்தேன்.

பனித் துளியின் சிலிர்ப்பில் முகிழ்த்த புத்தம் புது மலரை அவளது மடியில் வைத்தபோது... எனது மனம் இலேசாக படபடத்தது. எனது கரங்கள் அவளது கைகளை இறுக்கின.

தனது பிஞ்சு கை கால்களை நீட்டி நிமிர்த்தி... விழிகளால் தனது தாயைத் தேடும் அரும்பினை ஜான்ஸி குனிந்து நோக்கினாள். என்ன நினைத்தாளோ!

விம்மி விம்மி அழத் தொடங்கினாள். நான் ஆறுதல் கூறி தேற்றவும்... அவள் தன் உதிரம் ஈய்ந்த அப் பாசக் கொழுந்தினை கைகளில் ஏந்தி ஓயாத முத்தம் கொடுத்தாள்.

மனம் கசிந்து கண்ணீராக அருவியிட்டது! எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த அபலைப் பெண்ணுக்கு வேண்டியதை...

அண்ணன் ஸ்தானத்தில் அந்த 'ஆட்டோ' ஓட்டுநர் சாதிக்காததை...

ஒரு கணவன் ஸ்தானத்தில் அந்தக் கயவர் சாதிக்காததை....

பிள்ளை ஸ்தானத்தில் அந்த பச்சிளம் குழந்தை சாதித்து விட்டதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் தலைமுறைகள்

பதினேழு வருடங்களுக்கு முன் இந்த சமுதாயத்தின் மீது வீசத்தொடங்கிய சூறாவளி... பலரைப் போராட்டப் பாதைக்கு தள்ளியது, சிலரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தது!

'கடவுளே நீ ஏன் இன்னமும் என்னை உயிரோடை வைத்திருக்கிறாய்...? இப்ப நான் என்ன செய்வன்...? எந்த ஒரு பெண்ணுக்கெண்டாலும் இப்படியொரு சோதனை வந்திருக்குதா...?'

சுமதி கண்ணீர் விட்டு அழுது புலம்பினாள். பதினைந்து வருட காலத்துக்கு முன், சுந்தரனைப் போராட்டப் பாதைக்கு சென்று விடாதபடி தடுத்து, வெளிநாடு செல்லவும் விடாமல் விவாக பந்தத்துக்குள் கொண்டு வந்து விட்டமைக்குரிய காரணிகள் பலவற்றில் அவளுடைய அழகும் இளமையும் முக்கிய பங்கு வகித்தன.

ஓராண்டு கால மகிழ்ச்சிகரமான இல்லற வாழ்க்கையில் அழகான பெண் வாரிசு ஒன்றை அவள் பெற்றெடுத்தாள். சுகன்யா என்று பெயரிடப்பட்ட அக் குழந்தையும் அவர்களது இன்ப வாழ்க்கைக்கு மேலும் உரமூட்டியது.

விதி என்ன மைதானம் அமைத்தா விளையாடுகிறது...? மனிதருடைய வாழ்க்கையில் புகுந்தல்லவா விளையாடிவிட்டுப் போய் விடுகிறது!

பாதுகாப்பு.... சுற்றிவளைப்பு என்ற பெயர்களில் சுந்தரன் பூசா முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டான்.

ஓராண்டு காலத்தில் சமாதானப் படை வரவும் பலர் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் சுந்தரன் பற்றிய தகவல் எதுவும் இல்லாமலே இருந்து வந்தது.

அதன் பிறகு ஆண்டுகள் பல கழியவும் பற்பல சம்பவங்களும் நடந்தேறிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சுந்தர் விடுவிக்கப்பட்டதாக திடீரென்று தகவல் வந்திருக்கிறது!

சுமதியின் இரட்டையர்கள் இருவரும் ஏதோ ஒரு பொருளுக்காக அடி உதைபடவும் சுகன்யா அவர்களை சமாதானப்படுத்தி வைத்தபின் பேசினாள்...

''அம்மா.... அப்பாவை நான் உடனே பார்க்க வேணும். அப்பா எங்களைப் பார்க்க வாறதை மற்றவை ஏன் தடுக்க வேணும்...? எனக்கு விளங்கேல்லை...''

சுகன்யா பதின்மூன்று வயது நிரம்பிய பருவப் பெண்ணாக இப்போது மலர்ந்து விட்டாள். அவளுக்கு புத்தி தெரிந்து தனது தந்தையை தேடத் தொடங்கிய சில காலத்துக்கு சுமதி அவளை பல பொய்கள் கூறி தேற்றி வந்தாள். ஆனால் ஊர்மக்களின் கதைகள் அவள் காதிலும் விழத் தொடங்கிய பொழுது தனது தந்தைக்கு நேர்ந்திருக்கக்கூடிய கதியை புரிந்து கொண்டு தந்தையின் படத்துக்கு பூமாலையிட்டு வணங்கத் தொடங்கி, இன்று வரையிலும் அதையே செய்து வருகிறாள்.

சுமதியோ சுந்தரனைப் பிரிந்து பத்தாண்டு காலம் பூவுடனும் பொட்டுடனும் நம்பிக்கையுடன் வாழ்ந்தாள். உற்றாரும் உறவினரும் அவளது நம்பிக்கையை தவிடு பொடியாக்கினர்.

சுகன்யா சகோதர உறவுமின்றி தனியாக இருந்து வாழ்நாள் பூராகவும் கஷ்டப்படக்கூடும் என்ற எண்ணம் சுமதிக்கு மன நெருடலாகவே இருந்து வந்தது. சுகன்யா பருவமடைந்தபின், தான் எந்த முடிவுக்கும் போக முடியாது என்ற நெருக்குதலுக்கு உட்பட்டு உறவினரின் மறு மண நிர்ப்பந்தத்துக்கு கட்டுப்பட்டாள்.

சிவா அவளை அன்புடன் நேசித்ததில் அவள் நடந்தேறிய துன்பங்களையெல்லாம் மெல்ல மெல்ல மறந்து தெளிந்தாள்.

தொடர்ந்து நான்கு வருட காலத்தில் சுமதிக்கு இரண்டு குழந்தைகள் இரட்டையர்களாகக் கிடைத்ததும், சுகன்யா பருவமடைந்ததும் அக் குடும்பத்தில் நடந்தேறிய மங்கள கருமங்களாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகன்யா மீண்டும் தாயை வற்புறுத்தினாள்... ''அம்மா... அப்பா எங்களைப் பார்க்க வாறதை மற்றவை ஏன் தடுக்க வேணும்?''

மகள் கண்ணீர் விட்டு அழுவதை தாங்க முடியாமல் சுமதி அவளை அரவணைத்தபடி, தானும் அழத் தொடங்கினாள்... ''அப்பாவைப் பார்க்கலாமம்மா. நீ கட்டாயமாக பார்க்கத்தான் வேணும்... உனக்கு அப்பா ஒருவர் தான்... ஆனால் நான் தான் பெரிய தவறைச் செய்து விட்டேன்... எங்கடை கலாசாரம் பணித்ததை நான் மீறிப் போட்டன்... அதாலைதான் நான் இண்டைக்கு தண்டிக்கப் பட்டிருக்கிறன்.'' சுமதி அத்துடன் நிறுத்திக் கொண்டாள்.

தான் தனது மகளுக்கு தந்தை ஸ்தானத்தையும் சகோதர உதவியையும் ஏற்படுத்திக் கொடுக்க நினைத்ததை ஓரளவு நியாயப் படுத்தலாம். ஆனால் கணவன் ஸ்தானத்தை தான் மற்றொருவருக்கு கொடுத்தது எப்படி பெரிய தப்பாக போய்விட்டதென்பதை சுமதி உணர்ந்து கலங்கினாள்.

ஒரு பெண். இரண்டு கணவன்மார்!

யாருக்கு நான் கட்டுப்படுவது? யாரை நான் தெய்வம் என்று போற்றுவது...? யாருக்கு நான் கடமைகள் செய்வது...? யாருக்கு நான் என்னைக் கொடுப்பது...?

விண்வெளி பிரயாணத்துக்கு பயிற்சிபெறும் வீரரை மின் இராட்டினத்தில் வைத்து சுழற்றும்போது அவருக்கு ஏற்படும் துன்பத்தை சுமதி அனுபவித்தாள்!

சுகன்யா கொழும்பு வந்து, உயிரினும் மேலான தனது தந்தையை சந்தித்து ஒரு மாதகாலமாகிவிட்டது. அவள் நினைத்ததைக் காட்டிலும் சுந்தரின் பாசம் அவளைத் திக்குமுக்காட வைத்து விட்டது. பள்ளித் தோழிகளுக்கும் தன்னைக் கிண்டல் செய்த ஊராருக்கும் தந்தையைக் காட்டி 'இவர் தான் என் அப்பா' என்று கூறி பெருமிதம் கொள்ள அவள் துடித்தாள். தன்னைப் பாசம் காட்டி வளர்த்த தாய் மீது கூட அவளுக்கு இப்போ கொஞ்சம் கோபமாக இருந்தது. வெள்ளை மனம் கொண்ட இந்த அப்பாவுக்காக காலம் காலமாக அம்மா காத்திருந்திருக்கலாமே என அந்த பிஞ்சு மனம் எண்ணி துவண்டது!

சுந்தரின் பிரிவால் கலங்கி வெளிநாடு சென்றுவிட்ட அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் சகோதரங்கள் யாவரும் அவனுக்கு ஆயிரக் கணக்கில் 'டொலர்களை' அனுப்பிக் கொண்டிருந்தது மட்டுமன்றி, அவனையும் சுகன்யாவையும் வெளிநாட்டுக்கு எடுத்துவிடும் தீவிர முயற்சியிலும் செயற்பட்டுக்கொண்டிருந்தனர்.

''பிள்ளை சுகன்யா... நாங்கள் இந்த 'லொட்ஜிலை' தங்கியிருக் கிறது அல்ல முடிவு. அதேபோல அம்மாவும் நானும் நிரந்தரமாக பிரிந்து வாழவேண்டிய கட்டாயத்தையும் யாராலையும் தடுக்கவும் முடியாது. ஆனால் நீ விரும்பினால் அம்மாவுடன் சேர்ந்து வாழலாம் அல்லது என்னுடன் வெளிநாடு வந்து விடலாம். இதை முடிவு செய்ய வேண்டியது நீயும் உன்னுடைய அம்மாவும்தான்!.. சுகன்யா தன்னுடன் வந்துவிடவேண்டும் என்ற ஆசையுடன் உறுதிப்பாடும் சுந்தரின் மனத்திலிருந்தாலும் சுமதிமேல் கொண்ட பாசம் அவனை நடு நிலைமையுடன் பேச வைத்தது.

சுகன்யாவுக்கோ... தன்னை வளர்த்தெடுத்து ஆளாக்கிய தாய்மேல் பாசம் ஒரு புறம்... இதுவரை காலமும் தந்தைக்காக தான் ஏங்கி அனுபவித்த துன்பம் மறுபுறம்....

எதிர்பாராதபடி இருவருக்கும் இலகுவில் விசாவும் கிடைத்து விட்டது! தாயுடன் பல தடவை சுகன்யா தொலைபேசியில் கதைத்த போதும் சுந்தர் அவர்களது முடிவுக்காக விலகியே காத்திருந்தான். மனைவியை பறிகொடுத்த நிலையில் மகளின் பாசத்துக்காக அந்த ஏழை மனம் துடித்தது... சுந்தரின் வாரிசான சுகன்யாவை இழக்க மட்டும் அந்த அபலைத் தாய் எப்படிச் சம்மதிப்பாள்?

சுகன்யா முடிவாகக் கூறினாள்,
''அப்பா நான் உங்களோடையே வரப் போறன்!''

இரத்த உறவுகளான தனது தாயையும் தம்பிமார் இருவரையும் விட்டுப் பிரிந்து அநாதரவாக பல வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த தனது அன்புத் தந்தையுடன் செல்வதற்கு சுகன்யா முடிவெடுத்தமையை பலவாறு நியாயப்படுத்தலாம்...

ஆனால் பதினேழு வருடங்களுக்கு முன் இந்த சமுதாயத்தின் மீது வீசத் தொடங்கிய சூறாவளி... இப்போதும்... இந்த புதிய தலைமுறையையும் ஒன்றில் போராட்ட பாதைக்கோ அன்றேல் வெளிநாட்டுக்கோ அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறது!

ஏப், 9-15, 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள காதலனே

'நான் பத்திரிகை நிருபர் இல்லையப்பா. நான் ஒரு சிறுகதை ஆசிரியர்.'

விடியற் காலையிலேயே வந்து 'மூட்'ஐ குழப்பி விட்டு போய் விடுவான்கள். அதற்குப் பிறகு எதை எழுத வெளிக்கிட்டாலும் அது உருப்பட்ட மாதிரியாய் வராது.

தலைவாயிற் கொட்டில் கொஞ்சம் பதிந்துதான் போய்விட்டது. ஆனால் ஓலையால் வேய்ந்திருப்பதால் குளிர்மைக்கு குறைவில்லை. புத்தகங்கள் அடுக்கி வைத்திருக்கின்ற இந்த றாக்கையை தூக்கி எறிய வேணும். ஒரு புத்தகத்தைக் கிண்டி கிளறி எடுக்கிறதுக்கு முன்னர் ஒற்றைக் காலில் நிற்கிற மாதிரி தடுமாறிக் கொண்டு ஆடுது. போர்த்துக்கேயன் இந்த நாட்டுக்கு வந்த போது கொணர்ந்த றாக்கையை இடப் பஞ்சம் காரணமாக என்னுடைய வீட்டில் போட்டுவிட்டு போயிருப்பான் போலை!

"ஓம், ஓம் வாருங்கோ..." யாரோ வாசல் படலையில் நின்று கூப்பிடுதுகள்... பெண் குரலாய்க் கிடக்கு... போய் பார்ப்பம்.

"ரீச்சரா?... ஏன் வாசலில் நின்று தடுமாறுகிறீர்கள். இஞ்சை நாய் கீய் என்று எதுவுமே இல்லை. நேரே வரவேண்டியதுதானே?"

நானே பார்சல் சாப்பாட்டிலை உயிரைப் பிடிக்கிறேன். இந்த வள்ளலுக்குள் நாய் என்னை அண்டி நிற்குமா? என்று மனதிற்குள் நினைத்து சிரித்த பின்னர் அந்நினைப்பை அங்கேயே தகனம் செய்து விட்டேன்.

"ஐயா வணக்கம்...." என்ற முகவுரையுடன் ஆரம்பித்தாள்.

"வணக்கம், வணக்கம். என்ன விசயம் சொல்லுங்கோ..."

"ஐயாவிடம் நான் பெரிய உதவியொன்றை எதிர்பார்த்துத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனான். சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஐயாவினுடைய கதைகள் என்றால் என்னுடைய ஒரே மகளுக்கு உயிர். ஐயாவினுடைய கதைகளில் குறிப்பிடப்படுகிற சில புத்திமதிகளை அவள் அச்சொட்டாகப் பின்பற்றுவாள்... இப்போ எனது மகளுக்கும் எனக்குமிடையில் ஒரு தகராறு... இதை நீங்கள் மனம் வைத்தால் இலகுவாக தீர்த்து விடலாம்."

என்னுடைய கதைகளை பத்திரிகைகளில் கண்டபடி கிழிச்சு எழுதுறாங்கள். விமர்சனம் என்று நானும் பொறுத்துக் கொள்ளுறன். நடைமுறையிலை எனது கதைகளுக்கு எப்படி மதிப்பு இருக்குது என்பது இவர்களுக்கு எங்கே புரியப் போகுது!

"விளங்குது விளங்குது... உங்களுடைய மகளுக்கு புத்தி சொல்லி நான் கதை எழுத வேணும்... அது பத்திரிகையில் பிரசுரமாக வேணும்... சரிதானே!"

"ஓம் ஐயா ஆனா கதைக்கான கருவை நானே சொல்லுறன். நீங்கள் அதற்கு வடிவம் கொடுக்க வேணும்... ஒரு பாசமிக்க தாய்... ஒரே ஒரு மகள். மகள் தாயின் விருப்பத்திற்கெதிராக காதலிக்கிறாள்.

தாய் பலவிதமாக புத்திமதி கூறுகிறாள்... பல தந்ரோபாய நடவடிக்கைகளையும் எடுக்கிறாள். எதற்குமே மகள் மசியவில்லை. இந்த நிலையில் தாய் தன்னைப் பணயம் வைக்கிறாள்...

'என்னுடைய சொற்படி நீ நடக்காவிட்டால்... உனது காதலைத் துறக்காவிட்டால் நான் தற்கொலை செய்துவிடுவேன்' என்று எச்சரிக்கை செய்கிறாள்.

இந்த நிலையில் மகள் எடுக்கப்போகும் முடிவு என்ன என்று கேட்டு கதையை 'சஸ்பென்சிலை' முடித்து விடுங்கோ ஐயா"

பெரிய பெரிய எழுத்தாளரே சிறுகதை எழுதுவது எப்படி என்று மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்க இயலாது என்று கையைப் பிசைந்து நிற்கின்றபோது.... இந்த 'ஐந்தாம் கிளாஸ் ரீச்சர்' கரு என்றால் என்ன என்பதை புரிந்து கொண்டு எனக்கே விபரித்தது ஆச்சரியமாகப் போய்விட அதைக் கதையாக மெருகூட்டி எழுதி பிரசுரத்திற்காக தபால் செய்தும் விட்டேன்.

எதிர்பார்த்தது போலவே இரண்டு கிழமைகளில் பத்திரிகையில் கதை பிரசுரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிடம் மகள் மன்னிப்புக் கோரி தனது காதலை தியாகம் செய்வதுபோல காட்டி முடிவை பூர்த்தி செய்திருந்தது திருப்திகரமாக இருந்தது.

இந்த எனது கதையை வாசித்துவிட்டு மகள் மனம் திருந்தி நடப்பதாகவும்... தாய் எனது பாதங்களில் விழுந்து வணங்கி பெருமிதப்படுவது போலவும் மனதில் எண்ணங்கள் உதித்தன.

ஓர் எழுத்தாளனுக்கு இதைத் தவிர வேறு என்ன விருது ஐயா வேண்டிக் கிடக்குது...!

அன்று மாலையிலேயே 'ரீச்சர்' என்னை தனது இல்லத்திற்கு அழைப்பதாக செய்தி வந்தது.

பெருமிதத்துடன் துவிச்சக்கர வண்டியில் புறப்பட்ட நான் 'சென்றி பொயின் ரில்' நின்ற 'பொலிஸ்' க்குத் தலையைத் தாழ்த்தி... 'பெற்றோல் செட்' ஐயும் கடந்து... ஏற்றம் காரணமாக பிரதான ஒழுங்கையில் வண்டியை உருட்டி... குறுக்கு ஒழுங்கைக்கு திரும்பி நிமிரவும் கறுத்த கொடிகள் கண்ணில்பட்டன!

நெஞ்சு திக்கென்றது.

'அம்மா ஏன் தற்கொலை செய்வான்? நானே உயிரை மாய்த்து விடுவம்' என்று அந்தப் பிள்ளை முடிவெடுத்து தாறுமாறாக ஏதும் செய்து போட்டுதோ....?

இப்போ பாதை ஏற்றமாக இல்லாவிட்டாலும் கூட நான் வண்டியை உருட்டியபடியே தயங்கி நடந்தேன்...

'ரீச்சர் வீட்டுப் படலைக்கு வந்தபோதுதான் மரணச் சடங்கு அடுத்தடுத்த வீட்டில் என்பது உறுதியாயிற்று.

சில கணங்களில் நானே என்னுடைய கதையை சாமான்யமாக கணித்து விட்டது கவலையைத் தந்தது.

'ரீச்சரின் அழைப்பிலும் உபசாரத்திலும் நம்பிக்கையடைந்த நான் அந்த சாய்மனைக் கதிரையில் வசதியாக அமர்ந்துகொண்டு வீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நோட்டம் விட்டேன்.

"ஐயா.... நாங்கள் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது சரியாகத்தான் போய்விட்டது..."

கண் கலங்கி அழுதாள்.

'பிளவுசின்' மேல் விளிம்பில் கைவைத்து உருவி எடுத்த கடிதமொன்றை என்னிடம் நீட்டவும்... நான் பெற்றுக் கொண்டு படித்தேன்.

'அன்புள்ள அம்மா... நான் எனது காதலை தியாகம் செய்யாது போனால் நீங்கள் தற்கொலை செய்து விடப்போவதாக எச்சரித்தது என்னை கடந்த சில நாட்களாக குழப்பி விட்டிருந்தது. ஆனால் இன்று எனது அபிமான எழுத்தாளர் தனது கதையொன்றில் ஒரு பெண் தனது தாயின் மேல் வைத்த பாசம் காரணமாக தனது காதலை துறப்பதாக எழுதியிருந்தார். அந்த ஏழைப் பெண்ணின் மனம் எவ்வளவு துயருற்றிருக்கும் என்பதை நான் எனது நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன்....

காதலனுக்காக உயிர்த்தியாகம் செய்த காதலி பற்றியும் காதலிக்காக உயிர்த்தியாகம் செய்த காதலன் பற்றியும் வரலாறுகள் உண்டு. ஆனால் மகளுக்காக உயிரை மாய்த்துக் கொண்ட தாய் பற்றிய வரலாறு ஏதும் உண்டா?

என்னை மன்னிப்பீர்களா?

நான் எனது எதிர்கால கணவனுடனேயே புறப்பட்டு விட்டேன்.

என்றும் உங்கள் அன்பு மகள்'.

எனக்கு தலையே சுற்றியது. ஏதோ ஒரு உறுத்தல்.... நானும் புறப்பட்டேன்.... யதார்த்தத்தைத் தேடி...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலை

எனக்குள்ளாக தொடர்ந்து இருக்கின்ற மன உழைச்சல்தான் அது.... ஏன்தான் வெளிநாடு போகிறவர்கள் தாங்கள் தாங்கள் செய்கின்ற தொழிலை வெளியே சொல்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்களோ தெரியாது! நான் மட்டும் வெளிநாடு போய் தொழில் புரிய நேரிடும் காலத்தில் எனது தொழில் விடயத்தில் உண்மை கூற பின்னிற்க மாட்டேன்.

என்னுடைய நண்பன் கண்ணனும் இதே உறுதிப்பாட்டோடு ஃபிரான்ஸ் நாடு சென்று ஆறுமாத காலங்கள் ஆகிவிட்டன. அவனும் எனது நிலைப்பாட்டிலேயே உறுதியுள்ளவனாக இருப்பவன்.

கண்ணனும் நானும் உயர்தர வகுப்பில் கணித பிரிவில் கல்வி பயின்றதனால் ஏற்பட்ட நட்பைக் காட்டிலும் அவன் பிற கல்வி முயற்சிகளுக்காக தலைநகர் சென்ற பின்னரும் தொடர்ந்த எமது நட்பின் அன்னியோன்யம் தான் எனது பெற்றோர்கள் கூட அவன்மேல் பாசத்தை சொரியும் அளவுக்கு நெருக்கத்தை வளர்த்து விட்டது.

இதன் காரணமாகவே நான் எனது பெற்றோருக்கு நெருக்குதலைக் கொடுத்து எங்கள் வீட்டுக்கு புதிய தொலைபேசி இணைப்பு ஒன்றினைப் பெறக்கூடியதாகவும் இருந்தது.

எனது தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு நான் அவனுக்கு எழுதிய கடிதம் இது வரையில் அவனுக்குக் கிடைத்திருக்கக்கூடும்....

அவனது தொலைபேசி அழைப்பு எந்நேரமும் வரக்கூடும்.... இருளின் நிசப்தத்தை கலைத்த வண்ணம் தொலைபேசி அலாரித்தது... ஆனால் அது கண்ணனின் அழைப்பு அல்ல.

அம்மா இரவு ஆகாரத்தை மேசைக்கு எடுத்துவிட்டு, அப்பாவையும் என்னையும் சாப்பிடும்படி வற்புறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டு மேசையிலிருந்த.... எனக்கு அதி விருப்பமான உணவு வகைகளில் கூட எனது மனம் இலயிக்கவில்லை....

கையலம்பிவிட்டு சோர்வுடன் படுக்கைக்குச் சென்றேன். அரைத்தூக்கத்தில் ஆழ்ந்த சமயம், வீட்டில் ஏதோ பரபரப்பு....

''தம்பி, கண்ணாவின் தொலைபேசி அழைப்பு!'' அம்மா என்னை துயிலெழுப்பினாள்.

ஆர்வத்துடன் ஓடிச்சென்று 'ரிஸீவரை'ப் பெற்றுக் கொண்டேன். கண்ணனேதான்!

''என்னடாப்பா, எங்கே இருந்து பேசுகிறாய்?'' வினாவினேன்.

''நான் பாரீஸ் நகரில்.... 'ஈ.ஃபிள் டவருக்கு' அண்மையில்... பிரதான வீதியொன்றின் 'பேவ்மென்ரில்' நின்ற வண்ணம் 'ஹாண்ட் ஃபோனில் கதைக்கிறேன்.''

எனக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை! அமெரிக்க விண்கலம் சந்திரனில் தரை தட்டிய போது, அதில் பயணித்த விண்வெளி வீரர்கள் 'த ஈகிள் ஹாஸ் லாண்டட்' என்ற செய்தியை பூமியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அனுப்பியபோது அங்கிருந்திருக்கக் கூடிய விஞ்ஞானிகள் எப்படி குதூகலித்திருப்பார் களோ அப்படியானதொரு மகிழ்ச்சி வெள்ளத்தில் நான் திக்கு முக்காடினேன்.

''என்னுடைய கடிதம் உனக்கு எப்போ கிடைத்தது? இப்போ உங்க என்ன செய்கிறாய்?'' சந்தோஷ மிகுதியில் உரத்தே பேசினேன்.

அந்த சத்தத்தில் அப்பா தூக்கம் கலைந்து எழும்பி... ''யார்... எங்களுடைய கண்ணனா?'' என்று அம்மாவை நெருங்கி கேட்டபடி, தொலைக்காட்சி பெட்டியை இயக்கி 'மியூட்டில்' வைத்து இரசிக்கத் தொடங்கினார். நேரம் சாமம் 12.30 மணி.

''உன்னுடைய கடிதம் போன கிழமையே எனக்கு கிடைத்துவிட்டது. 'பே ஃபோன் காட்' வாங்க கையில் காசு இல்லை. அதுதான் சுணக்கம். இப்ப சம்பளம் கிடைத்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளம் என்றவுடன் 'என்ன வேலை?' என்றுதானே நீ கேட்க முற்படுகிறாய். விபரமாகச் சொல்லுறன் கேள்.

அதற்கு முன் நீ ஒரு முக்கியமான விடயத்தைத் தெரிந்து வைத்திருக்க வேணும். உன்னோடு தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருக்கின்ற நான், இடையிடையே பிரெஞ்சு மொழியில் வேறொருவருடன் உரையாடுவேன். அப்போ நீ 'லைனை' 'கட்' பண்ணாமல் பேசாமல் இருக்க வேண்டியதுதான். நான் எனது உரையாடலை முடித்த பின்னர் திரும்பவும் உன்னோடு கதைப்பேன்."

இப்போ நான் பேசினேன்....

''சரியடாப்பா... இப்போ 'லைன்' தானாவே கட் ஆவதற்கு முன்பதாக, நீ என்ன செய்கிறாய், சந்தோஷமாக இருக்கின்றாயா... அதெல்லாவற்றையும் சொல்லேன்!"

மீண்டும் கண்ணன் பேசினான்.....

''நான் இங்கு பத்துமாடி 'ஹோட்டல்' ஒன்றில் வேலை செய்கின்றேன். இதன் முதலாளி பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர். மாலை ஆறுமணிக்குப் பிந்தாமல் வேலைக்கு வந்துவிட வேண்டும். ஒன்பது மணிவரை மூன்று மணி நேரமும் வீதியோரங்களில் நின்று அந்த ஹோட்டல் பற்றிய விளம்பரமடங்கிய 'பப்ளிஷ் மென்ட் காட்' ஐ வீதியால் வருவோர் போவோருடன் பிரெஞ்சு மொழியில் உரையாடி அவர்களுக்குக் கொடுக்க வேணும். இதில் பிரச்சனை என்னவென்றால் இது ஒரு தடை செய்யப்பட்ட நடவடிக்கை. இதனால் பொலிஸ்காரரும் சி.ஐ.டி.காரரும் எப்பவும் என்மேல் பாயலாம். அந்த விடயத்தில் நான் கவனயீனமாக இருந்து பிடிபட்டால் அதற்குப் பொறுப்பு நான்தான். முதலாளி பொறுப்பு வகிக்க மாட்டார்...

'பப்ளிஷ்மென்ட் காட்' விநியோகிக்கின்ற கடமையில் தான் நான் இங்கே ஈடுபட்டிருக்கின்றேன். நான் ஏன் இடையிடையே பிரெஞ்சு மொழியில் உரையாடுகிறேன் என்பது இப்போ உனக்கு விளங்கியிருக்கும்...

இப்போ இங்கு எட்டு மணி. நான் வீதிக்கு மறுபுறத்தில் இருக்கின்ற 'ஹோட்டலுக்குப் போய்க்கொண்டிருக்கின்றேன். மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் முதலாளியைப் போய்ச் சந்திக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும். 'ஹோட்டலில்' 'கிறவுட்' சேர்ந்திருந்தால் மீண்டும் தெரு வீதிக்கு 'பப்ளிஷ்மென்ட் காட்' விநியோகிக்கப் போகத்தேவையில்லை. ஆனால் உணவு பரிமாறுகின்ற வேலையை பாரம் எடுக்க வேண்டும்.

இப்போ முதலாளிக்கு அண்மையில் வந்து விட்டேன். தொடர்பை துண்டித்துவிட்டு மீண்டும் எடுக்க முயற்சி செய்கிறேன்."

தொடர்பு துண்டிக்கப்பட்டதும் அம்மாவும் அப்பாவும் கண்ணனின் சுகம் பற்றி கவலை கொண்டு விசாரித்தார்கள்.

"பணிவும் பயந்த சுபாவமும் உள்ள பிள்ளை. எப்படி சமாளிக்கப்போகுதோ தெரியாது. பாவம்!" அம்மா கவலையை வெளிப்படுத்தினாள்.

மீண்டும் தொடர்பு ஏற்பட்டது.

"இங்கு இப்போ சரியான குளிர் காற்று வீசி அடிக்கின்றது. உனக்கும் கேட்கக்கூடியதாக இருக்கும்...." ஒரு கட்டட மறைவில் நின்று பேசுவதால் உனக்கு நான் கதைப்பதை கேட்கக்கூடியதாய் இருக்குது."

நான் கேட்டேன்... "என்ன மச்சான் ஒரு 'அம்புலன்ஸ்' சத்தம் மாதிரி ஏதோ கேட்கின்றது?"

அவன் கூறினான்....

"அது அன்புலன்ஸ் இல்லை. பொலிஸ் வாகனம் ஒன்று நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது.... அது பரவாயில்லை. உன்னை நான் எப்படியும் ஃபிரான்ஸ்சுக்கு எடுப்பன். நீ யோசிக்காதை!"

திடீரென்று தொடர்பு துண்டிக்கப்பட்டது. நிமிடங்கள் மணித்தியாலமாகின..... எனது அன்பு நண்பனுக்கு என்ன நேர்ந்திருக்கக்கூடும்? அறிமுகம் இல்லாத அன்னிய தேசம்... வேவு பார்க்கும் உளவுப் பிரிவு.... துரத்தும் நகர் காவல் படை.

எனது நண்பனின் உற்சாகமான குரல் என்னைவிட்டு ஆயிரமாயிரம் 'கிலோமீற்றர்' தூரம் விலகிச் சென்றது... எனது இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக்கின்றது. கண்கள் பனிக்கின்றன.

அம்மா பரிவுடன் கேட்கிறார்... ''கண்ணன் என்ன வேலையாம் தம்பி பார்க்கிறான்?''

ஒரு கணம் யோசிக்கிறேன். எவரும் எப்படியும் விமர்சிக்கலாம். ஆனால் அனுபவித்துப் பார்க்கும்போதுதான் தாக்கங்களை புரிந்து கொள்ள முடியும்!

நானும் வெளிநாடு செல்ல ஏற்படலாம்... மனச் சாட்சியை குழி தோண்டி புதைத்து விட்டு தயக்கத்துடன் கூறுகின்றேன்....

பிரபல நிறுவனமொன்றில் 'டிபுட்டி மனேஜர்'

**ஆக 13-19, 2000**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டவா கலியாணம்

மனிதனாக பிறந்த ஏவனும் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று எனக்குத் தெரிந்த எந்த நூலிலும் வற்புறுத்தி சொல்லப்படவில்லைதான்....!

ஆனால் நாற்பது வயதினை அண்மித்த இந்த நேரத்தில்தான் மெல்லிய ஒளிக்கீற்றுப்போல சில உண்மைகளும் உணர்வுகளும் எனக்கு புலப்பட தொடங்கியுள்ளன.

எவனாவது மற்றவன் கூறும் வரைக்குமோ படித்து அறிந்து கொள்ளும் வரைக்குமோ விவாகம் செய்யாமல் இருக்கின்றானா? அவனவன் தனது படிப்பையும் முன்னேற்றத்தையும் உறவுகளையும் கூட தூக்கி எறிந்துவிட்டு, விவாகம் செய்துவிட்டு போகும் காலத்தில் நான் மட்டும் விதிவிலக்காக....

அறை சாரளத்தை திறந்து வைத்தேன். காலை வெயில், நன்றாக நேரம் கடந்துவிட்டதை உணர்த்த.... அவசர அவசரமாக காலைக் கருமங்களில் ஈடுபடுகின்றேன்.

எனது மேலதிகாரி சங்கர் 'சேர்' என்மேல் எவ்வளவு அன்பும் பரிவும் வைத்திருக்கின்றார். அவரது துணைவியாரும் அவருமாக என்னை விவாகம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்திய சந்தர்ப்பங்கள் நினைவலைகளாக எனது மனதில் கிளர்ந்தெழுகின்றது

சற்று காலதாமதமாக 'மோட்டார் சைக்கிளில்' அலுவலகத்தை சென்றடைந்தேன். எனது மேசைக்கு போகும் போதே, சங்கர் 'சேரின்' அலுவலக அறையைத் திரும்பிப் பார்த்தேன். அவரைக் காணவில்லை.

மிகவும் நல்ல மனிதர். நன்றாக சிரித்து சிரித்து கதைப்பார். திடீரென்று எதற்கு கோபிக்கிறார் என்று தெரியாமலும் யார், எவர் என்று இல்லாமலும் எதிர்வாதத்தில் இறங்கி அவர்களைத் தரக்குறைவாக்கி, தனது தராதரத்தையும் குறைத்து....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் அப்படியல்ல. என்னை தங்கள் குடும்ப நண்பன் என்ற அந்தஸ்தில் வைத்து மரியாதை தந்து பழகுவார்.

'ட்ராயரை' இழுத்தேன். அலுவலக பணியாள் சில வார மலர்களை பாதுகாப்புக்காக அங்கு மறைத்து வைத்து நேரம் கிடைக்கும்போது படிப்பான். 'சினிமா' தாரகைகள்... அழகு ராணிகள்... 'மொடலிங்' செய்யும் பெண்கள் ஆகியோரின் படங்களை என்ன அழகாக 'கலர் பிரின்டிங்' செய்கிறார்கள்!

ஒரு நிழலின் அசைவு எனது கவனத்தை திசைதிருப்பியது. சங்கர் 'சேரின்' விடுதிக்கு அடுத்ததாக உள்ள விடுதியில் குடியிருக்கும் தொழில் பார்க்கும் பெண்! 'ஏன்?' என்ற கேள்வியை முகத்தில் தேக்கி, நிமிர்ந்து நோக்கினேன். ''சிவா... உங்களுடைய சங்கர் 'சேரின்' மனைவி எங்களுடைய விடுதியில் வந்து ஒளிந்திருக்கின்றா. சங்கருக்கும் அவவுக்கும் பெரிய சண்டை. நேற்று இரவு எங்களுடைய வீட்டில்தான் தங்கினவா. இன்று பாடசாலை ஆரம்பம். ஆசிரியையாக இருந்து கொண்டு முதல்நாளே போகாமல் இருக்க முடியுமா? உங்களை உடனே சந்திக்கட்டாம்.

''இதென்ன மாரியாதைக்கேடு...'' நான் அங்கலாய்த்தேன்.

''மரியாதையைப் பற்றி அவையள் சிந்திக்கின்ற நிலையில் இல்லை! உங்களைப்போல தானும் கலியாணம் முடிக்காமல் இருந்திருக்கலாம் என்று அவா அழுகின்றா.''

எனக்கு நெஞ்சு திக்கென்றது. 'கலியாணம் முடிக்கிறது உண்மையாக பிரச்சனைக்குரியதொரு விசயம்தானோ?' என்று மனம் அல்லலுற்றது....

''சரி பாருங்கோ. நான் போய் சந்திக்கிறேன். நீங்கள் போங்கோ.''

அலுவலகத்தில் அனுமதி பெற்று 'மோட்டார் சைக்கிளில்' அப் பெண்ணின் விடுதி வாயிலை அடைந்தேன். வீட்டு வராந்தா மறைவிலிருந்து ஒரு பெண் உருவம் கை அசைத்து சைகை காட்டியது.

ஓ... ரீச்சர்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நல்ல காலம் சிவா நீங்கள் வந்தது.'' என்று கூறி அழத் தொடங்கினார்.

''என்ன ரீச்சர் நீங்கள் குழந்தையைப் போல அழுகின்றீர்கள். எங்கே பிள்ளைகள் எல்லாம்?'' வினாவினேன்.

''அதுகள் 'ஸ்கூல்' போயிற்றுதுகள்..... உங்களுக்கு தெரியுமே என்ன நடந்தது என்று... அவர் போனமுறை பயணம் போய்விட்டு வரும்பொழுது என்னை கொலை செய்வதற்கென்று கைவாள் ஒன்று வாங்கி வந்து கட்டிலுக்கு கீழ் ஒளித்து வைத்திருக்கிறார்.... என்னுடைய பாடசாலை 'ரிப்போட் புக்ஸ்', விடைத்தாள்கள் மற்றும் 'ரெஜிஸ்ரர்' எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு தருகிறார் இல்லை. நான் இப்ப 'ஸ்கூல்' போகவேணும். நீங்கள்தான் சிவா என்னுடன் வந்து வாங்கி தரவேணும்.''

எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டது. இதுவரைநாளும் மரியாதை தந்த மனுசன். இந்த மனுசி குழப்பி விட்டுவிடும் போலை கிடக்கு. மனுசிக்கும் வேறு துணையும் இல்லைதான். நான் வேறு வந்து அகப்பட்டுவிட்டேன். யோசித்து எதுவும் செய்ய முடியாத நிலை.

''ரீச்சர்... நான் சொல்லுகின்ற மாதிரி செய்யுங்கோ. நான் எதுவும் தெரியாத மாதிரி உங்களுடைய விடுதிக்குப் போறன். நீங்கள் கொஞ்ச நேரம் கழித்து வாங்கோ. பிறகு சமாளிப்போம்.''

அவாவும் உடனே ''உவருடைய தலை போனாலும் பரவாயில்லை. என்னுடைய அலுவல் சரிவந்துவிடவேண்டும்' என்கின்ற நல்ல அபிப்பிராயத்தில் உடனேயே 'ஓம்' பட்டா!

நான் உடனேயே புறப்பட்டு, அவர்களுடைய விடுதியை அடைந்தேன். மனுசியும் வர, இந்த மனுசன் பேயாட்டம் ஆடினால் எனது நிலைப்பாடு என்ன என்று எண்ணி மருண்டபடியே 'பெல்லை' அழுத்தி விட்டு உள்ளே சென்றேன். சங்கர் சேர் என்னை எடைபோடுவது போல ஒரு பார்வையை வீசியபடியே... ''சிவா... வாரும்... வாரும்.... என்ன விசயம்?'' என்று ஐயுறவுடன் வினாவி வரவேற்றார். நானும் சமாளித்த வண்ணம்... ''சாரதி கூறினான் நீங்கள் அவனைக் கொஞ்சம் நேரம் கழித்து வா என்று சொன்னதாக. ஏன் 'சேருக்கு' சுகம் இல்லையா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படித்தான் என்றும் இல்லை.... அப்படி இல்லை என்றும் இல்லை...'' என்று அவர் இழுக்கும் போதே ரீச்சர் துரித கதியிலும், என்னைக் கண்டுகொள்ளாதது போலவும் வரவேற்பு அறையைத் தாண்டி தனது அறைக்குள் போய் விட்டமை ஒரு மின்னல் அடித்த மாதிரி இருந்தது.

'சங்கர் சேர்' விரைவில் குழம்பி விடுவார். மனைவியைக் கண்டதும் அவருக்கு மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

''வந்து விட்டாள்... வந்து விட்டாள்...'' என்று பல்லை நெருடுவதற்கு முன்னர், ரீச்சர் வீட்டை ஒரு சல்லடை போட்டு முடித்துவிட்டு, அவர்களால் முன்னர் கோழிகள் வளர்க்கப்பட்ட கூட்டிற்குள் போய் நின்றா.

''கண்டு விட்டாள்... கண்டு விட்டாள்...'' என்று அவர் இழுப்பதற்கு முன்னர் 'ரீச்சர்' எனக்கு மட்டும் தெரியக் கூடியதாக மறைந்து நின்று 'எடுத்துவிட்டேன்... எடுத்துவிட்டேன்...' என்று சைகையில் கண்ணையும் முகத்தையும் உருட்டி சுழித்து உணர்த்தினா. இதை அந்தாள் சங்கர் 'சேர்' கண்டால் மனைவியை வெட்டக் கொணந்த கைவாள் எனது கழுத்தில்தான் ஏறும் என்ற பயம் எனக்கு.

நான் வந்தகாரியம் ஓரளவில் நிறைவேறிவிட்ட திருப்தி கைகூட... ''அப்ப நான் போறன்சேர்...'' என்று மெல்ல நழுவ முயற்சித்தேன். அவரோ ''இல்லை... இல்லை.... இரும் சிவா. நானும் வாறன்'' என்றுகூறி அவசர அவசரமாக வெளிக்கிட்டு, எனது 'மோட்டார் சைக்கிளிலேயே' தொற்றிக் கொண்டார்.

''இனி வீட்டுக்கு நான் பொறுப்பில்லை.... நீர்தான் சாட்சி... அதுவும் நல்லதாக போய்விட்டது'' என்று கூறி வழக்கம் போல உரத்து சிரித்தபடி, மனைவியைப் பற்றி பின்னாலிருந்து அவர் புறம் கூறியதெல்லாம் எதிர்காற்றில் எனக்கு கேட்காமலே போய்விட அலுவலக வாகன 'பார்க்கை' வந்தடைந்தோம்.

பின் ஆசனத்திலிருந்து மெதுவே இறங்கிக் கொண்ட சங்கர் 'சேர்' உரத்த குரலில் 'ஹஹ்... ஹா...'' என்று தன்னை மறந்து சிரித்தார். எனக்கு நெஞ்சு திக்கென்றது. ''ஏன் சேர்...?'' என்று பயத்துடன் இழுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் நினைத்தேன் நீர் என்னுடைய மனுசியின் தூண்டுதலில்தான் வந்தனீர் என்று!'' எனக் கூறி மீண்டும் சிரித்தார். எனக்கு நெஞ்சில் தடைப்பட்டு விட்ட மூச்சு இப்போதுதான் சாவதானமாக வெளியே வந்தது.

''கலியாணமும் வேண்டாம் கத்தரிக்காயும் வேண்டாம்'' என்று முடிவெடுத்து 'ட்ராயரில்' இருந்த வார மலரையெல்லாம் தூக்கி பணியாளிடம் வீசி எறிந்துவிட்டு, மாலையில் அலுவலக திறப்பைக் கொடுக்க சங்கர் 'சேர்' வீட்டை போனால்... புருசன் பெண்சாதி இரண்டு பேரும் கெக்கட்டம் போட்டு சிரித்து கதைத்துக் கொண்டிருக்கினம்.

நான் என்றால் பாருங்கோ... கலியாணம் 'கட்டவா வேண்டாமா?' என்று முடிவெடுக்க முடியாமல் இன்னும் தான் என்னுடைய மண்டையை போட்டு உடைச்சுக் கொண்டு இருக்கிறன்!

**ஜன 14-20, 2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பு இல்லாத ஓடங்கள்

கட்டிலில் ஓய்வாக அமர்ந்தபடியே புதினப் பத்திரிகைகளை புரட்டினேன். பக்கம் பக்கமாக கலாசார மீறல்கள்... காட்டுமிராண்டித் தனங்கள்...!

இந்த அநாகரீகங்களெல்லாம் எப்படி எப்படி எங்கெல்லாம் நடைபெறுகின்றன என்பதனை சான்று சாட்சியங்களுடன் பிரசுரிப்பதெல்லாம் அவசியம்தானா...?

ஒரு வாசகன் மனத்தில் குற்றமிழைத்தல் சம்பந்தமாக பய உணர்வு தோன்ற வேண்டும் என்பதற்காக வேண்டி ஒரு கலாசார மீறலுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டதென்பதை நீதிமன்ற செய்தியாக வெளியிடலாம்.

இதை விடுத்து பத்து வயது சிறுமி பாலியல் வல்லுறவு என்பதெல்லாம் பத்திரிகைகளில் மெருகூட்டி பிரசுரிக்கப்படவேண்டிய செய்திதானா...?

சம்மந்தப்பட்ட சிறுமியின் தாய் அச் செய்தியை வாசிக்க நேர்ந்தால் அவளது வெந்த மனம் மேலும் புண்படுமல்லவா...?

இன்று ஞாயிறு தினம். மேலோட்டமாக படித்து முடித்த பத்திரிகைகளையெல்லாம் மடித்து வைத்துவிட்டு, விடுமுறைநாட் கடமையாக உடு துணிகளையெல்லாம் துவைத்து உலரப் போட்டேன்.

தொழில் நிமித்தமான இடமாற்றத்தில் இந்நகருக்கு வந்து இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன. புதிய முகங்கள்... புதிய நட்புக்கள்....

இவையெல்லாம் எனது அனுதாபத்திற்குரிய நண்பன் நிமலனை நான் மறந்து விடுவதற்குரிய ஏதுக்கள் அல்ல!

நிமலனின் குள்ளமான கரிய உருவம் எங்கே...? அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியென என்னால் புதிதாக அறிமுகம் செய்து கொள்ளப்பட்ட இந்த அழகும் வனப்பும் மிக்க யுவதி எங்கே?

விவாகங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது உண்மை யானால், அந்த சொர்க்கத்தில் ஏதோ தவறிருக்க வேண்டுமென எண்ண வைக்கும் அசாதாரண சோடிப் பொருத்தம்...!

நான் முன்னர் பணி புரிந்த அரச அலுவலகம் அமைந்திருந்த நகரின் படமாளிகை ஒன்றில் எடுபிடி ஆளாக பணிபுரிந்த நிமலன் திரைப்பட பிரியனான எனக்கு அறிமுகமாகியிருந்ததில் ஆச்சரியமில்லை.

ஆனால் அவனது மனைவி எனக்கு ஒருநாள் அறிமுகமாவாள் என்றோ... அவள் பணிபுரியும் அலுவலகத்திலேயே நானும் கடமை பார்க்க நேரும் என்றோ நான் கனவில் கூட நினைக்கவில்லை.

''நிமலன்.. நீ எப்போதாவது ஒரு தடவைகூட உனது மனைவி, பிள்ளைகளை பார்க்கப் போவதில்லையே ஏன்?''

தவிர்க்க முடியாமல் அப்படி நான் பல சந்தர்ப்பங்களில் அவனை வினவியிருந்தாலும் அப்படி வினவிய ஒவ்வொரு தடவையும் இனிமேல் நிமலனை கவலைக்குள்ளாக்கக் கூடாதென்ற முடிவினை நான் எய்தும்படியாகவே நிமலன் தனது கவலையை வெளிப்படுத் துவான்.

நிமலனின் கையறு நிலைக்காக நான் ஒரு கணம் கலங்குவேன். மறுகணம் அவனது மனைவி பக்க நியாயங்களை ஊகிக்க முடியாமல் தடுமாறுவேன்.

லதா... லதாதான் அவளுடைய பெயர். எந்த ஆணையும் கிறங்க வைக்கும் முக வசீகரம்.... எடுப்பான ஆடை அலங்காரம்... வாழ்க்கையை இலகுவென கருதி எடுத்தெறிந்து பேசும் துடுக்கு... எவர்க்கும் உதவி செய்ய பாய்ந்தோடும் மனப்பாங்கு....

உதவி செய்யும் மனப்பாங்குள்ள எந்த பெண்ணுமே சமூகத்தில் நற் பெயருடன் வாழமுடிவதில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்... ஆனாலும்... நிமலன்மேல் வைத்த அன்பு காரணமாகவே நான் லதாவின் வேண்டாத நட்பு ஒன்றை உரிமையுடன் கண்டித்தேன்.

"நான் அந்த நட்பை விடுகின்றேன். எனக்கு ஒரு ஆண் துணையாக இருந்து ஆற்ற வேண்டிய பொறுப்புக்களையெல்லாம் நீங்கள் பொறுப்பு ஏற்பீர்களா?" லதா தைரியத்துடன் வினவினாள்.

நான் அதிர்ந்தேன்!

ஒரு பெண்ணுக்கு பிரச்சனைகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் தனது கணவனை இந்த சமூகத்திற்கு அறிமுகம் செய்து வைக்கத் தயங்கும் ஒரு பெண்ணின் பிரச்சனையல்லவா அது!

பின்னர் எப்போதுமே நான் அப்பேச்சை எடுக்கவில்லை.

அன்று எனது உறவினன் ஒருவன் மதிய போசனத்திற்காக என்னை அழைத்திருந்தான். சென்றேன். லதாவை அவன் அறிந்திருந்தான்.

லதாவுக்கு நல்ல பிரபல்யம் இருந்தது. பிரபல்யமாக இருந்து கொண்டு நற்பெயருடன் ஒரு பெண் வாழ்வது கஷ்டம் என்பதை நான் அறிவேன்.

லதாவைப் பற்றி அறியும் ஆவல் எனக்கு இருந்ததன் காரணமாகவோ, லதாவைப் பற்றி பிரஸ்தாபிக்கும் ஆர்வம் எனது உறவினனுக்கு இருந்ததன் காரணமாகவோ எமது உரையாடல் லதாவைப் பற்றியே தொடர்ந்தது.

இலகுவில் கிடைக்கக் கூடியவளாகவோ, எவராலும் விமர்சிக்க ப்படக்கூடியவளாகவோ ஒரு பெண் என்றுமே இருக்கக் கூடாது!

லதா அளவுக்கதிகமாக ஆர்வமும் நெருக்கமும் காட்டும் எனது அலுவலகத்திலேயே பணிபுரியும் ராஜ்குமார், ரகுவரன் என்ற இரு இளைஞர்கள் பற்றி எனது நண்பன் பிரஸ்தாபித்தான். இருவருமே பெயர் பெற்ற கயவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லதாவுக்கு இவர்களால் ஏற்படக்கூடிய அவப்பெயரையும் ஆபத்தையும் எப்படி தவிர்ப்பது? அந்த இளைஞர்களுடன் எனக்கு பகைமை ஏற்படவும் இடமளிக்கக்கூடாதல்லவா...

அவ் வாரத்தின் முதல் வேலை நாள்.... லதாவுடன் மிக அன்னியோன்யமாக உரையாடினேன்... நசூக்காக எடுத்துரைத்தேன்....

''லதா நீங்கள் ஆண்துணையில்லாமல் வாழ்பவர். உங்களுக்கு பராயமடைந்த பெண்பிள்ளையொருத்தி வீட்டில் இருக்கிறாள். ஆண்கள் எவரும் வண்ணத்துப் பூச்சி போன்ற சுபாவம் படைத்தவர்கள். இலகுவாக துரோகம் இழைத்துவிட்டு மாறி விடுவார்கள். நீங்கள் எந்த இளைஞர்களையும் வீட்டிற்கு எடுக்கக் கூடாது.''

லதா பதிலுக்கு அடித்துக் கூறினாள்.... ''எங்களுடைய வீட்டிற்கு ராஜ்குமார், ரகுவரன் இருவரையும் தவிர வேறு எவருமே வரமுடியாது பாருங்கோ!''

மீண்டும்... நான் அதிர்ந்தே விட்டேன்! ஆண்களை சரியாக எடைபோடும் திறன் பெண்களிடம் அருகியே காணப்படுவதனை நினைத்து எனது மனம் கவலையில் மூழ்கியது.

சில நாட்களில் நிமலனிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. தனது வீட்டுக்கு நான் செல்ல வேண்டும் என்றும் தனது குடும்பத்திற்கு இருக்கக்கூடிய குறைகளை தெரிந்து கொண்டு எழுதினால் தன்னால் அவற்றை நிவர்த்திக்க முடியும் என்றும் பரிவுடன் எழுதியிருந்தான்.

லதாவின் பலவந்தமான அழைப்பின் பேரில் ஒரு நாள் மாலை அவளது வீட்டிற்குச் சென்றேன்.

சிறிய வீடு... ஒரு மண்டபத்தை இரண்டாகப் பிரித்ததனால் உண்டான அறையும் வரவேற்பு மண்டபமும். வரவேற்பு மண்டபத்தில் அமரவைத்து லதா என்னை உபசரித்தாள்.

திடீரென்று ஒரு சிறுமி ஓர் இளைஞனுடன் கைகோர்த்தபடி வீட்டு முற்றத்தால் வாயில் வரை ஓடி வந்தாள்.

லதா எதிர்பார்க்கவில்லை போலும்... சாயலில் அச் சிறுமி லதாவேதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லதா இந்த குறுகிய காலத்தில் என்னைப் புரிந்து வைத்திருந்தாள். எனக்கு சமாதானம் கூறுவதாக கருதி தடுமாற்றத்துடன் புலம்பினாள்...

''அது பாருங்கோ... இவா எனது மகள்... இந்த பையனை எனது மகள் காதலிக்கின்றா... உண்மையைச் சொல்லப்போனால் பாருங்கோ மகள் பெரிசாகின்றதுக்கு முன்பிருந்தே அவர்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கினம்.''

இப்போ நான் அதிரவில்லை... எனக்கு மூச்சே நின்று விட்டது!

மடித்து வைத்த புதின பத்திரிகைகளை பிரித்து பார்க்கிறேன்...

எங்கும் கலாசார சீர் கேடுகள்!

**ஏப் 22-28, 2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயங்கள்

நான் ஒரு பெண்ணாக இருந்தும்.... இன்னுமொரு பெண்ணின் துன்ப துயரங்களை கருத்துக் கெடுக்காது... அவளையும் அவளது மழலை பேசும் குழந்தையையும் தவிக்க வைத்துவிட்டு, அவரோடு ஓடிவந்துவிட்ட பாதகச் செயலுக்குத் தண்டனையாக இந்த நிமிடம் வரை கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றேன்.

நான் அப்படிச் செய்யக் கூடாது என்பது திட்டவட்டமாக எனக்கு தெரிந்திருந்தும், அப்படி நடந்து விட்டது!

அதுதான் விதியா...? நினைவுகளை அசைபோடுகின்றேன்.

சிறுவயதிலேயே என்னைச் சித்தியிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டு அரபு நாடொன்றுக்கு தொழில்புரிய சென்று விட்ட எனது பெற்றோரை நினைத்து இரண்டு சொட்டுக் கண்ணீர் வடிக்கின்றேன்.

நான் பூப்பெய்திய பின்னராவது அவர்களது கவனம் என்மீது திசை திரும்பியிருந்தால்... இந் நிலை எனக்கு நேர்ந்திருக்காது.

அம்மாவின் அன்பிற்காக எனது பிஞ்சு மனம் ஏங்கி வெம்பியபோது....

அப்பாவின் பாசத்திற்காக நான் பரிதவித்தபோது....

புதியதொரு அத்தியாயம் உதயமானது.

ராஜனும் சரோஜா அக்காவும் புதுமணத் தம்பதிகளாக எமது பக்கத்து வீட்டுக்கு குடிவந்தது இன்று போல் உள்ளது.

சரோஜா அக்கா எப்படி எனது மனதில் இடம் பிடித்தாரோ, அப்படியே ராஜன் எனது சித்தியின் மனதைக் கவர்ந்து விட்டதும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா மகப்பேறுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த நாட்களில், அந்த அன்னியோன்யம் மிகவும் நெருக்கமாகிவிட்டதும் எனக்கு புரியவே செய்தது.

அந்த நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க, சித்திக்கும் சித்தப்பாவுக்குமிடையே சச்சரவுகள் வலுத்தன. வாக்கு வாதங்கள் வளர்ந்தன. கணவன் மனைவி என்ற மட்டுமரியாதை மறைந்து ஒருவருக்கொருவர் கை நீட்டும் அளவிற்கு நிலைமை பாதகமாக திரும்பியபோது... சித்தப்பா வீட்டை விட்டு வெளியேறினார். அதுவே அடுத்ததொரு அத்தியாயத்திற்கு காரணமாக மாறியது. ராஜனின் ஆதிக்கம் வீட்டில் வலுத்தது. தான் நினைத்தபோதெல்லாம் வந்தான். அவனது வருகைகள் அநாகரீகமாகவும்... அத்துமீறல்களாகவும் மாறின. தேநீருக்காக.... ஆகாரத்திற்காக... மனைவியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைகளுக்காக வெளிப்படையாகவே சித்தியை நிர்ப்பந்தித்தான். இரவு நெடுநேரம் எங்கள் வீட்டில் தங்கினான்.

ராஜனுக்கும் சரோஜா அக்காவுக்குமான உறவில் விரிசல் ஏற்பட்டது. நீண்ட இரவுகளில் ஒரு சோடிக் கண்கள் ஏக்கத்துடன் எமது வீட்டு ஜன்னல் கண்ணாடியினூடாக வேவு பார்ப்பதனை நான் உணர்ந்தேன்.

.....சித்தியும் உணர்ந்திருக்க வேண்டும். அந்த பார்வையின் கண்காணிப்பிலிருந்து தப்புவதற்காக, அவள் ராஜனுக்காக சில சிறு சிறு தேவைகளை என் மூலம் நிறைவேற்றினாள்.

அது பிரச்சனையின் அடுத்த அத்தியாயத்தை திறந்து வைத்தது! தனது தேவைகளுக்காக ராஜன் என்னை நிர்ப்பந்திக்கத் தொடங்கினான்....

''வதனா... உனது கையால் உணவு பரிமாறப்படாவிட்டால் எனக்குப் பசிக்கவே மாட்டேன் என்கிறது...!''

''சரோஜாவுக்கு முன்பதாக நான் உன்னை சந்திக்காதது எனது துர் அதிஷ்டம்...''

''நீ இல்லாவிட்டால் நான் இறந்து விடுவேன்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான வார்த்தைகளால் அவன் என்னைக் கட்டிப் போட்டான். சித்தியை அவன் புறக்கணிப்பதை அவள் உணர்ந்த பொழுது அவன்மீது சீறி விழுந்தாள்.

எந்த ஒரு பெண்ணையும் எந்த ஒரு ஆடவனும் பயபக்தியுடன் தான் எதிர்கொள்கின்றான். ஆனால் எந்த ஒருத்தியாவது எந்த ஒரு ஆடவனுக்காகவாவது ஒரு தடவை தனது நிலைப்பாட்டை தளர்த்தி விட்டால் அதன் பின் அவன் அவளை ஒரு தூசாக கருதிவிட தயங்க மாட்டான் என்ற உண்மையை நான் காலம் கடந்தே உணர்கிறேன்.

அதுவே சித்திக்கும் நேர்ந்தது!

''அடே ராஜன்... சரோஜாவைக் கூப்பிடட்டுமா?'' என்று அவள் அவனை எச்சரிக்க முனைந்தபோது.... அவன் ஊரைக் கூப்பிடப் போவதாக மிரட்டினான்.

என்றாலும் சித்தி என்னை அவனது கரங்களில் வீழ்ந்து விடாதபடி கட்டுப்பாடுகளை இறுக்கியதுடன், காரியத்திலும் இறங்கினாள்.

சித்தியின் தூண்டுதலால் குமரன் என்றொரு இளைஞன் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வரத்தொடங்கினான்.

அதுவே பிரச்சனையின் அடுத்த அத்தியாயத்தை திறந்து வைத்தது.

குமரனின் கள்ளங் கபடமற்ற மனப்பாங்கு எனது மனதில் நேசத்தை வளர்த்தது. ராஜனின் மனதில் அது போட்டியையும் பொறாமையையும் வளர்த்தது. அவன் மேலான எனது அன்பை தான் இழந்து விடுவேனோ என்ற பயம் அவனை ஆட்கொள்ளவும்....

எனக்கு ஆசைகள் காட்டினான்....

அம்மாவின் அன்பிற்கும் அப்பாவின் பாசத்திற்குமாக ஏங்கிய எனக்கு சித்தியின் இரகசிய சினேகிதனின் அன்புதான் கிடைத்தது...

சந்தர்ப்பங்கள் நிர்ப்பந்தங்கள் காரணமாக இன்று பிறிதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் அவனது நண்பனொருவனின் வீட்டு அறையில் கசக்கிப் போடப்பட்ட மலராக நான் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறேன்.

'இதோ வந்துவிட்டேன்' என்று வெளியே போன ராஜன் வெகுநேரமாக திரும்பாத ஏக்கம் என்னைப் பதை பதைக்க வைக்கின்றது. இரவு நடந்து விட்ட சம்பவங்கள் எனது அறிவீனத்தின் உச்சக்கட்டம் என்பதை சிறிது சிறிதாக நான் உணர்கின்றேன். இந்தச் சமுதாயத்திலிருந்து நான் தூக்கி எறியப்பட்டுவிட்டேன். நான் வீழ்ந்துவிட்ட இடம் சாக்கடை என்பதில் சந்தேகம் இல்லை!

திரைச் சேலையை நீக்கி ராஜனது நண்பனின் மனைவி உள்ளே வருகிறாள். கட்டிலில் கண்ணீருக்கு மத்தியில் கலங்கியிருந்த என்னை ஆதரவுடன் தடவிக் கொடுக்கிறாள்.

"குமரன் என்பது யார்?" என்று என்னைக் கேட்கிறாள். நான் விபரம் கூறுகிறேன்.

"எல்லாம் முடிந்துவிட்டது. குமரன் இனி இவளை விவாகம் செய்யட்டும்" என்று ராஜன் சூழுரைத்து சென்றதாக அவள் கூறவும் நான் அதிர்ச்சியடைகிறேன்.

தள்ளாடியபடி நான் புறப்படுகிறேன்... நச்சுத் திராவகம்.... அலரிவிதை.... ஆழ்கடல்.... இராவணன் வெட்டு... எனது மனம் எடைபோடுகின்றது.

என்னில் பாசம் வைத்திருக்கும் எனது நண்பியை ஒரு தடவை தரிசிப்பதற்காக அவளது வீட்டுப்படி மிதிக்கிறேன்.

கதி கலங்கியிருந்த என்னை அவள் துளாவி எடுக்கிறாள். "சித்தியிடம் எதுவும் கூறவேண்டாம்" என மன்றாடுகின்றேன்.

ஆனால் எனது நண்பியும் அவளது கணவரும் துரிதமாக செயல்படுவது எனக்கு புரிகின்றது. சில மணி நேரங்களில் சித்தியும் குமரனும் என்னிடம் ஓடோடி வந்து சேர்கின்றார்கள்.

தற்கொலையின் எல்லைக்கு வந்துவிட்ட நான் எவருக்காகவும், எதையும் மறைக்க வேண்டிய தேவையில்லை. கதறியழுதபடி எனக்கு நேர்ந்த துயரங்கள் அனைத்தையும் ஒப்புவிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளங்கபடமற்ற குமரனின் முகத்தில் கோபக் கனல் பறப்பதை காண்கின்றேன். நிலத்தில் வீழ்ந்திருந்த என்னை இரு தோள்களிலும் பற்றிமேலே தூக்குகின்றான். அம்பு அடிபட்ட பறவை போல நான் அவனது கரங்களில் சரணடைகின்றேன். என்னை உச்சி முகர்ந்து உறுதியளிக்கின்றான்.

''எது நடந்தாலும் நீ என் மனைவி.''

எங்கிருந்தோ எனது சித்தப்பா பதற்றத்துடன் ஓடி வருகிறார்...

''சரோஜா தற்கொலை செய்து விட்டாள்!''

நான் அதிர்ச்சியடைகிறேன். குற்ற உணர்வு என்னை ஆட்கொள்கிறது....

குமரன் போல பல மனிதர்கள் பல தடவைகள் தம்மை இறைவன் ஸ்தானத்திற்கு உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள்.

ஆனால்.....

சரோஜாவின் விடயத்தில் தெய்வம் மனித ஸ்தானத்திற்கு இறங்கிவிட்டதா? அன்றேல் மற்றொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திற்காக

இந்த அத்தியாயம் நிறைவு பெறுகின்றதா?

**மார்ச் 04-10, 2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசிக்கத் தெரிந்தவர்கள்

'எனது இவருக்கு விசர்... என்னுடைய அழகையே இரசிக்கத் தெரியாதவர்... எமது மகளுக்கு பொருத்தமான மாப்பிள்ளை எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி இவருக்கு எங்கே புரியப் போகின்றது...'

'என்னப்பா... நான் சொல்லுவது கேட்குதா...? காலையில் மங்களமக்கா வீட்டுக்குப் போயிருந்தன்.... அவா தனது மகளை நாலைந்து இடத்தாலை கேட்டு கரைச்சல் பண்ணுறாங்களாம்."

நான் கூறவும் எனது இவர் பலமாக சிரித்துக் கொண்டார்.

"அதிலை என்ன பெருமை இருக்குது. நாலு இடத்தாலை கேட்டு வருகிற அளவுக்கு அந்த பிள்ளை தன்னை... தனது அழகை பிரபல்யப்படுத்தி இருக்குது என்றுதான் எடுக்க வேணும்....!"

'இவருக்கு பெண்பிள்ளைகள் என்றால் கட்டுமட்டாக இருக்க வேணும்.' அதற்காக பிள்ளைகளின் அழகை மறைத்து வைத்திருக்கக்கூடிய காலமா இது? எப்படியிருந்தாலும் நேர காலத்தோடு சரியான வரனைப் பார்த்து கல்யாணத்தை செய்து வைத்துவிட்டால் பாரம் நீங்கிப் போகும்.

காலையிலிருந்தே இந்த குஞ்சுக்காகம் பறந்தடிச்சு கரைஞ்சு கொண்டிருக்குது. நீண்ட நாட்களாக ஒருவருடைய கடிதமும் வரவில்லைதான்.

இவருடைய சகோதரி ஒருத்தி... மாலதி மச்சாள். அவாவுக்கு ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகள். விஜயன் மூத்தவன். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறான். தொழில்தான் சரியாக அமையவில்லை. தோட்டம் துரவு என்று தகப்பனுக்கு உதவியாக இருப்பதோடு 'எச்.என்.டீ.ஏ.பார்ட்டைம்' ஆக செய்துகொண்டு இருக்கிறான். குணசாலி. இருந்தாலும் ....... ஒரு இரசிப்புத் தன்மை இல்லாததுகள். ஏதாவது ஒரு சாட்டுப் போக்கைச் சொல்லி இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை தட்டிக் கழித்து விட வேண்டும்....

இவருக்கும் இவருடைய ஆட்களுக்கும் பெண்கள் என்றால் வெறுமனே சமைத்துப்போடவும்... உடுதுணிகளைத் துவைத்துப் போடவும்.... நேரம் கிடைக்கின்ற நேரம் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுப் போடவும்தான் ஆட்கள் என்ற நினைப்பு! ஒரு இரசனை இருக்கா... யாரிடமும் சொல்லவும்கூட முடியாது... என்னுடைய அழகை இவர் இரசித்ததைக் காட்டிலும் மற்ற ஆண்கள் மெச்சி போற்றினதுதான் அதிகம். அவங்களுக்கு இரசிக்கின்ற தன்மை இருக்குது... மரக்கட்டை போல் இருக்கின்ற இவரும் ஆண்பிள்ளையா?

என்ன விதத்திலாயினும் என்னுடைய அண்ணன் மகன் சங்கரைத்தான் எனது மகளுக்கு சேர்த்து வைக்க வேணும். அவன் 'கம்பஸ்' முடித்து வந்திருக்கிறான். கெட்டிக்காரன். எனது மகளினுடைய வடிவுக்கு வசமாகக் கூடியவன். நாளைக்கு நல்ல தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளக்கூடிய தகைமைகளைக் கொண்டவன்.

எனது இவரும் மகள் வித்யாவும் புறப்பட்டு சென்ற சிறிது நேரத்திலேயே இவருடைய தங்கை மாலதி மச்சாள் வந்தாள். அவா தமையன் இல்லாத நேரம் வந்ததும் எனக்கு வசதியாகப் போய்விட்டது.

''என்னுடைய மகள் சரியான ஊதாரி பாருங்கோ... முற்கோபக்காரி... எவருடனும் ஒத்துப்போக மாட்டாள். மச்சாள்... உங்களுக்கென்றபடியால் சொல்லுகிறன். இனி உங்களுடைய விருப்பம். பிறகு எங்களைக் குறை சொல்லி வரக்கூடாது.''

பெண்ணைப் பெற்ற தாய் நானே எனது மகளைப் பற்றி தூற்றி கூறும்போது, பெண் எடுக்க வந்தவர்கள் அவளை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாட அவையளுக்கு என்ன விசரே... மாலதி மச்சாள் மெல்ல நழுவினாள்.

மச்சாள் வந்து போன பின்பும் இந்த குஞ்சுக்காகம் ஓய்ந்து போன பாடில்லை... 'ச்சீ... அங்காலை போய்த் தொலை' என்றால் எங்கை கேட்குது.

எனது மகள் வித்யா... 'நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை' என்பார்களே அச்சொட்டு! செலவு விசயத்திலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான சிக்கனம். பெண்களுக்கு இதற்கு மேலும் வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவினதான தோற்றம்.... பொறுமை. எவரோடும் ஒத்துப் போகின்ற தன்மை. இவை அனைத்துக்கும் மேலாக 'கம்பஸில்' இடம் கிடைத்திருக்கிறது.

மதியத்திற்கு முன்பாக இவர் வந்து விட்டார். தங்கை வந்து போனமை பற்றி கூறினேன்... ''ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் பாரங்கள் பொறுப்புக்கள் அதிகம்! எங்களுடைய மகளுக்கு வயது இருக்கு. 'கம்பஸ்' கிடைத்திருக்கிறபடியால் அவள் படிக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறாள். நாங்கள் குழப்பியதாக இருக்கக் கூடாது.''

நான் சொல்வது இவருக்கு எந்தக் காலத்தில்தான் விளங்கியது... பேசாமல் இருந்துவிட்டார். அப்படி இருக்காவிட்டால் கூட சத்தமிட்டு அதட்டி கூறினேனென்றால் ஒதுங்கி கொள்வார்.

நான் ஏதோ பிழையான காரியங்களா செய்கிறேன். எல்லாமே எங்களுடைய குடும்ப நன்மைக்காகத்தானே.

கணனி வகுப்பு முடிந்து வித்யா வீடு வந்தாள்.

''மாலதி மாமி வீடு வந்தவா பிள்ளை. தங்களுடைய மகனுக்கு பல இடங்களாலையும் கேட்டு வருகினமாம். உன்னுடைய அப்பாவுக்கு நீ படித்து பெரியவளாக ஆக வேண்டுமென்று விருப்பம். எந்த தாய் தகப்பனுக்கு இல்லாத ஆசை.''

வித்யாவுக்கு தெரியும்... என்னுடன் கதைத்து சரிக்கட்ட முடியாது என்று. மச்சான் விஜயனைப் பற்றி நல்ல அபிப்பிராயம் அவளுக்கு இருக்கின்றதென்பதை அவளுடைய சில கதை பேச்சுக்களில் ஊகிக்கக் கூடியதாக இருந்திருக்கு. விஜயன் உண்மையிலேயே நல்ல குணசாலி. ஒழுங்காக குடும்பம் நடாத்தக் கூடியவன். ஆனால் அழகை ஆராதிக்கத் தெரியாத ஜென்மங்கள். எனது மகளை எவன் ஒருவன் கை கழுவி விட்டுத்தான் தொடவேண்டும் என்று நினைக்கின்றானோ அவன்தான் அவளுக்கு மாப்பிள்ளையாக வர தகுதி படைத்தவன்!

இருந்தாலும் சில சமயங்களில் விஜயனுடைய சில தகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யாவை எனது அண்ணன் மகன் சங்கருக்கு விவாகம் செய்து வைக்க தடையாக வந்து விடுமோ என்று நான் தயங்குவதுண்டு.

இந்த நாளைய பெண்பிள்ளைகளையும் முற்றிலுமாக நம்பக் கூடாது. விஜயனை வித்யா சந்தித்து பேசிக் கதைக்க... முடிவெடுக்க... நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அது மாத்திரமல்லாமல் வித்தியாவுக்கு தந்தை மீதும் அவர் வழி உறவினர் மீதும் அளவு மீறிய அன்பும் பாசமும் உண்டு. தந்தை சொல்வதை சில சமயம் கேட்டும் விடுவாள்!

எதற்கும் ஒருக்கால் மதிய தூக்கத்தை விட்டு விட்டு எட்டி ஒரு நடை நடந்து அண்ணை வீட்டுக்குப் போய் நிலைமையை உறுதிப்படுத்தி கொள்ள வேணும்.

நான் போன நேரம் நல்ல சந்தர்ப்பமாகப் போய் விட்டது. அண்ணன் மச்சாள் மருமகன் மூவருமே வீட்டில் நின்றார்கள்.

''மாமி வருகின்றா'' என்று கூறி முதலில் சங்கர்தான் ஆரவாரம் செய்தான்.

''என்ன மருமகனை அங்காலிப் பக்கம் காணேல்லை?'' நான் வினாவவும் சங்கர் சிரித்தபடி தலையை தாழ்த்திக் கொண்டான். மச்சாள்தான் கதையைத் தொடர்ந்தாள்.

''தம்பி இறுதியாண்டு பரீட்சை சித்தியெய்தியதோடு அரச திணைக்களமொன்றில் அபிவிருத்தி உதவியாளராக வேலையும் கிடைத்திருக்கு. தம்பிக்கு இருபத்தியாறு வயதாகுது. பொறுப்புகளும் இல்லை. அதைப் பற்றித்தான் இப்போ கதைத்துக் கொண்டிருந்தனாங்கள்.''

மச்சாளைத் தொடர்ந்து அண்ணை கூறினார், ''தங்கச்சி... நீ தனித்து முடிவு எடுக்காதே. மச்சானோடும் ஆலோசி. அவரும் விரும்பினால்தான் கலியாணம். பிரச்சனைகளை விலைக்கு வாங்கக் கூடாது.''

மருமகனின் முறை வந்ததும் அவரும் கூறினார். ''மாமி வித்யாவுக்கு 'கம்பஸ்' கிடைத்திருப்பதாக கேள்விப்பட்டேன். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டிக்காரி என்பதால்தான் எனக்கு அவளில் விருப்பம். ஆனால் பெண்கள் 'கம்பஸ்' போய் என்ன செய்யப் போகிறார்கள். ஒரு கதைக்கு சொல்லுறன்... வித்யா அல்லாமல் நான் வேறு ஒரு பெண்ணை விவாகம் செய்ய வேண்டி ஏற்பட்டாலும் 'கம்பஸ்' அனுமதி கிடைத்தும் 'கம்பஸுக்கு' போகாத திறமைசாலியான பெண்ணைத்தான் விவாகம் செய்வேன்."

சங்கர் சொல்லியதிலும் பிழை இல்லை. வித்யா இன்னமும் நான்கு வருடங்கள் படிப்பை மேற்கொள்ள வேண்டுமென்றால் சங்கருக்கும் முப்பது வயதாகிப் போய்விடும். வயது போன நேரத்தில் என்ன கலியாணம். படித்து... உத்தியோகம் எடுக்கும்வரை பொறுத்திருந்த ஒரு ஆண்பிள்ளை வித்யா போன்ற அழகும் இளமையும் மிக்க ஒரு பெண்ணை உடனேயே சேர எண்ணுவதில் தப்பு என்ன? நான் பதிலிறுத்தேன்.

"சங்கர் சொல்லுறதும் சரிதானே அண்ணை. இந்த விசயத்திலை என்னுடைய அவர் சம்மதித்ததாகவே எடுத்துக் கொள்ளுங்கோ. மற்ற கருமங்களையெல்லாம் நான் பார்த்துக் கொள்கின்றேன்."

மாலையில் இவரும் வித்யாவும் இருந்தபோதே விசயத்தை விளக்கினேன். இவர் கூறினார். "கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே தேடிவரும் என்று முன்னோர் கூறிவைத்தது பகிடிக்கா? மங்களமக்காவின் பெடிச்சியை நாலைந்து இடத்தில் கேட்டு வருவதாக கூறினாயே... அதில் பெடிச்சியின் கட்டுப்பாடு இல்லாத போக்குத்தான் தெரியுது. ஆனால் சொந்த பந்தத்துக்குள்ளேயே ஒரு பெண்ணை எடுத்துவிடவேண்டும் என்று போட்டி போடுவது அவளது அடக்கம் காரணமானது,"

வித்யா தாமரை இலை தண்ணீர் போன்ற சுபாவம் கொண்டவள். எந்த விசயத்திலும்... எந்த இக்கெட்டான நிலைமையிலும் தனது விருப்பு வெறுப்புகளை வெளிக்காட்டமாட்டாள். "அம்மா... எனக்கு 'கிளாஸுக்கு' நேரமாகிவிட்டது. நான் போகிறேன்" என்று கூறி புறப்பட்டு விட்டாள்.

மாலையில் இருவரும் வெளியே சென்றுவிட்ட பின்னர் பெண்பிள்ளையொருத்தி சுமாரான உயரம்... மா நிறம், எமது வீடு தேடி வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் 'கம்பஸில்' உங்கள் மருமகன் சங்கரோடு கல்வி பயின்றனான். நான் முதலாம் ஆண்டில் இணைந்தபோது அவர் இறுதி வருடத்தில் இருந்தார். அவர் என்னை உயிருக்குயிராய் காதலிப்பதாக நம்பி அதிக அளவு இடம் கொடுத்து சுதந்திரத்துடன் பழகினேன். அவர் இறுதியாண்டுப் பரீட்சை முடித்து பட்டமளிப்பு விழாவையும் முடித்து சென்ற பின்னர்தான் அவரால் பாதிக்கப்பட்ட முன்னைய வருடங்களில் படிக்கும் மாணவிகள் பல உண்மைகளைக் கூறியதுடன் உங்கள் மகளுக்கும் அவருக்கும் விவாகம் நடக்க இருப்பதையும் தெரிவித்தார்கள்.''

காலைமுதல் கரைந்தபடி என்னைச் சுற்றிச் சுற்றி வந்த அந்த குஞ்சுக் காகம் காலிடுக்கில் ஏதோ ஒரு இரையை வைத்து சுவைத்தபடி தன்னை மறந்த சாவதான நிலையில் மூழ்கியிருந்தது.

மருமகன் நன்றாகத்தான் 'கம்பஸ்' வாழ்க்கையை சுவைத்திருக்கிறார். அந்த அனுபவம் தந்த பாடம் காரணமாகவே 'கம்பஸ்' அனுமதி பெற்ற எனது மகளை அங்கு செல்லவிடாது அவர் தடுக்கிறார்.

எனது பாசமிகு கணவரும் அன்புமிகு மருமகன் விஜயனும் அழகை இரசிக்கத் தெரியாதவர்கள் என்று உறுதியாக நம்பியிருந்த நான்....

தூயவளான எனது மகளை துரோகி ஒருவனிடம் மாட்டிவிட இருந்த அவலத்தை எண்ணி ஏக்கமடைந்து சிலையாக நிற்கின்றேன்!

**நவ 25-டிச 01, 2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயும் காதல் கோபுரங்கள்

'விஜயாவை சந்திப்பது, கதைப்பதை விடு, அவளை நீ கலியாணம் முடிப்பதை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை' அம்மா அப்படி சொல்லிவிட்டா.

விஜயாவை நான் ஆரம்பகாலத்தில் சந்தித்தபோது தேவகன்னி போல... நெருங்க முடியாத நெருப்பாக அவள் இருந்தாள். எனது நினைவிலும் கனவிலும் ஒளி வெள்ளம்போல ஊடுருவி அந்த ஆனந்த வெள்ளத்தில் என்னை தெப்பம் போல மிதக்க வைத்தாள்.

அவளில்லாமல் நான் வாழ்வது அரிதிலும் அரிது என்பதை அவளது பெண்மைக்கேயுரிய போராயுதங்கள் எனக்கு நாழிகைக்கு நாழிகை எச்சரிக்கைகளை விடுத்துக்கொண்டிருந்தன.

பல நாட்கள் அவள் பின்னால் அலைந்தேன். அந்த ரதியின் கடைக்கண் பார்வைக்காக தவமிருந்தேன். அவள் முன்பாக எனது தகுதியின்மைகள்கூட சூரிய கதிர்முன் பனிபோல மறைந்துவிட ஆண்மைக்கே உரிய பேராண்மை என்னுள் துளிர்விட்டது.

அத்துடன் அந்த பூமகள் பார்வை என்பக்கம் திரும்பியது மெல்ல....

'மச்சான்... நீ விஜயாவை மணம் செய்வதை எங்களுடைய உயர் சமூக மட்டம் என்றைக்குமே அனுமதிக்கப் போவதில்லை. இதனால் உனக்குமட்டிலுமன்றி விஜயாவுக்குமே என்றும் பிரச்சனையாகத்தான் இருக்கும். இந்த நிலையிலேயாவது நீ அவளை விட்டு விடுவதே நல்லது.'

எனது உயிருக்குயிரான நண்பன்கூட கூறிவிட்டான்.

விஜயா நல்லவள். அதனால்தான் அவள் தனது தகுதி தகுதியின்மைகள் பற்றி வெளிப்படையாகவே பேசுகின்ற சுபாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவளாக இருந்தாள். எந்த நிலையிலும் தனது ஏழ்மையை மனதில் கொண்டு பெண்மையைப் பயன்படுத்தி என்னை தனது வலையில் வீழ்த்த எத்தனிக்கவில்லை.

இன்று விடுமுறை தினம். பத்து மணிக்கெல்லாம் புதின பத்திரிகைகள் அனைத்தும் வாசிகசாலைக்கு வந்துவிடும். அங்கு சென்றால் அவளை சந்திக்கலாம்.

எப்படியும் இன்று ஒரு தீர்க்கமான முடிவு எடுத்துவிட வேண்டும்.

நகரை நோக்கி செல்லும் வழியில்.... உள்துறைமுக வீதியிலிருந்து பிரியும் சவக்காலைத்தெரு எப்போதும் சனநடமாட்டம் குறைந்தே காணப்படும். ஆனால் பராயமடையாத சிறிசுகள் பாடசாலை மாணவர்களின் காதல் அரங்கேற்றங்களுக்கான திட்டங்கள் வகுக்கப்படும் ஒதுக்குப்புறமும் அதுதான்! தெருவின் மதிலுக்கு மறுபுறமாக திட்டமிடல் அமைச்சு என இயங்குவது வேறு.

விடுமுறை தினமாதலால் நகரத் தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

பிச்சை எடுக்கும் ஏழ்மை நிலையிலும் காதலால் இணைந்த ஒரு நடுத்தர சோடியை இந்த நகரில் கவனிக்காதவர்கள் இருக்க மாட்டார்கள்.

நல்ல முறுக்கேறிய உடல் வளம் கொண்ட அவன் அழுக்க டைந்த நாலு முழ வேட்டியை மடித்துக் கட்டியபடி குடி போதைக் கிறக்கம் கண்களில் துலங்க நெஞ்சை நிமிர்த்தி ராஜ திமிருடன் நடந்து செல்வதும் அவள் சில நாட்களாகவே அவன் வயப்பட்டு பின்னால் சுற்றுவதும் எவர் கவனத்தையும் திருப்பவே செய்யும்.

நகரின் பிரதான வீதியை நான் தாண்டும் போது இருவரும் என்னை கடந்து சென்றார்கள்.

வாசிகசாலையை சென்றடைந்தபோது விஜயா வந்திருக்க வில்லை. சில மணிநேரம் பத்திரிகைகள் படித்தபடி அங்கு தாமதித் தேன். எப்படியும் விஜயா வந்து விடுவாள்... நிச்சயமாக வந்துவிடுவாள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந் நாட்களிளெல்லாம் விஜயாவை அண்மித்தவுடன் எனது நெஞ்சு படபடக்கத் தொடங்கிவிடும். அவளது பெண்மையின் சாயல்களை அருகருகாக காணும் தைரியமற்றவனாக நான் இருந்தேன். எப்படி இவளை என்னால் கவர முடிந்ததென எண்ணி ஆச்சரியமடைவேன்.

நான் நாட்டிவிட்ட காதல் பயிருக்கு அவள் நீரூற்றினாள்... படிப்படியாக எனது அச்சத்தை தெளிவித்தாள்.... தன்னை நெருங்க இடங்கொடுத்தாள்... எனது பதட்டத்தை அர்த்தமற்றதாக்கினாள். அவளை அண்மிக்க அவளுடன் காலத்தைக் கழிக்க வெறி கொண்டேன்.

மதியம் பன்னிரெண்டு மணி.

இதன்மேல் விஜயா வரமாட்டாள். விடுமுறை தினங்களில் விஜயா வாசிகசாலைக்கு வராவிட்டால் மாலையில் கடற்கரையில் என்னை எதிர்கொள்வாள். வாசிகசாலையில் பேசி கதைக்க முடியாதாகையால் அவசியம் கருதி அந்த ஏற்பாடு.

வாசிகசாலை படியை தாண்டி சிறிது தூரமே நடந்திருப்பேன்... எனது முறைமச்சாள்... எனக்கு மிக இளையவள் எதிரே வந்து கொண்டிருந்தாள். என்னைக் கடக்கும் சமயம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூறினாள்.

'இவையளுக்கெல்லாம் தங்களுடைய உறவுக்குள்ளாக உள்ள பெண்கள் கண்ணுக்குள் குத்துகிற மாதிரி இல்லை. ஆருக்கும் பின்னால் அலைந்து திரிந்து பிடிச்சாத்தான் பொம்பிளையாகப்படுகிறது.'

தோளை உயர்த்தி தலையை சுழற்றிய வேகத்தில் அவளது இரட்டைப் பின்னல் எனது முகத்தைச் சீவிச்சென்றது.

மச்சாளுக்கும் நான் தன்னைத் தவிர்த்து விஜயாவை விவாகம் செய்ய எண்ணுவது அறவே பிடிக்கவில்லை. விஜயா என்னை ஒத்த வயதினள். ஆனால் மச்சாள் ஆறுவயதாகிலும் இளையவள். நேற்று வரை பாடசாலை போய்க்கொண்டிருந்தவள். ஒத்த வயதாக இருந்திருந்தால் விஜயாவை விரட்டிவிட்டு என்னைக் காதில் பிடித்து தன் வீட்டு மூலையில் இருத்தியிருப்பாள்! சொல்ல முடியாது.



3702

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயா சுயநலக்காரி அல்ல. எனக்காக எதையும் செய்யத் தயாரான பெண்தான் அவள்.

ஒரு கட்டத்தில் அண்மிக்க முடியாத தீப்பிழம்பாக இருந்த அவளை நெருங்க நெருங்க அச்சுடர் தண்ணென ஒளி பாய்ச்சும் நிலவாக மாறி போதையூட்டியது.

'நான் உம்மைத்தான் மணமுடிப்பேன்' போன்ற பல உறுதி மொழிகளை இருவரும் பரிமாறிக் கொண்டோம். திருமணப் பதிவோ மத ரீதியான அங்கீகாரமோ காதலில் கட்டுண்டு காதோடு கதை பேசும் மொழிக்கு முன்னால் செயலிழந்து விடுகின்றன....

நான் எங்கு செல்ல அழைத்தாலும் விஜயா வந்தாள்... எந்த எல்லைக்கும் அவள் வந்தாள்... என்னை நம்பினாள்!

விஜயாவை சந்திக்காமலே வாசிகசாலையால் வீடு வந்தபோது மதியம் ஒரு மணி. தங்கை உணவை மேசைக்கு எடுத்துவிட்டு காத்திருந்தாள்.

உணவு பரிமாறியபடியே அவள் பேசினாள்.

'அண்ணா... சிறிது நேரம் முன்பதாக ஒரு மாப்பிள்ளையின் பெற்றோர் வந்திருந்தவை. என்னைப் பெண்பார்க்க வேண்டுமென்று அடம்பிடிக்கத் தொடங்கிவிட்டினம். அப்பாவாலும் மறுத்துக்கூற முடியவில்லை. பெண் வடிவாக இருந்தால் சீதனத்தில் 'கறாராக' இருக்கப்போவதில்லை என்றுகூறி அப்பாவை சம்மதிக்க வச்சிட்டினம். நிதி நெருக்கடியாக இருக்கிறதாலைதான் அப்பா இறங்கி வந்தவர் என்று அம்மா எனக்கு சமாதானம் கூறினா. அண்ணாவை கேட்காமல் இந்த ஏற்பாட்டுக்கு நான் தயாரில்லை என்றுகூறி மறுத்துவிட்டேன்.'

தங்கை பாவம். என்னை நம்பியிருக்கிறாள். எனது வாழ்க்கையை தியாகம் செய்தாகிலும் அவளுக்கு நல்லதொரு வரனைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஒரு கணம் அந்த ஏழ்மை நிலையில் உள்ள நடுத்தர வயது சோடியை மனம் எண்ணிப் பார்க்கின்றது. அங்கு நிபந்தனைகளோ நிர்ப்பந்தங்களோ கிடையாது. ஏழ்மையின் மத்தியிலும் அது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் சாம்ராஜ்யம்!

எனக்குத்தான் விஜயாவை மணம்முடிக்க கொடுத்து வைக்கவில்லை போன்று இருக்கின்றது.

எனது சுபீட்சமான எதிர்காலத்தை எண்ணி ஏங்கும் அம்மா... எனது நன்மையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட எனது நண்பன்... தனது வாழ்க்கையை எனது கைகளில் ஒப்படைத்துவிட்ட தங்கை... என்மீது உரிமை பாராட்டும் எனது மச்சாள்.

மாலை நான்கு மணிக்குமேல்... கடற்கரையில் விஜயாவைச் சந்தித்தேன். அலைகள் மோதிப் பிரியும் வெண்மணற் பரப்பில்.... சீறிப் பாயும் நீருக்கு போக்குக் காட்டியபடி அவள் என்பின்னால் ஓடிவருவதும் என்னை தோளில் தள்ளிவிடுவதுமாக குழந்தையாக மாறி குதூகலித்து விளையாடினாள்.

இன்று எப்படியும் விஜயாவுக்கு எனது மறுப்பைத் தெரிவித்து விட வேண்டும். காதலிக்கும் ஆண்கள் எல்லோரும் கட்டாயம் விவாகம் செய்யவேண்டுமென்று சட்டமா இருக்கின்றது. ஒரு இளமை வேகம்... இனம் புரியாத கவர்ச்சி... ஒரு உத்வேகம் சில தூண்டுதல்களை ஏற்படுத்துகின்றன. அந்த இளமைத் துடிப்பு தணியும்போது ஆணைப் போல பெண்ணும் தனக்கு எது சரி எது பிழை என்பதை சிந்திக்கவே தலைப்படுவாள். விஜயா தனது சமூக அந்தஸ்து... நிதி நிலைமை ஆகியவை பற்றிய விளக்கங்கள் அற்றவளல்ல. நான் கூறினால் புரிந்து கொள்வாள்.

விடுமுறை தினமாதலால் மக்கள் கூட்டம் பெருவெள்ளமாக அலைமோதியது. எங்களுக்கு முன்னால் சனத்திரள் மத்தியில் சிறியதொரு சலசலப்பு. திரும்பி பார்த்தேன். நான் நகரில் சந்திக்கும் நடுத்தர வயது காதல் சோடி! இரண்டு 'பொலிசார்' அவனை தர தரவென இழுத்துச் சென்று 'ஜீப்' வண்டி ஒன்றில் ஏற்றினார்கள். அவனிடம் போதைவஸ்து பழக்கம் இருந்திருக்க வேண்டும். அந்த நடுத்தர வயது ஏழைப்பெண் தலையில் இரு கைகளாலும் அடித்து ஓலமிட்டபடி அந்த 'ஜீப்' வண்டியின் பின்னால் ஓடினாள். நானும் அண்மித்தேன்.

'ஜீப்' வண்டி போய்விட்டது. அவள் தனது காதலனை இழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள். அந்த வேக்காட்டில் அவனைத் திட்டினாள்.

திரும்பி விஜயாவைப் பார்த்தேன். அவள் யாரோ ஒரு குழந்தைக்கு விளையாட்டு காண்பித்தபடி இருந்தாள்.

தன் காதலனால் ஏமாற்றப்படும் நிலையில் எந்த ஒரு பெண்ணும் ஆத்திரமுற்று பிரயோகிக்கக்கூடிய யதார்த்தமான கருத்துச் செறிவு அந்த ஏழைப் பெண்ணின் சொற்பிரயோகத்தில் இருந்தமை எனக்கு உறைக்கச் செய்தது.

'ஏய் பாவி மனுஷா... ஒரு வயிற்று சோற்றுக்காக உனக்குப் பின்னால் வந்தேனே... இப்போ இரண்டு வயிறுகளை பட்டினி போட்டு போகிறாயே... நீயும் ஒரு ஆண்மகன்தானா?'

என் மனச்சாட்சி என்னை சுட்டெரிக்கின்றது!

டிச 24-29, 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் வித்தியாசமானவள்

அவள் அடுத்த வீட்டுப் பெண்தான். ஆனால், படுசுட்டி. தான் நினைத்ததை சாதிக்கும் திறன் அவளுக்கு எப்படிக் கைகூடுகிறது என்பதைப் பற்றி நான் ஆச்சரியப்படாத நாட்களே இல்லை.

காலையில் நான் அலுவலகம் செல்லப் புறப்பட்டபோது அவளது வீட்டு வாசலில் எனக்காக காவலிருந்தவள், ''குட்மோர்னிங் அங்கிள்'' என்று கூறியபடி மான்குட்டியைப் போல் துள்ளிக் குதித்து ஓடி வந்தாள். 'ஸ்கூட்டரை ஸ்ரார்ட்' செய்வதை விடுத்து, ''குட்மோர்னிங், இன்றைக்கு என்ன திட்டம்?' என்று வினவினேன்.

மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள். அவளுடைய அழகும், நிறமும், இளமையும் குழந்தைத் தனமும்தான் அவளுடைய வெற்றிகளுக்கெல்லாம் காரணம் என்பது பட்டெனத் தெரிந்தது.

''அங்கிள் இன்றைக்கு எங்கள் பாடசாலையில் இல்ல விளையாட்டுப்போட்டி. நான் இருநூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பிடிக்கப் போகிறேன். நீங்கள் கட்டாயம் வந்து பார்க்க வேண்டும்.''

எனக்கு சிரிப்புத்தான் வந்தது. உயர்தர வகுப்பு மாணவிகள் பங்குபற்றப்போகும் போட்டி. அதிலும் அந்தப் பாடசாலை சென்ற வருடம் இருநூறு மீற்றர் ஓட்டப்போட்டியில் அகில இலங்கை சாதனையை முறியடித்திருந்தது. எனது ஆச்சரியத்தை மறைத்தபடி, ''சரி... நீதான் கட்டாயம் வெற்றி பெறுவாய்...'' என்று வாழ்த்தி விட்டு விடைபெற்றேன்.

ஜனனி என்றால் எங்கள் வீட்டில் மனைவி, பிள்ளைகள் அனைவருக்குமே நன்கு பிடிக்கும். உரிமை எடுத்து உள்வீட்டுப் பிள்ளையைப் போல பழகுவாள். அவளுடைய வீட்டில் ஒரு விசேஷம் என்றால், அதை எங்கள் வீட்டு விசேஷமாக்கி வைப்பாள். எங்கள் வீட்டில் ஒரு விருந்து வைபவம் என்றால் அதைத் தன்வீட்டு வைபவமாகக் கருதி முன்னின்று நடாத்தி வைப்பாள். எப்போதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்து நிற்கும் துடுக்குத்தனத்தால் எல்லோரையும் எப்போதுமே மகிழ்ச்சியாக வைத்திருப்பாள்.

அவளது பிஞ்சு மனத்தை நோகடிக்கக் கூடாதென்பதற்காகவே நான் எனது சிரமங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அவளுக்காக எதையும் செய்வேன்.

அன்றொருநாள் என்னிடம் ஓடி வந்தாள். ''அங்கிள்... அங்கிள்... நாங்கள் எங்கள் பாடசாலை நிதிக்காக அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தப் போகிறோம். நீங்கள்தான் கைவிசேடமாக என்னிடமிருந்து முதலாவது சீட்டை வாங்கவேண்டும்'' என்று கூறிப் பிடிவாதம் பிடித்தாள்.

நானும் இரண்டு சீட்டுக்களைப் பெயரெழுதி எடுத்தேன். அவளால் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. ''அங்கிள்.... இந்தச் சீட்டு விற்பனையில் யார் அதிகம் சீட்டுக்களை விற்கிறார்களோ, அவர்களுக்கும் பரிசு கொடுக்கவிருக்கிறார்கள். அந்தப் பரிசு எனக்குத்தான்'' என்று கூறிக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். குழந்தைப் பிள்ளைதானே, தனது ஆசையைச் சொல்கிறது என நான் நினைத்தாலும் வாழ்த்தியனுப்பினேன்.

சில நாட்களில் மீண்டும் ஓடி வந்தாள். ''அங்கிள்... எனக்குச் சீட்டு விற்பனையில் பரிசு கிடைத்து விட்டது'' எனக்கூறிக் குதூகலித்தாள். எப்படி இவளுக்குச் சாத்தியமானது? என்று எனக்கு அதிசயமாக இருந்தாலும், ''சீட்டுக்கள் விற்பனைக்குப் பொறுப்பான ஆசிரியை உனக்கு உதவியிருப்பாள்'' என்று கூறிக் கேலி செய்தேன்.

''இல்லை அங்கிள்.... பாடசாலை மட்டத்தில் ஒரு ஆசிரியை அப்படியெல்லாம் பக்கச் சார்பாக நடக்கமாட்டார். சீட்டுக்கள் விற்பனைக்கு ஒவ்வொரு மாணவிக்கும் இருபத்தைந்து சீட்டுக்கள் கொண்ட ஐந்து புத்தகங்கள் வழங்கப்பட்டன. உண்மையில் இது அவர்களுக்குப் பெரியதொரு சுமையென்பது அவர்களது பேச்சிலிருந்து புரிந்தது. எதற்கும் பரிசு எனக்கு என்பது நிச்சயமாக இருக்கட்டுமே என்பதற்காக நான் ஒருவருமறியாமல் ஆசிரியையிடம் இன்னொரு புத்தகத்தைப் பெற்று அதிலும் பல சீட்டுக்களை விற்றுவிட்டேன். அதனால்தால் எனக்குப் பரிசு நிச்சயமாயிற்று!'' என விளக்கினாள். இப்படியே.... ''இவள் ஏன் எனக்குப் பிள்ளையாக இருந்திருக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது?'' என்று எனது மனம் பரிதவித்து ஏங்கும் வண்ணம் சாதனைகள் பல புரிவாள்.

இன்று ஓட்டப் பந்தயத்தில் முதலிடம் பெறப்போவதாக 'சலஞ்ச்' பண்ணிவிட்டு அமைதியாகப் போய்விட்டாள். எனது மனமோ, ''கடவுளே! ஜனனிக்குத்தான் முதலிடம் கிடைக்கவேண்டும்'' என்று பலமாகப் பிரார்த்தித்துக்கொண்டது.

மாலையில் இறுதிப் போட்டிகள் ஆரம்பிக்கும் நேரத்திற்கு மைதானத்திற்குப் போய்விட்டேன். சில போட்டிகள் நடைபெற்றன. சில மாணவிகள் அடுத்தடுத்த போட்டிகளுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஜனனியை மட்டும் காணவில்லை.

ஜனனி விளையாட்டுப் போட்டிகளில் அதிக ஆர்வம் காட்டுபவளல்ல. படிப்பும், பரீட்சையுமென்றுதான் கவனமெடுப்பாள். எப்படி 'ரிஸ்க்' எடுத்து இந்தப் போட்டியில் கால் வைத்தாள் என்று ஆச்சரியமாக இருந்தது. ஒலிபெருக்கியில் இருநூறு மீற்றர் இறுதிப் போட்டிக்கான அறிவித்தலில் ஜனனியின் பெயரும் பங்குபற்றுவோரின் பட்டியலிலிருந்து வாசிக்கப்பட்டது. ஓட்டப் போட்டிக்கான வெள்ளைச் சீருடையில் ஜனனி நம்பிக்கையுடன் ஓடி வந்தாள். போட்டி ஆரம்பமாகியது. எனது மனமோ ஒரு நிலையிலில்லை. ''ஜனனி தோற்றுவிடக்கூடாது காளித்தாயே.... உனக்கு ஒரு அர்ச்சனை. அவள் வென்று விடவேண்டும்'' என வேண்டிக் கொண்டேன்.

ஜனனியைக் காட்டிலும் உயரமான மாணவிகள் சிலரும் இருந்தார்கள். குள்ளமானவர்களும் இருந்தார்கள்.

போட்டி ஆரம்பிக்கப்பட்டபோது, ஜனனியின் ஆரம்பம் தடுமாற்றமாக இருந்தது. ஆனால், 'ஸ்ரெப்ஸ்' அகன்றவையாக இருந்தன. அவளது வளமான உடல்நிலை கால்களின் வலுவில் தெரிந்தது. படிப்படியாக ஒவ்வொருவரையும் பின்தள்ளினாள். நாலாமிடம்... மூன்றாமிடம்.... இரண்டாமிடம்தான் என்று எல்லோரும் எண்ணியிருந்த சமயம் அவளது மனவலு ஒரு மயிரிழையில் அவளை முதல் நிலைப்படுத்தியது.

அவளது இல்ல மாணவிகளுடன் இணைந்து நானும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தேன். நான் அமர்ந்திருந்த இடத்தை துல்லியமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடித்து எனக்கு கையசைத்தபடி தனது இல்லக் கூடாரத்திற்குள் ஓடி மறைந்தாள்.

இரவு. நான் ஓய்வாக எனது மேசையில் எழுத்து வேலையில் ஈடுபட்டிருந்தேன்.

''அங்கிள்...'' என்று அழைத்தபடி ஜனனி ஓடி வந்து எனக்கெதிராக அமர்ந்தாள்.

''ஜனனி... உன்னால் இது எப்படி சாத்தியமாகிறது?'' என்று ஆச்சரியப்பட்டு வினவினேன்.

''அங்கிள்.... இந்தப் போட்டியில் நான் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகப் பயிற்சி என்று எதுவும் செய்யவில்லை. இந்தப் போட்டிகளுக்கான பயிற்சிகள் மைதானத்தில் நடந்தபோது நான் எதேச்சையாக அங்கு நின்றேன். எனது நண்பி ஒருத்தி சென்ற ஆண்டு சாதனை நிலைநாட்டிய மாணவியை எட்டிப்பிடித்து வேகமாக ஓடினாள். பின்னர் அதே நண்பி என்னைத் தனக்குத் துணையாகப் பயிற்சிகளில் ஈடுபடக் கேட்டபோது நானும் அவளுடன் சேர்ந்து ஓடினேன். அப்போதுதான் என்னிடமிருந்த ஓட்டத் திறமை வெளிப்பட்டது. எனது நண்பியால் என்னை நெருங்க முடியவில்லை. இதை வைத்து நான் கணக்குப் போட்டேன். வெற்றியும் பெற்றேன்....''

எனது மனைவி அருகிலிருந்து சிரித்தபடி கேட்டுக் கொண்டிருந்தவள், திடீரென ஜனனியிடம்,

''ஜனனி... நீங்கள் படிப்பிலும்சரி,.. விளையாட்டிலும்சரி... வேறு எந்த துறையிலும் சரி தனித்துவமான முறையில் வெற்றியைப் பெறுகிறீர்கள். அப்படியே உங்களுக்கு எதிர்காலத்தில் அவசியமான வாழ்க்கைத்துணையைப் பெறும் விஷயத்திலும் நீங்கள் ஏதாவது தனித்துவத்தைக் காட்டி வெற்றி பெறுவீர்களா?''

ஜனனி ஒரு கணம் கூச்சத்துடன் தலையைத் தாழ்த்தினாள். பின்னர் நிமிர்ந்து,

''அன்ரி... எனக்கு வரவேண்டிய.... நான் விரும்புகின்ற துணைவன்.... பெற்றோருக்கு கட்டுப்பட்டு, அவர்களுடைய சொற்கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் ஒருவனாகத்தான் இருக்கவேண்டும். அப்படிப் பார்த்தால், எனக்கு ஒரு பையனைப் பிடித்துக் கொண்டால், நான் அவனுடைய பெற்றோரின் அன்பைத்தான் முதலில் பெறுவேன்!'' என்று கூறி எங்களிருவரையும் நம்பிக்கையுடன் பார்த்துச் சிரித்தாள்.

கேள்வி கேட்ட எனது மனைவி 'சரியா?' என்ற கேள்விக் குறியோடு என்னைப் பார்த்தாள்.

நானும் 'சரி' என்ற பதில் முகத்தில் விளங்கத் தலையாட்டினேன்.

எங்களுடைய மகன் எங்கள் சொல்லைத் தட்ட மாட்டான்!

**ஜுன் 30, ஜுலை 6, 2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது வேறு சமாச்சாரம்

காலையில் எழுந்ததும் தளபாடங்களைத் தூசி தட்டி, வீட்டைப் பெருக்கி முற்றம், வளவு கூட்டி தண்ணீர் தெளித்த பின்னரே பாக்கியம் குளிக்கப் போவாள். செவ்வாய், வெள்ளி தினங்களில் கோலம் போடுவது மேலதிக வேலை. இந்த அறுபது வயதிலும், 'நான் காலையில் எழுந்து குறிப்பிட்ட சின்னச் சின்ன வேலைகளை ஒரு நாள் தவறாமல் செய்வேன்' என்கின்ற மனவுறுதி இருக்கின்றதே.... அதில் அவள் எப்பொழுதாகிலும் சோர்வடைந்தது கிடையாது.

ஆனால்.... அவளுடைய ஒரே மகன் இந்தச் சின்ன வயதில், அநாவசியமாக ஒருத்தியைக் காதலித்து, கைப்பிடித்து தனக்கு மனைவியில்லாத குறையையும், தாய்க்கு மருமகள் இல்லாத குறையையும் தீர்ப்பதற்காக அவளை விவாகம் செய்து வீட்டிற்கு கூட்டி வந்தபின்னர் அவளுடைய மனவுறுதியிலும் சிறிதளவு தளர்வு ஏற்படவே செய்தது.

காலை ஆகாரத்தை மூவருக்குமாகத் தயார் செய்து... மகனைச் சாப்பிட வைத்து, அலுவலகத்திற்குப் போகும் ஆயத்தங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்து கொடுத்து.... அடையாள அட்டை சட்டைப் பையில் இருக்கின்றதா என்பதைக் கவனத்துடன் உறுதி செய்த பின்னர், வாசல்வரை சென்று அவனை அனுப்பி வைத்து 'கேற்றை' மறுபடி சாத்திவிட்டு வரும்வரை அவளுடைய மருமகள் வசந்தி அப்போதும் கட்டிலால் எழும்பவில்லை!

''வசந்தி..... வசந்தி....'' என்று பாக்கியம் பல தடவை குரல் கொடுத்துப் பார்த்தாள்.

முதலில், ''ம்... ம்...'' என்று மரத்தால் விழுந்தவளைப் போல் ஒரு அனுங்கல்... சிறிது நேரத்தின் பின், ''எழும்புவன்தானே....'' என்று ஒரு உறுதிமொழி. பின்னர், ''இது என்ன கரைச்சல்.....'' என்று ஒரு சலிப்பு....

வசந்தி கட்டிலில் படுத்திருந்தபடியே கைகளிரண்டையும் உயர்த்தி, நீட்டி உடம்பைப் புரட்டியதில் இரவு காலந்தாழ்த்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கியதால் உண்டான அலுப்பு சிறிதளவு நீங்க நடு மண்டபத்திற்குள் வந்தவள், 'சோபா'வைக் கண்டதும் அதில் தொப்பென அமர்ந்து கொண்டாள்.

பாக்கியத்துக்கு நாள்பூராகவும் வேலை ஓயாது. எதையாவது செய்து கொண்டுதான் இருப்பாள். வீடு, பாத்திரங்கள், உடுதுணிகள் எல்லாமே, எப்போதும் அவளுக்கு துலங்கியபடியிருக்கவேண்டும்.

இரவு போட்டிருந்த 'நைற்றி'யுடனும் விடியாத முகத்துடனும் நாவூற்றுக்குக் கழித்த பூசனிக்காயைப் போல மருமகள் வந்து நடு மண்டபத்தில் இருந்தது பாக்கியத்திற்கு பெரும் ஆத்திரத்தையே உண்டு பண்ணியது.

''வசந்தி.... இனி உங்கடை வீட்டுப் பழக்க வழக்கங்களை யெல்லாம் மறந்து விட்டு, எங்களுடைய வீட்டு நடைமுறை, சம்பிரதாயங்களுக்கு மாற வேணும்... சரியே பிள்ளை...."

பாக்கியம் அன்பாகத்தான் கூறினாள். ஆனால், வசந்திக்கு அது தைத்து விட்டது. எழுந்து சென்று குளியலறையைப் பூட்டிக் கொண்டாள். இடையில், நடு மண்டபம் பூராக நீரை வாரியிறைத்தபடி அவளுக்கென ஒதுக்கப்பட்ட அறையிலிருந்து மாற்றுடைகளை எடுத்துச் சென்றாள். அரை மணித்தியாலம் பிடித்தது வெளியில வர!

அதற்குள் பாக்கியம் முற்றத்திலும், சாடிகளிலும் நின்ற பூமரங்கள் மற்றும் குரோட்டன் வகைகளுக்கு நீரூற்றிவிட்டுக் காலை ஆகாரத்திற்காக மருமகளை எதிர்பார்த்தாள்.

''மாமி.... எங்கடை வீட்டுப் பழக்க வழக்கமெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" வசந்தி அராத்தினாள்.

தனது வயதிற்கு இப்படிப்பட்ட சிறிசு ஒன்று கேட்கும் கேள்விக்கு மறுமொழி சொல்ல வேண்டி வந்திருப்பது தனது விதிதான் என்று நொந்துகொண்ட பாக்கியம் ''ஏன் பிள்ளை... உனக்குப் பசிக்கேல்லையா...? வாவன் சாப்பிட...." என அழைத்து கதையைத் திசை திருப்பி, ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள்.

வசந்தி மேசையில் இருந்த ஆகாரத்தை 'சில்வர்' தட்டில் வைத்து எடுத்தவள், கதிரையை மேசைக்குப் புறம் காட்டி இழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்த்தி காலை நீட்டி அமர்ந்தபடி ருசித்துச் சாப்பிடத் தொடங்கினாள்.

''மாமி... என்னை எத்தனையோ இடத்தாலை பெண் கேட்டு வந்தவை. அம்மா, அப்பா என்னைக் கட்டிக் கொடுப்பதாயின் ஒரு 'இஞ்சினியர்' 'டொக்டர்'ருக்குத்தான் கொடுப்பம் எண்டு ஒரே முடிவாய் சொல்லி, தட்டிக் கழிச்சுப் போட்டினம். உங்கடை மகன்தான் 'ரியூட்ஸ்', 'நோட்ஸ்' என்று சாட்டுக்கூறி அடிக்கடி வீட்டுக்கு வந்ததுமல்லாமல் அம்மா அப்பா வரவேண்டாம் எண்டு தடுக்கவும், களவாக மதில் பாய்ஞ்சு வந்து என்னைக் காதலித்தவர்.''

பாக்கியத்துக்கு இடுப்புச் சேலை நழுவியது போல் இருந்தது. அடுப்பில் பால் கொதித்துக் கொண்டிருந்தது. இரண்டு கிண்ணங்களில் ஊற்றிக் கொண்டவள், சீனியை அளவுடன் போட்டு வசந்தியிடம் கொடுத்தாள்.

'எங்களுடைய பிள்ளைகளே எங்களை விலைபேசி விக்கேக்கை நாங்கள் என்ன செய்யிறது...?' என்று நினைத்து வெதும்பியபடியே பாக்கியம் மதிய உணவைச் சமைப்பதற்கான ஆயத்தங்களைத் துரிதப்படுத்தினாள்.

சுளகில் அரிசியைப் பரவி வசந்தியிடம் கொடுத்துவிட்டு மரக்கறிகளை வெட்டத் தொடங்கினாள். வசந்தி அரிசிக்குள் கையை வைத்துக் கிளறியபடி இருந்தாளேயல்லாமல் கற்கள் கழிவுகள் இருக்கின்றனவா என்று சிரத்தை எடுத்துப் பார்க்கவில்லை. அப்படியே இருந்தவள் திடீரென விம்மி விம்மி அழத் தொடங்கினாள். பாக்கியம் பயந்து விட்டாள்.

''என்ன பிள்ளை... என்ன செய்யிது?'' பரிவுடன் வினவினாள்.

''இல்லை மாமி... எங்கடை வீட்டிலை.... அம்மா இப்படியெல்லாம் வேலை எனக்குத் தரமாட்டா.... 'நீ போய் படி பிள்ளை... நான் சமைப்பன்' எண்டு சொல்லி அம்மா என்னை வேலை செய்ய விட மாட்டா....'' பாக்கியத்திற்கு பெரிய இக்கட்டான நிலை...

''அது பிள்ளை... நீ படிக்கேக்கை படிப்புக் குழம்பக் கூடாது எண்டு அம்மா சொல்லியிருப்பா.... நெடுக ஒரு பொம்பிளைப் பிள்ளை அப்படியிருக்க முடியுமே....? அதுவும் புகுந்த வீட்டிலை ஒரு பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள் என்றால் எண்ணெய் என்று நிக்கவெல்லே வேணும்...."

பாதிக் கதை கேட்டதும் கோட்காததுமாக வசந்தி ஓடிச் சென்று தனது கட்டிலில் விழுந்து விட்டாள்.

பாக்கியத்திற்குப் பெரிய அவமானமாகப் போய்விட்டது. 'தகப்பன் இல்லாமல் இருந்த நிலையில் கஷ்டப்பட்டு ஒரு ஆண் பிள்ளையை வளர்த்து, படிப்பித்து எடுப்பதென்றால் ஒரு பெண்ணுக்கு இந் நாட்களில் இலகுவான வேலையா? கைக்குள் வளர்ந்த பிள்ளை. தானுண்டு, தனது தாயுண்டு என்று இருந்து அவளுடைய மனக் கவலைக ளுக்கெல்லாம் ஒரு பரிகாரமாக இருந்த பிள்ளை, இன்று ஒரு பிரச்சனையைக் கொணர்ந்து வைத்திருக்கிறது. சமாளிக்கத்தான் வேணும்' என்று நினைத்தபடியே முழுப் பொறுப்பையும் ஏற்றுச் சமையலைக் கவனித்தாள்.

மதியம் மகன் வந்ததுமே வெளியே வசந்தியைக் காணாததால் அறைக்குள் போனான். வசந்தி அறைக்குள் குப்புறக் கிடந்தாள். ''என்ன வசந்தி.... இன்னமும் எழும்பேல்லையா?" கட்டிலில் அவளின் இடுப்பருகே அமர்ந்தவனின் மடியில் முகம் பதித்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள். தலையணையும் நனைந்திருந்தது.

''நான் இனி ஒரு நிமிஷமும் இஞ்சை இருக்க மாட்டேன்...."

''ஏன் வசந்தி... என்ன நடந்தது? சொல்லேன்...." தடவிக் கொடுத்தான்.

''உங்களை நான் காதலிச்சுப் பிடிச்சுப் போட்டன் எண்டு உங்கட அம்மாவுக்கு என்னிலை சரியான கோபம். நீங்கள் போன நேரம் தொடக்கம் எனக்கு ஒரே ஏச்சும் பேச்சும்தான்."

''அம்மா இந்தக் கலியாணத்திற்கு முதலிலேயே மறுத்தவதான். அந்தக் கோபம் இன்னமும் இருக்குப் போல" என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டவன், தனது மனைவிக்கு நியாயம் செய்வதுபோல முடிவெடுத்து....

''அம்மா... நாங்கள் இப்பவே வசந்தி வீட்டை போறம். உங்கள் ரெண்டு பேருக்குமிடையில் எந்த நேரமும் என்னால சமரசம் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலாது.''

பாக்கியம் திடுக்கிட்டாள். இப்படியொரு முடிவை தனிக் கட்டையான அவள் எதிர்பார்க்கவேயில்லை. மகனின் காலில் விழாத குறையாகக் கெஞ்சினாள். பலன் இல்லை. அவன் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான். ''கிட்ட இருந்து சண்டை பிடிக்கிறதைக் காட்டிலும் அம்மா.... எட்ட இருந்து ஒற்றுமையாக இருக்கிறது மேல்.'' போய் விட்டார்கள்.

பாக்கியத்தின் மனதில் மகன் கூறிய இறுதி வார்த்தை அலைபோல் வந்து மோதிக் கொண்டிருந்தது. அவளது மனது பெற்ற மனது. அவனை ஒரு கண் மூடாமல் வளர்த்தெடுத்து ஆளாக்கியவள். ஒரு நாள் பிரிந்து அறியாதவள். அவள் கேட்கவேண்டிய வார்த்தையாகப் போய்விட்டது அது.

''கிட்ட இருந்து சண்டை பிடிக்கிறதைக் காட்டிலும் அம்மா... எட்ட இருந்து ஒற்றுமையாக இருக்கிறது மேல்...!

பாக்கியம் மாலையே மகனையும், மருமகளையும் சமாதானம் செய்து அழைத்துவர எண்ணி 'ஓட்டோ' ஒன்றைப் பிடித்து, அவர்கள் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். கஷ்டகாலந்தான்... அவள் போய்ச் சேர்ந்த நேரம் தாயும் மகளுமாகச் சேர்ந்து மகனை திட்டிக்கொண்டு இருந்தார்கள்.

பாக்கியம் முற்றம்வரை வந்துவிட்டதைக் கூட எவரும் கவனிக்கவில்லை.

''உங்கடை அம்மாவுக்குப் பெண் பிள்ளைகள் இருந்தால்தானே அருமை தெரிய.... நாங்கள் கிளிப்பிள்ளையை வளர்த்து வேட்டை நாய்கள் இருக்கிற வீட்டுக்கெல்லே அனுப்பி வைச்சிருக்கிறம்'' வசந்தியின் தாய் காட்டுக் கூச்சல் போட்டாள்.

பாக்கியம் அதன் பின்னர் அந்த வீட்டு முற்றத்தில் கொஞ்ச நேரம்கூட... நிற்கக் கூடாது. ஆனால் அவர்கள் இருவரதும் திட்டும், ஏச்சும் முடியும்வரை நின்றாள்.

''கிட்ட இருந்து சண்டை பிடிக்கிறதைக் காட்டிலும், எட்ட இருந்து கொண்டே ஒற்றுமையாக இருக்கலாம்'' என்ற கூற்றை அங்கே அவளது மகன் கூறவேயில்லை!

செப் 01-07, 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கடை சனம்...

நாட்டு நிலைமை முற்றிலுமாகத்தான் மாறிப்போய்விட்டது. நம்பவே முடியவில்லை. தெற்கில் இருந்து கிழக்குக்கு 'ரூர் பஸ்கள்' என்ன... 'வான்', 'கார்' என்று தனியார் வாகனங்கள் என்ன....

மூன்று மாதங்களுக்கு மேலாகச் சிறைவாசம் அனுபவித்துவிட்டு குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் விடுதலை பெற்று வந்த கிராமசேவகர் குமரகுருவுக்கு, கண்ணைக் கட்டி இருட்டில் வைத்திருந்து பின்னர் கட்டை அவிழ்த்து வெளிச்சத்தில் விட்டது போல இருந்தது.

'அறுவான்கள்.... சும்மா இருந்த என்னை என்ன மாதிரி மாட்டி விட்டான்கள்...'

சிறையில் இருந்த நாட்களில் குமரகுரு இப்படித்தான் இந்தச் சனத்தை நொந்து திட்டிக் கொண்டிருந்தார்...

சமாதான முன்னெடுப்புக்கள் அவருடைய விடுதலைக்கும் சார்பாக அமைந்து விட்டது!

சுதந்திரமாக வீட்டு முற்றத்தில் நடந்தபடி 'டூத் பிரஷை' கொடுப்புவரை செலுத்தி.... காவி படிந்த பற்களை ஒரே நாளில் வெண்மையாக்கிவிடும் முயற்சியில் அவர்.....

விடுதலையாகி வந்ததுமே பொதுநிர்வாக அமைச்சு அவர் முன்னர் ஒருமுறை சேவையாற்றிய அந்தப் பாரம் பரிய மீனவர் கிராமத்துக்கே திரும்பவும் நியமனத்தைக் கொடுத்துவிட்டது. அவருக்கு அது சிறிது ஆறுதலாக இருந்தாலும் இந்தச் சனத்தால்தான், தான் அடியும், 'நொருக்கும்' வாங்கி அவலப்படவேண்டி வந்ததென்பது மனதுக்குள் ஒரு தீராத நெருடலாக இருந்தது.

உண்மையிலேயே குமரகுரு கிராமசேவகர் ஒரு நல்ல மனிதர் மட்டுமல்ல.... அப்பாவி! இந்தக் கிராமத்தில் 'சமுர்த்தி' எடுக்காதவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்? மழை பெய்கையில் சிறிய காற்று வீசினால் போதும். எல்லோருக்குமே நட்டஈடு! நற்சான்றுப் பத்திரம் வேண்டுமா? உடனே!

அப்படிப்பட்ட தயாள குணத்தாற்தான் அவருக்கு அந்த வில்லங்கமும் வந்து சேர்ந்தது....

அவரது வீட்டு முற்றத்திலேயே 'சீற்றால்' வேய்ந்து தரை போடப்பட்ட கட்டடம்தான் அவருடைய அலுவலகம். திங்கள் வியாழன் நாட்களில் அவரிடம் வருபவர்கள் அமர்வதற்குப் பெண்களுக்கும் ஆண்களுக்குமாகத் தனித்தனி 'வாங்குகள்' போடப்பட்டிருந்தன.

சிலர் பாதணியை வெளியே கழற்றி விட்டுச் சென்று அமர்வார்கள். சிலர் அப்படிச் செய்ய மாட்டார்கள். அவரவர் பூர்த்தி செய்ய வருகின்ற தேவையின் கனதியைப் பொறுத்த விசயம் அது. இதனாலெல்லாம் குமரகுரு பாதிக்கப்படமாட்டார். ஆனால், கஷ்டகாலம் என்று வருகின்றபோது எந்த நல்ல குணங்களும் எவரையும் காப்பாற்ற மாட்டாது போலும்!

அப்படித்தான் அன்று சம்பவித்தது... நல்ல வாட்டசாட்டமான இளந்தாரி ஒருத்தன் அவரை சந்திக்க வந்திருந்தான். அவனுடைய சிரிப்பைப் பார்க்கிறவர்களுக்கு அவனுடன் முன்னைய பல ஜென்மங்களிலிருந்தே உறவுமுறை இருப்பது போலத்தான் தெரியும்....

பாவி சிரித்தவாறு வந்தான்.... குமரகுரு மருண்டே விட்டார்!

'டிஸ்ரிக் ஐடென்றி காட்' தானே? ஒரு நடைமுறைக்கு நான்கே நான்கு கேள்விகள் மட்டும் கேட்டார்.... தலையெழுத்தான கையெழுத்தைப் போட்டே விட்டார்!

அத்துடன் தொட்டது சனியன். உளவுப் பிரிவு வந்தது. அந்த இளைஞன் பற்றி கேள்விமேல் கேள்விகளைக் கேட்டது.... மேலதிக விபரத்தைத் தெரிந்து கொள்ளத் தங்களுடனேயே தலைநகருக்கு அழைத்துச் சென்று விட்டார்கள்!

வாயிற் கதவினை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. பல்துலக்கியபடியே சென்று பூட்டியிருந்த கதவினைத் திறந்து விட்டார் குமரகுரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி. கழுத்தில் கனதியான தாலிக்கொடி. செல்வத்தின் திமிர்ப்பு நன்கு துலங்கியது.

''போய் வாங்கிலை இருங்கோ''

''நான் பாருங்கோ ஒரு அவசரமான விசயமாய்...'' அந்தப் பெண் அவசரம் காட்டினாள். குமரகுரு இப்படி எத்தனை பேருடைய அவசரத்தைப் பார்த்தவர்.... பாதிக்கப்பட்டவர்...

''சரி இருங்கோவன் வாறன்....''

மேன் மேலும் இந்தச் சனம் அவசரம் காட்டித் தன்னை பிரச்சனையில் மாட்டி விடக்கூடும் என்பதில் அவர் விழிப்பாகவே இருந்தார்.

குளியலறைக்குச் சென்று குளித்து உடை மாற்றி....

இந்தப் பெண்ணை இதற்கு முன்பே சந்தித்ததான நினைப்பு ஒன்று அவர் மனதில் தோற்றம் பெற்று நின்று எச்சரித்தது...

''ஓ... பத்து வருடங்களுக்கு முன்னர் நான் இந்தப் பெண்ணைச் சந்தித்திருக்கின்றேன்...''

அப்போ நல்ல இளமைப் பொலிவுடன் இருந்த அவள்... அன்றொருநாள்,

''ஐயா... பொலிஸ்காரர் சோதனை என்று வந்து எங்கடை வீட்டுச் சாமான்கள் எல்லாத்தையும் உடைச்சதோடை என்னுடைய இவரையும் கூட்டிப் போயிற்றான்கள்...'' தலையில் அடித்தபடி அழுதாள்.

''ஏனாம்?'' குமரகுரு வினாவினார்.

அவள் சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்து அழுகையை அடக்க முயற்சித்தவாறு....

''எனக்கு மூண்டு ஆண்பிள்ளைகள். மூவருமே இளந்தாரிகள். பிரச்சனைக்குப் பயத்திலை நாங்கள் அவையளைத் தலைநகருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிப் போட்டம். பொலிஸ்காரர் சொல்லுகினம் ''இல்லை... இல்லை... மூண்டு பேரும் போராளிகளாய் போய்விட்டார்கள் என்று'' விம்மி விம்மி அழுகிறாள்.

''ஐயோ... ஐயா... உங்களைத்தான் நம்பி வந்தனான்.... என்னுடைய பிள்ளைகள் மூவரும் போராளிகள் இல்லை எண்டு உறுதிப்படுத்தி நீங்கள் ஒரு கடிதம் தர வேண்டும்.''

அவள் வற்புறுத்தினாள்.

''அம்மா, இது நடைமுறைச் சாத்தியம் இல்லை. நீங்கள் கொஞ்சம் யோசிக்க வேணும்.'' குமரகுரு பல நியாயங்களை எடுத்துக் காட்டி மறுத்துரைத்தார்.

தனது கருமம் சித்திக்காது என்பதை உணர்ந்து கொண்டதும் அவள் கோபம் உச்சத்துக்கு ஏறியது.... ''நீரும் ஒரு மனுசனோ; உம்மை பிறகு கவனிக்கிறேன்.''

ஏசி; எச்சரித்து விட்டுச் சென்று விட்டாள்.

குமரகுருவின் மனைவி காலை உணவை மேசைக்கு எடுத்திருந்தாள்.... அவர் சிறையால் வந்த பின்னரும் அவரது மனைவிக்குத் திகில் எடுபடவில்லை. அவரை அது பற்றியே திரும்பத் திரும்ப ஏதாவது கேட்பாள்.... ''ஏனப்பா... அந்த இளந்தாரி 'நேவி காம்பை' 'வீடியோ' எடுத்ததெண்ட கதையெல்லாம் பொய்யே?'' வினவினாள்.

''அதெல்லாம் சுத்தமான கட்டுக்கதை. 'காம்பிலை', 'கொன்ராக்ட்' வேலை ஒண்டுக்குக் கூலி வேலை செய்யத்தான் அந்தப் பெடியன் போனவன்... அங்கை வெவ்வேறு தொலைவு இடங்களில் நாளாந்தம் வேலை மாறி மாறி வரும். போ என்கிற இடத்துக்கு போக வேணும்... பிள்ளைக்கு இடம் வலம் தெரியேல்ல. அதாலை கடதாசி ஒண்டிலை வேலைத்தளங்கள் இருக்கிற இடங்களைப் படமாய்க் கீறி வைச்சுது. இதனாலதான் எல்லா வில்லங்கமும் வந்தது...

இடியப்பத்தை பாற்சொதியுடன் இரசித்து சாப்பிட்டபடியே கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தார். ஆனால், அவருடைய நினைவெல்லாம் தனக்காகக் காத்திருக்கும் அந்தப் பெண் பற்றியே இருந்தது.

கையை அலம்பிவிட்டு நேரே அலுவலக அறைக்குப் போனார்... ''என்னம்மா விசயம்...?''

அது பாருங்கோ.... என்னுடைய இவர் வெளிநாடு போய் ஒரு வருஷமாய்ப் போச்சு. அகதி அந்தஸ்துக் கேட்டு விண்ணப்பிச்சிருக்கிறார். 'கேசு'க்கு சில ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டி இருக்கு...''

பிரச்சனை வந்ததும் வந்து.... அதனால் ஏற்பட்ட அவலங்களுக்கு அப்பால் எத்தனையோர் பேர் வெளிநாடு சென்று தங்கள் தங்கள் நிலவரங்களை உயர்த்திக்கொண்டு விட்டார்கள். அரசாங்க உத்தியோகம் என்று இங்கு தங்கி விட்டவர்கள் 'பென்சனை' எதிர்பார்த்து வேலையைத் தூக்கி எறிய மாட்டாதவராகப் போய்விட்டார்கள். இதற்கும் மேலாகத் தங்கள் தங்கள் மழலைச் செல்வங்களை சிறப்பாக வளர்த்து ஆளாக்க முடியாத அவர்கள் கஷ்டம் சொல்லி முடியாது.

சொந்த பந்தம், சினேகிதம் என்று வெளிநாட்டில் யாராவது இருந்தால் சரி.... இல்லாவிட்டால் நாளாந்த வாழ்க்கையை ஓட்டுவதே சிரமம்.

பிரச்சனை எதுவும் இல்லாவிட்டால் அந்த வெளிநாட்டு உதவியுடைய பெண்மணிக்கு உதவி செய்யவே குமரகுரு விரும்பினார். ''எறிகின்ற அகப்பையையும் சொருகி வைக்க வேணும்'' என்று ஒரு பழமொழி இருக்கிறது. அதுவும் அப்போது அவருக்கு நினைவு வந்தது.

''வெளிநாட்டிலை இருக்கிற உங்கள் கணவருக்கு நான் எப்படி அம்மா உதவி செய்வது?'' அவருடைய கேள்விக்கு அந்தப் பெண் தெளிவாகவே பதில் கூறினாள். ஆனால், குமரகுருவுக்கு அதனைச் சரியாகக் கிரகிக்க முடியாத ஒரு திகைப்பு.... தனது பிடரியை வலது கரத்தால் தடவிவிட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்பு அவருக்கு வழங்கப்பட்ட 'உபசாரத்தில்' தலையில் ஏற்பட்டிருந்த கண்டலின் உக்கிரம் மனைவி கொடுத்த சுடுநீர் ஒத்தடத்தால் இப்போதுதான் சிறிதளவு குறைவடைந்து வருகின்றது. அவர் யோசிப்பதையும் பதில் எதுவும் கூறாததையும் கவனித்துவிட்டு அப்பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் கெஞ்சிக் கேட்டாள்....

‘‘ஐயா.... நாங்கள் அநாதைகள். எங்களுடைய பிள்ளைகள் மூவரும் போராட்டத்துக்குப் போய்விட்டார்கள் என்று நீங்கள் உறுதிப்படுத்த வேணும்.’’

‘‘ஐயோ.... எங்கடை சனம்....’’ என்று மட்டும் அவர் வாய் முணுமுணுத்தது!

ஒக் 20-26, 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச விடுதி

மாசி மாதமாகையால் காலைக் கதிரவனின் ஒளிக்கற்றைகளை ஊடறுத்து மென்பனி அப்போதும் பெய்து கொண்டிருந்தது. ஓலையால் வேய்ந்திருந்த எங்கள் வீட்டுக்கூரை மழையினால் நனைந்தது போல பனியில் தெப்பமாகி விட்டிருந்தது....

குழந்தைகள் நால்வரும் பாடசாலைக்கு புறப்படும் ஆயத்த நடவடிக்கைகளில் தாய் இந்துவைப் பியத்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். உலர்ந்துவிடும் என்ற நம்பிக்கையில் இரவு வெளிக் கொடியில் விரித்த சீருடைகள் பனியில் நனைந்ததனால் இந்து அவற்றை இஸ்திரிக்கை செய்து காய்ச்ச வேண்டியிருந்தது. அதனாலேயே அன்று அனைத்துக் கருமங்களும் தடங்கலாகிக் கொண்டிருந்தன.

பிள்ளைகள் பாடசாலைக்குப் புறப்பட்டவுடனேயே சந்தை கலைந்தது போன்று வீட்டு ஆரவாரங்கள் அனைத்தும் முற்றாக அடங்கி விட்டது.

''என்னப்பா.... சந்திரன் முதலாளி 'கடைக் கணக்கை இந்த மாதம் முற்றாகத் தீர்க்காவிட்டால் சாமான் தரமாட்டன்' எண்டு சொல்லிப் போட்டான்.... வளருகின்ற பிள்ளைகளை வைத்துக் கொண்டு இந்தக் கொட்டில் வீட்டிலை நான் எப்படிச் சமாளிக்கிறது.... வெற்றிடமாகியுள்ள 'லேபர் குவார்ட்டசை' இந்த முறையாவது பணிப்பாளரைப் பிடித்து எடுக்கப் பாருங்கோ....'' இது இந்துவின் சிணுங்கல்.

நான் அலுவலகப் பணியாளராகக் கடமை ஏற்று இருபது வருடங்கள் ஆகிவிட்டது. மாகாணசபை அமைப்பில் பல வசதிகளையும் பெறலாம் என்கின்ற நம்பிக்கையில் மத்திய அரச பணியிலிருந்து மாறி வந்தது பெரிய தவறாகப் போய்விட்டது. மாகாணசபையின் கீழ் செல்வாக்கைப் பிரயோகித்து அமைய ஊழியர்களாக இணைந்தவர்களே நிரந்தர நியமனமும் பெற்று விடுதியிலும் சுகமாக வாழுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து எனக்குக் காலை உணவு பரிமாறி, உடைகளைத் தெரிவு செய்து தந்து மற்றும் அவசியமான உதவி ஒத்தசைகளை வழங்கி, பின் தானும் சென்று குளித்து மாற்றுடை அணிந்து பூவைத்துப் பொட்டிட்டு என் முன்னால் பிரசன்னமானாள்.

அலுவலகத்திற்குச் செல்லும் கணவனை மன மகிழ்ச்சியுடன் அனுப்பிவைக்க வேண்டிய பொறுப்பினை அவள் எப்படி நிறைவேற்றுகின்றாள்....! ஆனால் தனது ஊழியன் ஒருவன் அலுவலகத்தில் மனநிறைவுடன் பணிபுரிகின்றானா என்பதை எந்த நிர்வாக மட்டத்திலாவது கிஞ்சித்தேனும் நினைத்துப் பார்க்கிறார்களா?

"இந்து.... நீ கவலைப்படாதே. நான் சந்திரனோடு கதைச்சுத் தவணை கேட்கிறன். விடுதி விசயமாக பணிப்பாளரோடை விபரமாகவும் பணிவாகவும் கதைச்சு வைத்திருக்கிறன். இந்த முறை தப்பாது...."

மனைவிக்கு ஆறுதல் கூறிவிட்டு எனது துவிச்சக்கர வண்டிச் சக்கரங்களின் காற்றமுத்தத்தைச் சரி பார்த்த பின்னர் மனைவியிடம் விடைபெற்றுச் சென்றேன்.

எங்கள் அலுவலகத்தில் இருபதுக்கும் மேற்பட்ட அலுவலர்கள் பணிபுரிகின்றார்கள். வேலையில் எந்தத் தடங்கலும் இருக்க மாட்டாது. அதே சமயம் கதை பேச்சு பகிடிக்கும் குறைவிருக்காது. அன்றைய தினம் ஏதோ காரணத்தால் பல அலுவலர்கள் எதிர்பாராத படி லீவில் நின்றுவிட்டிருந்தார்கள். அப்படியான சமயத்திலும் அவர்களுடைய மேசைகளையும் தூசுதட்டி.... கிளாஸ்பாட் 'பொலிஷ்' செய்து கோவைகளை அடுக்கி குடிநீர் வைத்து....

"என்ன ரஞ்சன் யோசித்துக் கொண்டு.... நேரமாச்செல்லே.. எடுமன் தினவரவுப் பதிவேட்டை....." பிரதம எழுது வினைஞர் பணிக்கவும் துரிதமாகச் செயற்படுகின்றேன்.

இவா சாதாரண விடய எழுதுவினைஞராக இந்த அலுவலகத்திற்கு வந்து நான்கு மாதகாலம் தான் ஆகின்றது. அதற்குள்ளாகப் பிரதம எழுதுவினைஞராக உயர்ந்துள்ளா. ஐந்து வயதுக்குட்பட்ட இரண்டு குழந்தைகளைக் கொண்ட சிறிய குடும்பம். கணவன் அரச வங்கியின் ஏதோவொரு பிரிவில் பணிபுரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சியாகவும் விதம் விதமாகவும் ஆடைகள் அணிந்து எமது ஏனைய அலுவலகப் பெண்களுக்கு அதிரடி கொடுப்பா. முதுகு, இடை ஆகிய பகுதிகள் சற்றுப் பளிச்செனத் தெரியும்.... ''நேர்சரிக்கு'' பிள்ளைகளைக் கூட்டிப் போக... கூட்டிவர நான் வேண்டும்... காலைச் சாப்பாட்டை அலுவலகத்திற்கு எடுப்பிக்க நான் வேண்டும்..... புருஷன்காரன் அது இது என்று தொலைபேசியில் கேட்டால் நான் கொண்டோட வேண்டும்.

"ரஞ்சன்.... நேற்றுப் பணிப்பாளருக்குப் போட்ட கோவைகள் இரண்டு இன்னமும் வரவில்லை"

"சரி மேடம்... பார்க்கிறன்."

''ரஞ்சன்... நீர் உங்கை மற்ற மற்றவை ஏதும் 'பிரைவேட்' வேலை சொல்லிச்சினம் எண்டு ஓடித்திரியாதையும்... பணிப்பாளர் உம்மிலை சரியான கடுப்பிலை இருக்கிறார்... பிறகு என்னைக் குறை சொல்லாதையும்...."

''நான் அப்படி போறேல்ல மேடம்... உங்கட அலுவலாகப் போகேக்கை ஆரும் முத்திரை அது இது எண்டு கேட்டால் மாத்திரம் வாங்கிக் கொடுப்பன்"

''சரி சரி... நான் உம்முடைய நன்மைக்காகத்தான் சொன்னனான். எங்கடை விடுதிக்குப் பின்னாலை கண்டபாட்டுக்கு புதர் மண்டிக் கிடக்குது.... எப்ப எண்டாலும் உம்மை நான் கூப்பிட்டனானா?"

இவர் என்னை விலை பேசி வாங்கினாலும் வாங்குவா போலத்தான் கிடக்குது...! எமது அலுவலக தோட்டத்தொழிலாளிக்கு வேலை போதாது, சுகாதாரத் தொழிலாளியின்ர கடமைகளையும் சேர்த்துச் செய்ய வேண்டும் என்று அவனை வெருட்டிய வெருட்டில் அவன் பல மணி நேரம் இவாவினுடைய விடுதியில்தான் வேலை செய்து கொண்டு நிற்கிறான். இவவோடை எந்த வகையிலும் பிரச்சனைப்பட்டுவிடக் கூடாது. விடுதி விசயம் கனிந்து கொண்டு வருகிற இந்த நேரத்தில் இன்னும் கவனமாக இருக்க வேணும்...

சிந்தித்தபடியே சென்று எனக்குரிய இடத்தில் அமர்கிறேன். பணிப்பாளர் வரவும் அவரது கையொப்பத்திற்காகத் தினவரவுப்பதிவேட்டை எடுத்துச் செல்கிறேன். நான் வெளியே வரவும் 'மேடம்' உள்ளே சென்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரஞ்சன்..." -மற்றொரு விடய எழுதுநர் விஜயன் சேர் என்னை அழைத்தார். இவர் வேலை செய்கின்றாரோ என்னவோ தப்பாமல் கால்களை ஆட்டியபடி பார்வையை கோவை ஒன்றில் பதித்தபடி யார் யார் என்ன செய்கின்றார்கள் என்பதை அவதானிப்பதில் வல்லவர்.

"ஓம் சேர்... சொல்லுங்கோ"

"கிட்ட வாவன்ராப்பா... சொல்ல" விஜயன்கூறவும் அவரை மிகமிக அண்மித்தேன்.

"உன்னுடைய அரச விடுதி விசயம் என்ன மாதிரி...?" -வினவினார்.

"நேற்றுத்தான் 'மேடம்' கோவையை பணிப்பாளருக்குப் போட்டுள்ளா. எனக்குத்தான் அதிக புள்ளிகள். பணிப்பாளருக்கும் எனது கஷ்டங்களைச் சொல்லியிருக்கிறேன். இந்த முறை எப்படியும் எனக்கு விடுதி கிடைக்கும்" நம்பிக்கை தெரிவித்தேன்.

விஜயன் 'சேர்' எனது முகத்தைப் பார்த்தார்... சற்று ஏளனமாகச் சிரித்தார். அவர் இப்படித்தான். எதிலும் எவர் மேலும் இலகுவில் நம்பிக்கை வைக்கமாட்டார். மற்றவர்கள் நம்பிக்கை வைக்கும் விடயங்களையும் அவநம்பிக்கையுடன்தான் நோக்குவார். ஆனாலும் அவருக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரம் எமது அலுவலகத்திலேயே இருந்தது. அதுவே கலாசாரத்தை உறுதியுடன் பின்பற்றும் அனோஜா என்ற 'புயல்...!'

நான் எனது அலுவலகத்தில் பல வருடங்கள் பணிபுரிந்து கொண்டிருந்தும் ஒரு அரச விடுதியைப் பெற முடியாமல் அவதிப்படுகிறேன். பணிப்பாளர் நல்லவர். அவரது விடுதியில் இன்று குலைதள்ளி உள்ள வாழைகள் அத்தனையும் நான் ஆழக்கிடங்கு வெட்டி வைத்தவைதான். அவர் கேட்டு நான் செய்யாத உதவிகள்தான் என்ன? எப்படியும் அரச விடுதி இம்முறை எனக்குத்தான் கிடைக்கும்.

"என்ன ரஞ்சன்... பணிப்பாளர் இப்ப முன்னர் போல இல்லை எண்டு கந்தோரிலை ஒரே கதையாய்க் கிடக்கு... அலுவலர்களோடு இறுக்கமாம். ஆரோ இஞ்ச இருந்து அவருக்கு கதைகள் கொண்டு போறதாகக் கதைக்கினம். நீர் பணிப்பாளரோடு நெருங்கி பேசிப் பழகினாலும் அப்படிக் கதை காவமாட்டீர் என்பதும் எங்களுக்குத் தெரியும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ மிஸ்! நான் அப்படி செய்வனா... இது எனக்கொரு புதுக்கதை!" நான் பதறினேன்.

"நீர் ஒரு குழந்தைப் பிள்ளை... போன கிழமை எங்கடை லிகிதர் ஒருவர் இடமாற்றத்திலை அனுப்பப்பட்டிருக்கிறார். களஞ்சியப் பொறுப்பாளர் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார். ஒன்றும் அறியாத காவலாளிக்கு வேதன ஏற்றம் மறுக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் ஒரு பின்னணியில்லாமல் சும்மா நடக்கேல்லை."

அனோஜா மிஸ் கூறவும் எனக்கு மலைப்பாக இருந்தது. ஏற்க முடியாமலும் இருந்தது.

"எமது பணிப்பாளர் நல்லவர். யாருக்கும் தீங்கு செய்யமாட்டார். மற்ற மற்றவை சொல்வதையும் நடுநிலமையிலை நிண்டு சரி எண்டு ஏற்றுக் கொண்டால்தான் செய்வார்." நான் விளக்கினேன் "நீர் சொல்லுவது சரி ரஞ்சன். எறும்பு ஊர கல்லும் தேயும் எண்டு நீர் கேள்விப்படவில்லையா? நாங்கள் கந்தோருக்கு வாறது வேலை செய்ய. வேலை முடிந்தால் பகிடி பேசி எதை எதையாவது கதைப்பம்... சில வேளைகளிலை எங்கடை எங்கடை கவலைகளையும் மற்ற மற்றவர்களிடம் சொல்லி ஆறுவம். பிறகு மறந்துவிடுவம். எங்களுடனேயே இருந்து கொண்டு ஒருவர் இதற்கெல்லாம் கண் காது மூக்கு வைத்து பணிப்பாளரிடம் கூறினால் அவருக்கு கோபம் வரக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்படுமில்லையா?"

அனோஜா மிஸ்ஸின் வாதத்தையும் மறுக்க முடியவில்லை. இப்போதெல்லாம் அலுவலகத்தில் முந்திய சந்தோஷம் மகிழ்ச்சி நன்றாக அருகிக்கொண்டு போகின்றது. யாரைப் பார்த்தாலும் 'உம்' என்று முகத்தை வைத்தபடி இருக்கிறார்கள். அளந்து அளந்து கதைக்கிறார்கள். ஏனைய அலுவலகங்களைப் புகழ்ந்து கதைக்கிறார்கள்.

எனது விடுதிப் பிரச்சினை எனது நினைவுக்கு வருகின்றது. எப்படியும் அரச விடுதி எனக்குக் கிடைக்கும். எனது மனைவி பிள்ளைகள் ஓலைக் குடிசையில் அனுபவித்து வரும் துன்ப துயரங்களுக்கு நிச்சயம் ஒரு முடிவு ஏற்படும்...

பணிப்பாளருக்காக நான் பட்ட கஷ்டங்களை செய்த உதவிகளை சொல்லி முடியாது! அவற்றினை அவர் மறந்து விடவும் இயலாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபனக் கோவையின் பிரமாணங்களுக்கு அமைவாகவும் எனக்கு அதி கூடிய புள்ளிகள் இருக்கின்றன...

குறுகிய நேர விடுதலை பெற்று மேடம் வெளியே செல்கின்றா... அலுவலகம் சுறுசுறுப்படைகிறது. ஒவ்வொருத்தரும் மற்ற மற்றவர்களுடன் கதைத்து சிரிக்கிறார்கள். அனோஜா மிஸ், விஜயன் சேரின் மேசைக்கு முன்னால் கதிரை போட்டு அமர்கின்றா...

எல்லோரும் அனைத்துத் துன்ப துயரங்களிலிருந்துமே விடுபட்டவர்கள் போல அக மகிழ்ந்து காணப்படுகிறார்கள்!

எனது அரச விடுதி ஒதுக்கீடு பற்றிய முடிவு? பணிப்பாளர் இன்று எப்படியும் முடிவினைத் தெரியப்படுத்துவார்.

எமது ஸ்ரெனோ அவசர அவசரமாகக் கடிதங்களை கணனியில் தட்டச்சு செய்து முடித்து பிரின்ரறில் பிரதிகளை எடுத்துக் கொண்டு என்னருகாக வருகின்றா...

"என்ன மிஸ் விடுதி சம்பந்தமான கடிதமா?" நான் ஆவலுடன் வினவுகிறேன்.

"சொறி ரஞ்சன்... விடுதி உமக்குக் கிடைக்கவில்லை. தோட்டத் தொழிலாளிக்கு வழங்கப்பட்டிருக்கிறது..."

நான் கொண்டிருந்த நம்பிக்கைகள் கற்பனைகள் ஆசைகள் அனைத்துமே சின்னா பின்னமாகத் தகர்ந்து சிதறுகின்றது...

அவமானத்தால் எனது தலை தாழ்கின்றது...

மௌனம் சாதிப்பதைத் தவிர எனக்கு மார்க்கமெதுவும் புரியவில்லை.

**ஜன 19-25, 2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக் குஞ்சுகள்

ஊர் உறவென்று விட்டுப்போய் ஒரு தசாப்த காலத்துக்கும் மேற்பட்டுவிட்டது! சொந்த பந்தங்களெல்லாம் வெளிநாடு போய்விட அரச உத்தியோகம் என்னை மட்டும் இந்நாட்டோடு கட்டிப்போட்டுவிட்டது. இடப்பெயர்வுகள்... நிதிப் பிரச்சினைகள் என்று வரும்போதெல்லாம் வெளிநாட்டில் தன் கணவன், இரு மகன்மார், ஒரு மகள் ஆகியோருடன் வசித்து வரும் எனது ஒரே தங்கை நிதி உதவிகள் செய்து அரசஉத்தியோகம் பார்ப்பதன் அவல நிலையிலிருந்து என்னை காத்தருள் செய்து வந்தாள்.

எவருமே எதிர்பாராத விதத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு விடியல் போல் வந்து தனது மெல்லிய ஒளிக்கற்றைகளை இத் தேசத்தின் மீது படரவிடவும் எம் மக்களின் மனத்தில் புத்துணர்வும் குதூகலமும் ஏக காலத்தில் மொட்டவிழ்த்தன.

கிடைக்கும் எந்தவொரு சிறிய சந்தர்ப்பத்தையும் பயன் படுத்திக்கொண்டு மலையளவில் உயர்ந்துவிட தமிழ்ச்சமுதாயத்தை விட்டால் இவ்வுலகில் எந்த ஒரு இனத்தால் தான் முடியும்?

உள்ளூர்வாசிகளின் நானாவித எத்தனங்கள் போலவே வெளிநாட்டிலுள்ள பலரும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கைவிட்டுப் போன தமது வீடு, வளவு நிலபுலம்களை விற்றுக் காசாக்கிவிட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

'அண்ணா... என்னுடைய வீட்டை நீங்கள் தான் விற்றுத் தர வேண்டும்' தங்கையின் தொலைபேசி வாயிலான வேண்டுகோள். தங்கை தன் பிள்ளைகளை எம்நாட்டுக் கலாசாரம் தவறாது வளர்த்து வந்தாள். மருமக்களில் எனக்கு அன்பும் பாசமும் இருந்தது. நம்பிக்கையும் இருந்தது.

''என்னப்பா! நானும் நீங்களும் ஒருக்கால் ஊர்போய் வீடுவிற்கிற விடயத்தை நேரிலேயே முடித்துவிட்டு வந்தால் என்ன?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் தூண்டுதல் காரணமாகவே ஒரு வார விடுமுறையில் எனது கிராமத்திற்கு செல்லத் திட்டமிட்டேன். அங்கு உறவினர் எவரும் அற்ற நிலையில் எனது பால்யகால நண்பனுக்கு எனது வருகையை அறிவித்தேன். அவன் சொந்த ஊரிலேயே தொடர்ந்து ஆசிரியத் தொழில் புரியக் கொடுத்து வைத்தவன். என் மீது நம்பிக்கையும் பாசமும் கொண்டவன். உடனேயே பதில் கடிதம் அனுப்பினான்.

தனது பிள்ளைகளின் உயர் படிப்புக்காரணமாக, தனது மனைவியின் நகருக்கு அருகாக வீடொன்று வாடகைக்கு எடுத்து, பிள்ளைகளுடன் அங்கு தங்கி இருப்பதாகவும் நான் வந்து நிற்கும் நாட்களில் அவளை வீட்டுக்கு அழைக்கலாம் என்றும் தெரிவித்தான்.

உடனே நானும் பதில் வரைந்தேன்......

'உனது மனைவிக்குச் சிரமம் கொடுக்கவோ குழந்தைகளின் படிப்பைக் குழப்பவோ வேண்டாம். நான் எனது மனைவியுடன் வருவதால் அவளே வீட்டில் சமையல் கருமங்களை செய்து கொள்வாள்.'

நான் பிறந்து வளர்ந்து கல்வி பயின்ற மண்ணில் எனது பள்ளிக்கால நண்பன் என்னையும் எனது மனைவியையும் தனது வீட்டில் வரவேற்று உபசரித்தான். எனது அந்நாட் செயற்பாடுகள்... குறும்புகள்... பற்றியெல்லாம் மனைவிக்குப் புட்டு வைத்தான்..

வீடும் காணியும் விலைபேசி முடிவெடுக்கச் சில நாட்கள் எடுக்குமாதலால் நண்பனை தொழிலுக்குச் செல்லும்படியும் 'லீவு' போட வேண்டாம் என்றும் பணித்திருந்தேன். அவனும் தொடர்ந்து பாடசாலை சென்றான்.

எனது கிராமம் எனது மனைவிக்குப் புதிது. நான் தொழில் பார்க்கும் இடங்களில் குடியிருந்த அரசாங்க விடுதிகளே அவளது 'புகுந்த வீடு'களாக இருந்து வந்துள்ளன. எனவே அவ்வூர்க் கோயில், குளம், வயல்வெளி என்று சில இடங்களைச் சென்று பார்த்த நேரம் தவிர்ந்த மீதிப் போதுகளில் வீட்டில் தங்கி 'தனிக் குடித்தனத்தின் சுவாரசியத்தை' நினைவு மீட்டல் செய்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று காலையில் எனது நண்பன் பாடசாலை சென்று விட்ட பின்னர் நான் கட்டிலில் சாய்ந்தபடி ஓய்வாக இருந்தேன்...

பிரதான வாயிலில் யாரோ அழைப்பது கேட்டு எழுந்து சென்றேன். எப்போதோ பார்த்த முகம். எனது நண்பனைத்தேடி வந்திருந்தான். பெயர் மட்டும் சொன்னால் நான் பழைய நட்புகளையும் நினைவு கூர்ந்துவிடுவேன்.

''ஓ... ராஜநாயகமா? என்னைத் தெரியுதா?'' நான் வினவினேன். அவன் சிறிது நேரம் சிந்தித்தான்.

''பழகின முகமெண்டு தெரியுது. நினைவுக்கு வரவில்லை.'' கவலைப்பட்டுக் கூறினான்.

''சரி சரி உள்ளே வாரும்.'' அழைத்துச் சென்று அமர வைத்தேன். மனைவியும் வந்து அமர்ந்து கொண்டாள். இப்போ விளக்கினேன்.

''நீர் என்னுடைய 'கிளாஸ் மேற்'. அது மட்டும்தான் எமது தொடர்பெண்டும் இல்லை... உம்முடைய அண்ணர் ஒருத்தர் எனது சகோதரி முறையான பெண் ஒருத்தியை விவாகம் செய்து கொண்டு வெளிநாடு போயிருக்கிறார்.''

நான் கூறும் வரை உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்த அவன் திடீரென்று எழும்பி உரிமையுடன் எனது முதுகில் அறையொன்று வைத்தான். ''மச்சான்... நீ கனகசிங்கமெல்லே...?''

''ஓம்... ஓம்...''

அவனது உற்சாகம் பிய்த்துக் கொண்டு கிளர்ந்தது... தனது குடும்ப விபரம் எல்லாம் கூறினான். தனக்கு மூன்று பெண் குழந்தைகள் இருப்பதாகத் தெரிவித்தான்.

''என்ன மூண்டு பொம்பிளைப் பிள்ளைகளோ...? எப்படி மச்சான் சீதனம் கொடுத்து சமாளிக்கப் போறாய்..?'' கவலையுடன் வினவினேன்.

அவனது முகம் சோர்ந்து துவண்டது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுதான் மச்சான் மூத்தவளுக்கு ஒரு வரன் சரி வந்திட்டுதெண்டால் பிறகு மற்ற பிள்ளைகள் விசயத்திலை மூத்த மருமகனும் சேர்ந்து முயற்சிகள் செய்வாரெண்டு பார்க்கிறன்...''

''அதுவும் சரிதான். அப்படியெண்டால் ஒரு காரியம் செய்வம். என்ரை கையில ஒரு உள்நாட்டு வரன் இருக்குது. நான் ஒரு வார்த்தை சொன்னால் சரி. அரச உத்தியோகம்... நல்ல குணசாலி...''

எனது மனைவி என்னை முறைத்துப் பார்ப்பது கடைக் கண் பார்வையில் தெரிந்தது. நான் எதைச் செய்ய முட்பட்டாலும் அதை அவள் 'இவருக்கு தேவையில்லாத சோலி' என்றே நினைப்பவள். இருப்பினும் அடுத்தவர் முன்பாக எனக்கு மாறாக வாய் திறக்காத பதிவிரதை!

நண்பன் சற்று யோசித்தான்... அந்த இடைநேரத்தில் எனது மனைவி எனக்கு சாடை காட்டி உள்ளே அழைத்தாள்.

''தேனீர் போடவா?'' வினவினாள். ''ஓம்...ஓம்..'' நான் ஆமோதிக்கும் போதே பிரதான வாயிற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. மனைவி தேனீர் தயாரிக்க சென்றதும் நான் முற்றத்தில் இறங்கி நடந்தேன்.

வாயிற் கதவின் வெளியே நின்ற இளைஞனை நோக்கி... ''தம்பி... நீர் அமரசிங்கத்தாற்ரை மகனெல்லே...?'' என்று நான் வினவவும் அவன் ஆமோதித்து தலையை ஆட்டினான். பின்னர் கூறினான்...

''அப்பா, வெளிநாட்டில் இருக்கிற அண்ணையோடை உங்கடை வீடு விற்கிற விசயமாகக் கதைத்தவர். அண்ணை வாங்கச் சம்மதம் தெரிவிச்சவர். காசும் உடனே அனுப்புறாராம். அப்பா இந்தப் பணத்தை அச்சவாரமாக உங்களிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னவர்.''

பத்தாயிரம் ரூபாய் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவனை அனுப்பி வைத்தேன்... உள்ளூர்வாசிகள் ஐந்து லட்சம் கேட்ட வீட்டை வெளிநாட்டுக்காரத் தம்பி 'டபில்' விலை கொடுத்து வாங்க முன்வந்துவிட்டான். எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனின் முகம் வாடியிருந்தது...

''ஏன் ராசநாயகம் நான் மாப்பிள்ளை தாறன் எண்டெல்லோ சொல்லுறன்... நீ ஏன் கவலைப்படுகிறாய்? வினவினேன். ''அதில்லை மச்சான்... மூத்தவளுக்கு அரச உத்தியோகம் பார்க்கிற பொடியன் ஒருத்தனைச் செய்து வைச்சனெண்டால்... அவர்கள் தங்களுடைய குடும்பத்தைக் கொண்டு நடத்துறதே இயலாத காரியமாகப் போய்விடும். அந்த இலட்சணத்திலை என்ரை இளைய பெட்டைகளுக்கு அவர்களால் எப்படி உதவி செய்ய முடியும்?''

அவன் கூறவும் எனக்கு வியப்பாக இருந்தது..

''அப்ப என்ன செய்ய வேணுமெண்டுறாய்?'' வினவினேன். சிறிது தயக்கத்துடன் கூறினான்...

''வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருத்தனைத்தான் என்ரை மூத்தவளுக்கு செய்து வைக்க விரும்புகிறேன்.''

எனக்கு ஆத்திரம் எல்லை மீறியது...

''என்ன விசர்க்கதை கதைக்கிறாய் மச்சான்.. வெளிநாட்டு பொடியளை நீ நம்புறாயா? அவர்கள் அங்க கேள்வி முறை எதுவும் இல்லாமல் என்ன கூத்தடிக்கிறான்கள் தெரியுமே? அவர்களையும் மாப்பிள்ளையாய் எடுக்கப்போறியே...?'' ஏறத்தாழ அதட்டினேன்.

என் மனைவி என்னை விநோதமாகப் பார்த்தாள்... நண்பன் கூறினான்...

'' எனக்கு அது பெரிய பிழையாய் தெரியேல்லை மச்சான்.. சீதனம் கொடுக்கிற பிரச்சினையிலிருந்து நான் தப்புகிறதிற்கும்... என்னுடைய குடும்ப நிதி நிலைவரத்தை சீர் திருத்துவதற்கும் இதைத்தவிர எனக்கு வேறு வழி தெரியேல்ல...''

எனக்கு கோபம் கோபமாய் வந்தது. ''உன்னுடைய இயலாமைக்கு ஒரு அப்பாவிப் பெண்ணை நீ விற்று விடப் பார்க்கிறாய்... வெளிநாட்டுக் கலாச்சாரத்திலை ஒரு இளைஞன் பல பெண்களை அனுபவிக்கும் சந்தர்ப்பம் இருக்குதூ...'' நான் விளக்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்பனின் முகம் சிவந்தது... அவனது ஆழ்மன வேக்காட்டை முகம் பிரதி செய்தது போலும்... நான் மசிந்து விடுபவனல்ல... அவனது பதிலுக்கு காத்திருந்தேன்.

''சேறு கண்ட இடத்திலை மிதிச்சு தண்ணி கண்ட இடத்திலை கழுவுகிற கலாச்சாரம் எங்கடை நாட்டிலை இல்லை எண்டு நினைக்கிறியோ?'' கொதிப்புடன் வினாவினான்.

எனக்கு கோபம் வந்தது...

''அப்ப உன்னுடைய மகளுக்கு வாய்க்கிற மாப்பிளை சேற்றிலை மிதிச்சவராய்த்தான் இருக்க வேணும் எண்டுறது தான் உன்னுடைய தீர்மானமோ?''

எனது மனைவியை இவ்வுரையாடல்கள் உசுப்பிவிட்டன போலும்.. இங்கிதம் காக்கும் பொருட்டு எழுந்து உள்ளே சென்றாள். நான் அவளைத் தொடர்ந்தேன்...

''என்னப்பா உங்கடை கதை.. எங்கடை மகளுக்கு வெளிநாட்டிலை இருக்கிற உங்கடை தங்கச்சியின்ரை மகனை மாப்பிள்ளையாக எதிர்பார்க்கிறியள்... உங்களுக்குச் சொந்தமான வீடு வளவை 'டபிள்' விலையிலை விற்கிறதுக்கு வெளிநாட்டுப் பொடி சம்பாதிச்ச காசை நம்புகிறியள்... உங்கடை நண்பன் தனது மகளை வெளிநாட்டுக்காரனுக்கு செய்து வைக்கிறதை மாத்திரம் எப்படித் தப்பு எண்டு கணக்குப் போடுகிறியள்...? அது மட்டுமில்லை. வெளிநாட்டில் இருக்கிற எமது இளைஞர்கள் கஷ்டப்பட்டு உழைக்கிறதாலை தான் மொத்தமாக எமது தமிழ்த்தாய்நாடும் தமிழ்ச் சமுதாயமும் தலை நிமிர்ந்து நிற்குது. உள் நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி எங்கும் மனிதர்கள் தான் இருக்கிறார்கள். தவறுகள் எங்கும் நடக்கலாம். வெளிநாட்டிலை இருக்கிற தமிழ் இளைஞர்கள் அனைவருமே எங்கடை குஞ்சுகள் எண்டு நீங்கள் நினைக்க பழக வேணும்...''

எனது மனைவி என்னைக் குத்திக்காட்டினாள். பாடசாலை முடிந்து நண்பன் வீடு வந்ததுமே ராசநாயகத்தைக் கண்டு ஆரவாரம் செய்து வரவேற்றத்துடன் எங்களை அறிமுகம் செய்துவைக்கவும் முயற்சித்தான். நாங்கள் ஏற்கனவே அறிமுகமானவர்கள், உறவினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறவும் ஆச்சரியமடைந்தான்...

‘‘நல்லதாய்ப் போச்சு மச்சான்... உறவுகள் இன்னும் நெருக்கமடையப் போகுது...’’ கூறியபடி சிரித்தான்.

‘‘என்ன மச்சான் சொல்லுகிறாய்?’’ புரியாமல் வினாவினேன்.

‘‘ராசநாயகத்தின் மூத்த மகளுக்கு வெளிநாட்டில் இருக்கிற என்னுடைய மூத்தமகனைத்தான் திருமணம் செய்யப்போறம்...!’’

**மே 11-17, 2003**

3702



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Uppuveli Public Library
0003702
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை

பட்டினமும் சூழலும் பிரதேச சபை

பொது நூலகம்

சூடாக்கரை / உப்புவெளி / சாம்பல்தீவு

வகுப்பெண் ............ வரவுப்பதிவெண் ............

இந்நூலை பதினான்குநாட்களுக்குள் திருப்பிக் கொடுப்பதற்கு தவறுமிடத்து ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பது சதம் குற்றப்பணம் அறவிடப்படும்.

මෙම පොත දවස් දාහතරක් ඇතුළත ආපසු භාරදිය යුතුය. නොමැතිනම් ශත පණහක් බැගින් එක් එක් දවස වෙනුවෙන් ගෙවීමට සිදුවේ.

05-12-2005 (140)



## அன்பு நெஞ்சங்களே !

காட்டு மிராண்டித்தனங்கள் வளர்ந்து கொண்டுபோகின்றன..... கலாச்சாரம், மனிதநேயம் பற்றி பெருமைப்பட்டு பேசும்படி உலகில் சம்பவங்கள் நடப்பது அரிதாக உள்ளது.....
இயற்கையழிவுகள் முன்னெப்போதும் இல்லா -தபடி பல்கிப் பெருகி பயமுறுத்துகின்றன.
இறைபக்திக்கு சோதனைகள் ஏற்படுகின்றன...... நல்லவர்களை காசம், புற்று போன்ற கொடிய நோய்கள் வருத்துகின்றன.......
அட்டூழியத்தை கருமமாகக்கொண்டவன் அட்டகாசமாக வாழ்கின்றான்!
நீருக்கடியால் நெருப்பைக் கொண்டு செல்ல நேர்ந்தது போல இந்த மானுட வாழ்க்கையை எடுத்துச் செல்லவேண்டி உள்ளது........
எத்தனை விதமான மனிதர்களை சந்திக்கின்றோம்........!
புலம் பெயர்ந்த எம் இனத்தின் புடம்போட்ட புதிய தலைமுறைகள்.........
இடம்பெயர்ந்த எம் மக்களின் அவலப்பட்ட வழித்தோன்றல்கள்..........
''சிலோனிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு வந்து பதினேழு வருடங்களுக்கு மேற்பட்ட நிலையில் நாங்கள் முற்று முழுதாக இந்த கலாச்சாரத்துக்கே ஆட்பட்டு விட்டோம் ..... எங்கடை பிள்ளைகள் நாங்கள் காட்டும் வழியில் செல்லத் தயாராக இல்லை. எங்களுக்கும் அது தவறாகத் தெரியவில்லை. அவர்கள் வாழ்வு பற்றி அவர்களே முடிவு எடுப்பதில் என்ன தப்பு இருக்க முடியும்....?

-புலம் பெயர்ந்த பெற்றோர்-

எங்கடை பெடியளும் தங்கள் வாழ்க்கைப் பாதை பற்றித் தாங்களே தான் முடிவெடுக்கின்றார்கள்..!
நாங்கள் என்னவென்றால் அவர்களை பாராட்டுவதற்கு பதிலாக ''அவன் சொல்லுப் பேச்சு கேளாதவன் ....'' ''தான்தோன்றி'', என்று எங்களை நேசிக்கும் எங்கள் புதிய தலை முறையினரை மட்டம் தட்டி விடுகின்றோம்..!

தலைமுறைகள் தொடரட்டும்.....
விதி முறைகளை மறக்காமல்..!

நன்றி

திருமலை வீ.என்.சந்திரகாந்தி

தி/ ஜெயகாந்தி கலை கலாச்சார
விளையாட்டு மேம்பாட்டு கழகம்
572 / ஏ, ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை
ஸ்ரீலங்கா.
026 - 2224706

ISBN 955 - 8925 - 00 - 4
9 789558 925003 90000>

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org